விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 25 திங்கட்கிழமை (10.09.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 266

ராம்கோ RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# கிழக்கின் ஆட்சி யார்?

## தீர்மானிக்கும் சக்தியாக முஸ்லிம் காங்கிரஸ்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண ஆட்சியை தீர்மானிக்கும் சக்தியாக முஸ்லிம் காங்கிரஸ் மாறியுள்ளது. அக் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சிப் பீடம் ஏற ஆதரவு கொடுக்குமா? அல்லது ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு ஆதரவு கொடுக்குமா என்பதே தற்போதைய அரசியல் எதிர்பார்ப்பாக மாறியுள்ளது.

(02ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கிலும் நாமே ஆட்சி!

### ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

2005ஆம் ஆண்டு முதல் தமது தலைமையில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு முகம் கொடுத்த 10ஆவது தேர்தலான மாகாண சபைத் தேர்தலிலும் வெற்றிப் பெற்றுள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் கருத்துக் கணிப்பாக இடம் பெற்ற மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தலில் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் கருத்துக்கள் தொடர்பில்

(19ஆம் பக்கம் பார்க்க)

## வலுவான நகர்வுடன் நாமே ஆட்சி!


### சம்பந்தன் நம்பிக்கை

(திருகோணமலை)

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடிபுகள் தொடர்பிலும் ஆட்சியமைப்பது குறித்தும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருடன் பேசுவதற்கு முயற்சித்துக் கொண்டிருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன்பேச்சுநடத்தியுள்ளோம். அவர் எமக்கு ஆதரவு வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார் என இரா.சம்பந்தன் கூறியுள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)



## மூன்-மகிந்த சந்திக்க வாய்ப்பு

(நியூயோர்க்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் பான் கீ மூனைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மாத இறுதியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் நோக்கில் நியூயோர்க்கிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது பான் கீ மூனைச் சந்தித்து பேசுவார்

(20ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு ஆளுநருக்கு கடிதம் சமர்ப்பிப்பு!

(கொழும்பு)

புதிதாக தெரிவு செய்யப்பட்ட கிழக்கு மாகாண சபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து ஆட்சி அமைப்பதற்கு உரிமை கோரும் கடிதத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று திங்கட்கிழமை கிழக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்து நேரில் கையளிக்கவிருக்கின்றது.

இதனை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு 11 ஆசனங்களும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு 7 ஆசனங்களும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 4 ஆசனங்களும் கிடைத்தன. இந்த நிலையில், கிழக்கு மாகாண சபையில் ஆட்சி அமைக்க உரிமை கோரி கடிதம் ஒன்றை இலங்கை தமிழரசுக் கட்சித் தலைவர் இரா.சம்பந்தனும் பொதுச்

(19ஆம் பக்கம் பார்க்க)

## கோவில் கிணற்றிலிருந்து எலும்புக்கூடுகள் மீட்பு!

(ஊர்காவற்றுறை)

• ஊர்காவற்றுறை சுருவில் பகுதியில் உள்ள கோயில் கிணற்றில் நேற்று மனித எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆலயத்தின் நிர்வாகத்தினர் கிணற்றினை சுத்திகரிக்க முற்பட்டபோதே இவ் எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

கோயிலுக்கு சொந்தமான கிணறு கடந்த 20 வருடமாக பராமரிப்பு இன்றி காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஆண் ஒருவரின் எலும்புக்கூடும் பெண் ஒருவரின் எலும்புக் கூடுமாக அவை

(19ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்தவின் கோரிக்கை இந்தியாவால் நிராகரிப்பு!

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ புத்தரின் எலும்புகள் அடங்கிய கபிலவஸ்து புனித சின்னத்தை அலரி மாளிகையில் வைத்து வழிபடுவதற்கு அனுமதிக்குமாறு விடுத்த வேண்டுகோளை, இந்தியா நிராகரித்துள்ளது.

அலரிமாளிகையில், கபிலவஸ்து புனித சின்னத்தை வழிபாட்டுக்காக வைப்பதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மூலம் இந்தியாவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

கபிலவஸ்து புனித சினத்திற்கான வரவேற்பையடுத்து இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா அளித்த இராப்போசன விருந்தின் போது, வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் இந்த வேண்டுகோளை முன்வைத்திருந்தார்.

இந்தியத் தூதுவரிடம் மூன்று முக்கிய கோரிக்கைகளை முன்வைக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அமைச்சர் பீரிஸிடம் அறிவுறுத்தியிருந்தார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## இளம் குடும்பஸ்தர் வெட்டிப் படுகொலை

## திருநெல்வேலியில் நேற்று நடந்த பயங்கரம்

(யாழ்ப்பாணம்)

நேற்று மாலை வேளை ஆலய முன்றலுக்கு முன்பாக வைத்து இளம் குடும்பஸ்தர் ஒருவர் கும்பல் ஒன்றினால் வெட்டி படுகொலை செய்யப்பட்டார்.

இப் பயங்கர சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் திருநெல்வேலி சிவன் அம்மன் கோவில் பகுதியில் அம்மன் கோவில் தேர் முட்டிக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஒருபிள்ளையின் [illegible]யான கட்டிடத் தொழிலாளி பிரபா (வயது 28) என்பவரே படுகொலை செய்யப்பட்டவராவார். இவருடன் சென்ற திருநெல்வேலி பதிவாளர் ஒழுங்கையைச் சேர்ந்த ஜெசிந்தன் (வயது 27), திருநெல்வேலி மாரியம்மன் வீதியைச் சேர்ந்த விமலராசா (வயது 27) ஆகிய இருவரும் வெட்டுக்காயங்களுக்கு இலக்காகினர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, கொல்லப்பட்ட பிரபா நேற்று வீட்டிலிருந்தவேளை அங்குவந்த அவரின் நண்பர்கள்

(19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. பிரதிநிதிகள் குழு சிவில் சமூகத்தை சந்திக்கத் தீர்மானம்!

ஐக்கிய நாடுகள் பிரதிநிதிகள் குழு சிவில் சமூகப் பிரதிநிதிகளை சந்திக்கத் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 14ம் திகதி முதல் 20ம் திகதி வரையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் பிரதிநிதிகள் இலங்கையில் தங்கியிருப்பார்கள் என ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக் கிளைப் பேச்சாளர் சின்டியா வெலிக்கோ தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், இந்தக் குழுவினரின் நிகழ்ச்சி நிரல் குறித்த தகவல்களை வெளியிட முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கியநாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆசிய, பசுபிக், மத்திய கிழக்கு, வட ஆபிரிக்க விவகாரங்களுக்குப் பொறுப்பான ஹானி மெக்காலி தலைமையிலான குழுவினரே இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

ஒஸ்கார் சொலேரா மற்றும் அஸ்வா பெட்ரோ ஆகியோரும் இந்தப் பிரதிநிதிகள் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

தேசிய சமாதானப் பேரவை உள்ளிட்ட பல்வேறு சிவில் அமைப்புக்களுடன் ஐக்கிய நாடுகள் அமைப்புப் பிரதிநிதிகள் சந்திப்பு நடத்த உள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (ந-11)


செல்லா சினிமா- யாழ்ப்பாணம்
இலங்கை இந்திய ஒரேதின வெளியீடு
ஜீவா. பூஜாஹெக்டே, நரேன் நடித்த





10.30, 2.30, 6.30, 9.30 D.T.S
(C-941)


## 12 இலட்சம் பேர் வாக்களிக்கவில்லை

நடந்து முடிந்த கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாணசபைத் தேர்தல்களின் போது பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் அடிப்படையில் சுமார் 12 இலட்சம் பேர் வாக்களிக்கவில்லை என தெரிய வருகிறது.

சுமார் 21 இலட்சத்து 38 ஆயிரம் பேர் வாக்களித்துள்ளனர். அவற்றில் சுமார் ஒரு இலட்சத்து 26 ஆயிரம் வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. தேர்தல் முடிவு களின்படி பதிவு செய்யப்பட்டுள்ள வாக்குகளின் எண்ணிக்கை 3336417 ஆகும். அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் 2138739, இவற்றில் செல்லுபடியான வாக்குகள் 2012312 என்பது குறிப்பிடத்தக்கது. (ந-11)


A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு

IT Diploma Courses
Diploma in PC Application
Diploma in Microsoft Office
Adv. Dip. in Hardware & Networking
Dip. in Pre-Press Desktop Publishing
Dip.in Web Designing & Development
Dip. in Computerized Accounting
Tally Financial Accounting Training
Dip in Video Production & Multimedia
Diploma in Multimedia & Animation
2D & 3D Animation AutoCAD

75% OFF





அனைவருக்கும் 75% கட்டணக்கழிவு
புதிய பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு II - 10/09/2012
பிரிவு III - 15/09/2012
பிரிவு IV - 17/09/2012

75% நேரடிக் கட்டணச்சலுகையைப் பெற்று குறைந்த கட்டணத்தில் முழுமையானதும் தரமானதுமான கணினிக்கல்வியை இலங்கை அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட DMI COMPUTER EDUCATION இல் தொடருங்கள்.

DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113. கஸ்தூரியார் வீதி, Tel.: 021-222 4403
நெல்லியடி M.M.V. வீதி, Tel. : 021-226 2470
சாவகச்சேரி No.174, Tel. : 021-227 0243
சுன்னாகம் Tel. : 021-224 1970


# கூடுதலான அதிகாரங்கள் ம.உ. ஆணைக்குழுவிற்கு தேவை!

## ஜனாதிபதியிடம் கோரிக்கை

கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென மனித உரிமை ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

மனித உரிமை ஆணைக்குழுவிற்கான அதிகாரங்களை அதிகரிக்கும் வகையில் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமென ஆணைக்குழு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது. அதிகாரங்களை விஸ்தரிப்பதன் மூலமே காத்திரமான சேவையாற்ற முடியும் என ஆணைக்குழுவின் தலைவர் பிரியந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகளை மீறிச் செயற்படும் உயர் அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கக் கூடிய வகையில் சட்ட திருத்தம் செய்யப்படவேண்டுமென வலியுறுத்தியுள்ளார். 1996ம் ஆண்டு இலங்கை மனித உரிமை ஆணைக்குழு நிறுவப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-11)

# சட்டவிரோதமாக அவுஸ். பயணம் 95 இலங்கையர்கள் கைது

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முயற்சித்த 97 பேரை தென் இந்தியாவின் கர்நாடகாமாநிலப்பொலிஸார்கைதுசெய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இலங்கையைச் சேர்ந்த 95 பேர் அடங்குவதாக ஹிந்து பத்திரிகை செய்தி வெளிட்டுள்ளது.

இவர்களில் 22 பெண்களும் 6 சிறுவர்களும் அடங்குகின்றனர்.

குறித்த குழுவினரை அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பிவைப்பதாகக் கூறி பணம் பெற்றுக் கொண்ட 13 பேரையும் கர்நாடக மாநிலப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## நாணயத் தயாரிப்பு ஜப்பானிடம் ஒப்படைப்பு!

இலங்கையின் நாணய பெறுமதியொன்றை பதிப்பு செய்யும் உரிமை ஜப்பானுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி ஆயிரம் ரூபாய் நாணய குற்றிகளை தயாரிக்கும் பணி ஜப்பானுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஜப்பான் - இலங்கை நாடுகளுக்கு இடையிலான 60 வருட இராஜதந்திர நட்புறவை நினைவு கூரும் முகமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

ஜப்பான் அரசாங்கத்தின் ஆதரவுடன் நிர்மாணிக்கப்பட்ட மின்சார நிலையமொன்றின் உருவப்படமே குறித்த ஆயிரம் ரூபாய் நாணய குற்றியில் பொறிக்கப்படவுள்ளது.

ஏற்கெனவே கடந்த 2007ம் ஆண்டும் நியூசிலாந்து நாட்டின் நாணய பெறுமதிகளை அச்சிடும் நடவடிக்கை ஜப்பானுக்கு வழங்கப்பட்டிருந்தது. (ந-11)

## ஐ.தே.க குறித்து எஸ்.பி. ஆதங்கம்!

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அடைந்த தோல்வியை, ரணில் விக்ரமசிங்க அடைந்த தோல்வியாகக் கருத முடியாது என உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநயக்க தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி நான்காம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் கருஜயசூரிய போன்றோரும் இந்தத் தோல்வியை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இந்தத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி. ஆகியவற்றின் வாக்காளர் அடிப்படை வீழ்ச்சியடைந்துள்ளது. சப் ரகமுவ மாகாணத்தில் ஜே.வி.பி. படுதோல்வி அடைந்துள் ளது என உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸா நாய க்க தெரிவித் துள்ளார். (ந-11)


கன்ரர் விற்பனைக்கு

NPGK 3384 இலக்கத்தையுடைய Nishan ரக (ஜப்பான்) கன்ரரும் NPPP0156 இலக்கத்தையுடைய யூயின் ரக (அலுமினிய வோடி) உடைய கன்ரர் உடன் விற்பனைக்கு (லீசிங் வசதி உண்டு)

தொடர்புகளுக்கு:-
0726034194, 0775464452
(389)


## கிழக்கின் ஆட்சி...

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை பலம் கிடைக்காதமையே இந்நிலைக்குக் காரணமாகும்.

நேற்றுமுன்தினம் நடந்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 14 ஆசனங்களும்(2 போனஸ் உட்பட),அதன் கூட்டணிக் கட்சியான தேசிய சுதந்திர முன்னணிக்கு 1 ஆசனமும் கிடைத்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 11 ஆசனங்களுடன் இரண்டாவது பெரும் கட்சியாக கிழக்கில் உருவெடுத்துள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 7 ஆசனங்களுடன் மூன்றாவது இடத்தையும், ஐ.தே.க ஆசனங்களுடன் நான்காவது இடத்தையும் பிடித்துள்ளன.

கிழக்கு மாகாண சபையில் ஆட்சியமைப்பதற்கு,19 ஆசனங்கள் தேவைப்படுகின்ற நிலையில் ஆளும் கட்சி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து ஆட்சியமைக்குமா? அல்லது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐ.தே. க. வின் ஆதரவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஆளும் கட்சி சப ரகமுவ மற்றும் வட மத்திய மாகாணங்களில் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-11)

## மரண அறிவித்தல்

### காசிலிங்கம் கதிர்வேல்



கொட்டடியைப் பிறப்பிடமாகவும், ஐயனார் கோவிலடி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட காசிலிங்கம் கதிர்வேல் அவர்கள் 09.09.2012 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 12.15 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காசிலிங்கம்-அன்னலஷ்மி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை-செல்லம்மா தம்பதியினரின் அருமை மருமகனும், ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும், சசிதரன் (கணக்காளர் - லண்டன்), விஜிதரன் (மெய்வல்லுனர் பயிற்றுனர், கச்சேரி, வவுனியா), ஜெகதரன் (பொறியியலாளர் - லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஹேமலதா (நிர்வாக உத்தியோகத்தர் - லண்டன்), சிவகௌரி (ஆசிரியை, கோவில் வயல் அ.த.க.பாடசாலை), மனோநிதி (கணக்காளர் - லண்டன்) ஆகியோரின் அருமை மாமனாரும், தருணின் பாசமிகு பேரனும், தையல்நாயகி (திருகோணமலை), அருள்வேல் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கார்த்திகேசு, புவனேஸ்வரி (லண்டன்), மயில்வாகனம் (கனடா), மகாலிங்கம் (வவுனியா), லோகநாதன் (ஒப்பு நோக்குனர் - வலம்புரி), காலஞ்சென்றவர்களான கனகலிங்கம், கணேசலிங்கம் (செம்பருத்தி - மலேஷியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், லில்லி திரேஸ் (கனடா), தனபாக்கியலஷ்மி (வவுனியா), சிவமலர், கௌரி (ஆசிரியை, யா/நாவாந்துறை றோ.க. வித்தியாலயம்) ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை 11.09.2012 பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக யாழ் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத் தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.


67/21, பிஸ்கால் வீதி,
ஐயனார் கோயிலடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தகவல்: மனைவி, பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி தனபாலசிங்கம்

(பிராந்திய முகாமையாளர், வடக்கு மற்றும் கிழக்கு Commercial Credit PLC)



கரவெட்டி, விக்னேஸ்வரக் கல்லூரி வீதியைச் சேர்ந்த சின்னத்தம்பி தனபாலசிங்கம் நேற்று 09.09.2012 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - மாணிக்கம் தம்பதியரின் அன்புமகனும், கமலாவதியின் அன்புக் கணவரும், தீப்தகுமார் (UK), ராஜேஸ்குமார் (வல்வெட்டித்துறை நகரசபை), லலித்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலேந்திரன், பாலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும், உமையாள், சுமங்கலி ஆகியோரின் அன்பு மாமனாரும் அவந்தி, ஆரணா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத் தரப்படும்.

விக்னேஸ்வரக் கல்லூரி வீதி,
கரவெட்டி.

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## முன்னுதாரணம்

சந்திரகுப்தர் என்றொரு ஒரு ராஜா இருந்தார்.

அவரிடம் தலைமை அமைச்சராக இருந்தவர்களுள் ஒருவர் தான் சாணக்கியர்.

அவர் ஒரு குடிசையில் வாழ்ந்து வந்தார்.

அந்த ஊரிலே இருக்கின்ற ஏழைகள் எல்லோரும் குளிராலே கஷ்டப்படுகிறார்கள் என்று அந்த ராஜா கேள்விப்பட்டார்.

உடனே சீடர்களிடம் நிறைய கம்பளிப் போர்வைகளை வாங்கி சாணக்கியரின் குடிசைக்கு அனுப்பி வைத்தார். எல்லோருக்கும் விநியோகம் செய்யுமாறு...

அதனால் அந்தப் போர்வைகள் அனைத்தும் இப்போது சாணக்கியரின் குடிசைக்குள்ளே ஒரு பக்கமாக குவிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் ஏழைகளின் கைகளுக்குப் போய்ச் சேரவில்லை.

இந்தச் சமயம் பார்த்து அந்த ஊரிலே இருந்த சில திருடர்கள் கம்பளிப் போர்வைகள் அனைத்தையும் திருடுவதற்கு ஆயத்தம் செய்தார்கள்.

அன்றிரவு எல்லோரும் தூங்கிய பின்னர் அப்படியே அனைத்து கம்பளித் துணிகளையும் எடுத்துக்கொண்டு வேறு ஊருக்குச் சென்று விற்றுப் பிழைக்கலாம் என்று நினைத்து திட்டம் செய்தார்கள்.

அந்தத் திட்டத்தின் பிரகாரமே நடு இராத்திரியிலே சாணக்கியரின் குடிசையினுள் நுழைந்தார்கள்.

ஒரு பக்கமாக கம்பளித் துணிகள் அனைத்தும் குவிக்கப்பட்டு இருந்தது. மறுபக்கம் சாணக்கியரும் அவரது தாயாரும் கிழிந்து போன ஒரு பழைய கம்பளித்துணியி னாலே இருவரும் போர்த்திக் கொண்டு தூங்கிக்கொண்டிருந் தார்கள்.

அவர்கள் போர்த்தியிருந்த கம்பளித்துணியின் அனைத்து இடங்களிலும் ஒரே பொத்தல் காணப்பட்டது. அதனாலே குளிரால் அவர்களின் உடம்பு நடுங்கிக் கொண்டிருந்தது.

திருடர்கள் இதைப் பார்த்ததும் ஆச்சரியப்பட்டார்கள்.

“என்ன இது...ஒரு பக்கம் இவ்வளவு புதுக்கம்பளிகள் குவிக்கப்பட்டுள்ளது. அவற்றையெல்லாம் விட்டுவிட்டு கிழிந்துபோன ஒரு கந்தல் கம்பளியைப் போர்த்திக் கொண்டு கஷ்டப்படுகிறார்களே!” என்று ஆச்சரியப்பட்டார்கள்.

உடனே அந்தத் திருடர்கள் வந்த காரியத்தையும் விட்டு விட்டு... சாணக்கியரை எழுப்பினார்கள்.

“ஐயா!... சற்று எழுந்து கொள்ளுங்கள்” என்றார்கள்.

அவரும் உடனே எழுந்து உட்கார்ந்து திருடர்களைப் பார்த்தார். ஒன்றுமே புரியவில்லை.

“ஐயா... நாங்கள் எல்லோரும் திருடர்கள்... நாங்கள் கம்பளித் திருடுவதற்காகத்தான் இங்கே வந்தோம். ஆனால், உங்களின் நிலையைப் பார்த்ததும் ஒரு சந்தேகம்... அதை கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்பதற்காகத்தான் உங்களை எழுப்பினோம்” என்றார்கள்.

“என்ன சந்தேகம்?” என்று சாணக்கியர் கேட்டார்.

உடனே அவர்கள்; “உங்கள் குடிசைக்குள்ளே ஒரு பக்கம் நல்ல கம்பளிகள் குவிக்கப்பட்டிருக்கிறது. அதைப் பயன்படுத்தாமல் ஓட்டைக் கம்பளியாலே உடம்பை மூடிக் கொண்டு தூங்கிக் கொண்டு இருக்கிறீர்கள்?” என்று வினவினார்கள்.

“அந்தக் கம்பளியை நான் எடுத்தேனாகில்,... நானும் உங்களை மாதிரித்தானே– இருப்பேன்” என்றார் சாணக்கியர்.

இவர்களுக்கோ எதுவுமே புரியவில்லை. சாணக்கியர் விபரமாகச் சொன்னார்;

தற்போது நான் வைத்துள்ள கிழிந்துபோன கம்பளியைப் போன்ற அதே மாதிரியான கம்பளிகூட இல்லாத ஏழை மக்களுக்கு கொடுப்பதற்காகத்தான் ராஜா குவிக்கப்பட்டுள்ள கம்பளிகளை அனுப்பி வைத்துள்ளார்.

அந்த ஏழைகள்தான் இதற்குச் சொந்தக்காரர்கள். அதையெடுத்து நான் போர்த்திக் கொண்டால் நானும் ஒரு திருடனாகத்தான் மாறவேண்டும். அதனால் அதை நான் எடுக்கமாட்டேன்” என்றார்.

இதைக் கேட்ட திருடர்களுக்கு மனதினுள் முள்தைத்த மாதிரி ஒரு உணர்வு வெளிப்பட்டது.

“இனி திருடவே மாட்டோம்” என்று சொல்லி... இங்கு வந்ததற்காக மன்னிப்புக் கேட்டுவிட்டு தமது பயணத்தை வந்த வழி பார்த்து திருப்பிக் கொண்டார்கள்.

உயர்ந்த பதவியிலே இருப்பவர்களுடைய முன் உதாரணங்கள்தான் அடிமட்டத்திலே உள்ளவர்களின் மனதைத் தூய்மையாக்கும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ்.தனியார் பே.நி.அமைந்துள்ள இடத்தில் குளம் அமைக்கப்படும்

## யாழ்.மாநகர முதல்வர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நகர்ப்பகுதியில் உள்ள தனியார் பேருந்து தரிப்பிடம் அமைந்துள்ள பகுதியில் முன்பு குளம் ஒன்று இருந்ததாகவும் அந்தக் குளம் நிரவப்பட்டுள்ளதால் மழை காலங்களில் நீரோட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் நகரில் மழைநீர் தேங்கி நிற்பதோடு வீதிப் போக்குவரத்து நெரிசலும் ஏற்படுகின்றது.

இதனை நிவர்த்தி செய்யும் வகையில் குறித்த தனியார் பேருந்து தரிப்பிடத்தை வேறு இடத்திற்கு மாற்றுவதோடு மீண்டும் அதே இடத்தில் குளம் ஒன்றினை அமைக்க திட்டமிட்டுள்ளதாக யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

அத்தோடு யாழ்.நகர் பகுதியிலுள்ள ஏனைய குளங்களையும் எதிர் வரும் நவம்பர் மாதத்திற்கு முன்னர் புனரமைக்க திட்டமிட்டுள்ளோம்.

இதுதவிர நீண்ட தூரத்திலிருந்து வரும் தனியார் பேருந்துகள் தரித்து நிற்பதற்கான தரிப்பிடம் ஒன்றினை முனீஸ்வரன் வீதியில் புல்லுக்குளத்திற்கு அருகாமையில் அமைத்து வருகின்றோம்.

யாழ்.நகரத்தின் அழகினை பேணும் வகையில் வீதிப்போக்குவரத்து நெருக்கடிகள் ஏற்படாத வகையில் இந்த திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

இதேவேளை, யாழ். நகர்ப்பகுதியிலுள்ள பல பிரதான வீதிகள் காப்பெற் இடப்பட்டு புனரமைப்பு செய்யப்பட்டு வருவதோடு உள்ளூர் வீதிகளும் மாநகர சபையின் நிதியுதவியுடன் புனரமைப்பு செய்யப்பட்டு வருகிறது.

மேலும் வீதி அகலிப்பு பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதனால் யாழ்.நகர்ப்பகுதியில் வாகன நெரிசல் ஏற்படுகின்றது. (அ-6)

# புகை கக்கும் வாகனங்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும்

## யாழ்.பிரதிப்பொலிஸ்மா அதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழிலுள்ள வீதிகளில் அதிக புகை கக்கிக் கொண்டு போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்கள் மீது இனி சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.மாவட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். சனநெரிசல்கூடிய இடங்களில் ஓடத்தகுதியில்லாத காரணங்களினால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு ஆளாகின்றனர்.

இதைவிட அவ்வாகனங்கள் வெளியேற்றும் அதிக புகை காரணமாக சூழல் மாசடைவதோடு மக்களும் சுவாச நோய்களுக்கு ஆளாக்கப்படுகின்றனர்.

ஏனைய இடங்களினைப்போலல்லாது யாழில் வீதியில் ஓடத்தகுதியில்லாத வாகனங்கள் அதிகமாகவே உள்ளன. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் முகமாக யாழில் உள்ள அனைத்து வாகனங்களும் புகைப்பரிசோதனை செய்யப்பட்ட சான்றிதழ்களினை வைத்திருக்கவேண்டும் என்றார் அவர். (அ-4)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 80 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 80 | 65 |
| பச்சைமிளகாய் | 40 | 60 | 60 | 70 |
| தக்காளி | 60 | 60 | 40 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 45 | 40 | 40 | 35 |
| கோவா | 60 | 60 | 60 | 60 |
| கரட் | 100 | 100 | 80 | 120 |
| பூசணி | 40 | 30 | 30 | 40 |
| புடோல் | 35 | 40 | 35 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 60 | 70 |
| பெரிய வெங்காயம் | 65 | 60 | 60 | 70 |
| பாகற்காய் | 50 | 60 | 70 | 60 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | -- | -- |
| பயற்றங்காய் | 65 | 40 | 50 | 50 |
| லீக்ஸ் | 80 | 100 | 100 | 120 |
| பீற்றூட் | 50 | 40 | 40 | 60 |
| கறிமிளகாய் | 90 | 60 | 60 | 80 |
| முருங்கைக்காய் | 10 | 30 | 70 | 30 |
| போஞ்சி | 70 | 80 | 80 | 100 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 40 | -- |
| கீரை – 1 பிடி | 10 | 10 | 10 | 20 |
| தேசிக்காய் | 200 | 180 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 25-30 | 30 | 25 | 25-27 |

# இராசி பலன்

*10.09.2012*
*(ஆவணி 25, திங்கட்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு*
*நவமி முற்பகல் 8.09 மணிவரை*
*திருவாதிரை பின்னிரவு 1.02 மணிவரை*
*இராகுகாலம் 7.33-9.03 மணிவரை*
*சுபநேரம் 12.03-1.33 மணிவரை*
*சித்தாமிர்தம்.*

**மேடம்** வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், உடன்பிறப்புக்கள் உதவி செய்ய முன்வருவர், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும்.

**இடபம்** புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு,வருமானம் திருப்தி தரும், சுப செய்திகள் வந்து சேரும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மிதுனம்** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்லபடியாக நடைபெறலாம், போசன சுகமுண்டு.

**கடகம்** பயணத்தால் பலன் கிடைக்கும் நாள், வெளியூர்த் தொடர்புகள் விரும்பும் விதத்தில் அமையும், அலைச்சல்களால் மனச்சோர்வு ஏற்படலாம், விலையுயர்ந்த பொருட்களை கவனமாக கையாள்வது நல்லது.

**சிங்கம்** தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சியை வழங்கும், குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், பொருளாதார நிலை உயரும்.

**கன்னி** திறமைகள் வெளிப்படும் நாள், நிலையான வருமானத்திற்கு வழிவகை செய்து கொள்வீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை ஒவ்வொன்றாக செய்து முடிப்பீர்கள், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள்.

**துலாம்** ஆன்றோர் சந்திப்புண்டு, புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், தடைகளைத் தகர்தெறிந்து தன்னிறைவு காணும் நாள்,எதிர்பாராத சில சம்பவங்கள் நடைபெறலாம், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**விருச்சிகம்** குடும்பத்தில் சில கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், போசன சுகமுண்டு, குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, கௌரவக் குறைவான நாள்.

**தனுசு** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், தொலைபேசி மூலம் எதிர்பார்த்த தகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்** நாவன்மையால் நல்ல பெயரெடுக்கும் நாள், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கும்பம்** பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு, புதிய திட்டங்கள் பற்றி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் தோன்றும்.

**மீனம்** தாய்வழி உறவினர்களால் எதிர்பாராத உதவிகள் கிடைக்கலாம், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பேச்சில் கனிவு பிறக்கும், வாகன சுகமுண்டு, சுப செய்திகள் வந்து சேரும் நாள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காமாட்சி மருத்துவமனை கிளை யாழ்ப்பாணத்திலும்



தமிழ்நாட்டில் பிரபலமாகச் செயற்படும் டாக்டர் காமாட்சி மருத்துவமனை சென்னை அடையார் காமணி, மீனம்பாக்கம் மண்ணடியிலும், நெய்வேலி சென்னை எல்.அன்ட்டி ஆகிய இடங்களில் மருத்துவ நிலையங்களை நிறுவியுள்ளது.

இந்த மருத்துவமனையின் அடுத்த முயற்சியாக கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் மருத்துவ நிலையங்கள் திறப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதற்கான முதல் முயற்சியாக தமிழ்நாட்டில் இருக்கும் இலங்கை துணைத்தூதரகத்தின் துணைத்தூதுவர் ராஜகருணாவைச் சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

இம் மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் டாக்டர் டி.ஜி.கோவிந்தராஜன் கருத்துக் கூறுகையில், எங்கள் மருத்துவமனையில் இதயம் சம்பந்தப்பட்ட நோய்கள், புற்றுநோய் , எலும்பு, தலை, மூளை, பக்கவாத நோய், நீரிழிவு, குழந்தைப் பேறின்மை ஆகியவற்றுக்கு சிறப்பான முறையில் சிறந்த மருத்துவர்களால் சிகிச்சையளிக்கப்படுகிறது.

மருத்துவமனையில் 120 மருத்துவர்களும்,300 தாதிமாரும் பணிபுரிகின்றனர்.

இம் மருத்துவமனையில் பணியாற்றும் மருத்துவர்களும் உலகில் அனைத்து நாட்டு மருத்துவமனைகளுக்கும் சேவை மருத்துவ உதவிகள் செய்கின்றனர்.

அதை நினைவில் கொண்டே எங்களது அண்டை நாடான இலங்கையில் எங்களது கிளையை நிறுவ முயற்சிகள் மேற்கொண்டுள்ளோம் என்று குறிப்பிட்டார்.

இம் மருத்துவமனையின் இலங்கை கிளைகளுக்கு மணவை அசோகன் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இம்மருத்துவமனையின் விபரங்களை www.drkmh.com எனும் இணைய முகவரியின் மூலம் அறியலாம்.

# 2012 ஓகஸ்ட் பணவீக்கம் வீழ்ச்சி

தொகைமதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களத்தினால் கணிக்கப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் (2006/07=100) அளவிடப்பட்டவாறு, பணவீக்கம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் முன்னைய மாதத்தின் 9.8 சதவீதத்திலிருந்து 2012 ஓகஸ்டில் 9.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு உணவு வகையின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சிகளே முக்கிய காரணமாகும்.

எனினும், ஆண்டுச் சராசரிப் பணவீக்க வீதம் 2012 யூலையின் 6.0 சதவீதத்திலிருந்து 2012 ஓகஸ்டில் 6.3 சதவீதத்திற்கு உயர்வடைந்தது.

அதேவேளை, மையப் பணவீக்கம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2012 யூலையின் 6.0 சதவீதத்திலிருந்து 2012 ஓகஸ்டில் 5.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் இது அதேபோக்கினைப் பின்பற்றி அதன் ஆண்டுச் சராசரி அடிப்படை முன்னைய மாதத்தின் 5.5 சதவீதத்திலிருந்து 5.4 சதவீதத்தினை அடைந்தது.

# 33-வது ஆண்டு பூர்த்தியில் சிறிலங்கன் எயார்லைன்ஸ்



இலங்கையின் தேசிய விமான சேவையான சிறிலங்கன் எயார் லைன்ஸ் அதன் 33ஆவது ஆண்டுப் பூர்த்தியை இம்மாதம் கொண்டாடுகின்றது.

சிறிலங்கன் ஏயார்லைன்ஸ் இன் இந்த மைல் கல்லை கொண்டாடும் முகமாக, அதன் ஊழியர்களுக்கான மதவைபவங்களை இம்மாத ஆரம்பத்தில் சிறிலங்கன் நடத்தியது.

சிறிலங்கன் எயார்லைன்ஸ் 1979ஆம் ஆண்டு, செப்ரெம்பர் மாதம் 1-ம் திகதி எயார்லங்கா என்ற பெயரால் குத்தகைக்கு எடுக்கப்பட்ட போயிங் 707-300 கி ரக இரண்டு ஜெட்லைனர்களுடன் அதன் விமான சேவைகளை ஆரம்பித்தது.

1994-ம் ஆண்டில் அதன் 15ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடிய எயார்லங்கா ஆசியாவிலேயே 340 எயார் பஸ்ஸை அறிமுகப்படுத்திய முதல் விமானசேவை நிறுவனம் என்ற என்ற பெயரைப் பெற்றது.

4 வருடங்களின் பின்னர் டுபாயை தளமாகக் கொண்டியங்கும் எமிரேட்ஸ் விமான சேவையுடன் இணைந்துசிறிலங்கன்யார்லைன்ஸ் எனப் பெயர் மாற்றம் பெற்றது.

இன்று பல ரக எயார்பஸ்கள் 21ஐ சேவையில் ஈடுபடுத்துமளவுக்கு விரிவடைந்துள்ளது.

ஐரோப்பா, கனடா, வட அமெரிக்கா, அவுஸ்திரேலியா, தூர கிழக்கு, மத்திய கிழக்கு மற்றும் இந்திய உபகண்டம் அடங்கலாக 33 நாடுகளில்58 இடங்களுக்கு தன்விமான சேவைகளை சிறிலங்கன் நடத்துகின்றது.

2011ஆம் ஆண்டில் சுமார் 3 மில்லியன் பேர் சிறிலங்கன் எயார் லைன்ஸில் பயணம் செய்துள்ளனர்.




# இந்தியாவில் இருசக்கர வாகன விற்பனையில் பின்னடைவு

கடந்த ஓகஸ்ட் மாதத்தில் இந்தியாவின் இருசக்கர வாகன விற்பனை கடும் சரிவைக் கண்டுள்ளது.

இதற்கு பெட்ரோல் விலையுயர்வு, அதிக வட்டி ஆகியவையே காரணம் எனக் கூறப்படுகிறது.

உள்நாட்டில் ஹீரோ மோட்டோ கார்ப், பஜாஜ், ஹோண்டா, டிவிஎஸ். மோட்டார் கம்பனி, சுசூகி மோட்டார் சைக்கிள், மகிந்திரா, யமஹா உள்ளிட்ட நிறுவனங்கள் இருசக்கர வாகனங்கள் தயாரிப்பு மற்றும் விற்பனையில் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில், கடந்த ஓகஸ்ட் மாதத்தில் ஒட்டுமொத்த அளவில் இரு சக்கர வாகனங்கள் விற்பனை 10 லட்சத்து 71 ஆயிரமாக குறைந்துள்ளது.

இதுகடந்த ஆண்டின் இதே மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட விற்பனையை விட (11.26 லட்சம் வாகனங்கள்) 5 சதவீதம் குறைவாகும்.

# 2030-ல் சவுதி அரேபியா எண்ணெய் இ/தி நாடாகும்

உலகின் மிகப்பெரிய எண்ணெய் ஏற்றுமதி நாடாகத் திகழும் சவுதி அரேபியா 2030-ம் ஆண்டில் எண்ணெய் இறக்குமதி நாடாக மாறும் என்று சிட்டி குரூப் நிறுவனத்தின் ஆய்வறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது. அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,


சவுதி அரேபியா தற்போது மொத்த எண்ணெய் உற்பத்தியில் 25 வீதத்தை தானே பயன்படுத்தி வருகிறது. அந்த நாட்டில் உற்பத்தியாகும் மின்சாரத்தில் 50% எண்ணெய் மற்றும் அதிலிருந்து கிடைக்கும் பொருட்களைக் கொண்டு உற்பத்தியாகின்றன. இந்நிலை தொடரின் 2030-ம் ஆண்டில் அந்நாடு எண்ணெய் ஏற்றுமதியாளர் என்ற அந்தஸ்தை இழந்து இ/தியாளராக மாறக்கூடும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# 2012 யூலை 31-ல் மொ.அ.ஒதுக்குகள் 7,099 மில்.டொலர்

2012 யூலையில் மொத்த அலுவலர்சார் ஒதுக்குகள் 2012 யூன் இறுதியின் ஐ.அ.டொலர் 6,045 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 7,099 மில்லியனுக்கு அதிகரித்தன. ஒதுக்குகளின் இந்த மட்டமானது 4.2 மாத இறக்குமதிகளுக்கு சமமானது.

ப.நா. நிதிய துணை நில் ஒழுங்குகளின் இறுதித் தொகுதி, அதேபோன்று நாட்டிற்கான ஐந்தாவது பன்னாட்டு முறிகளின் பெறுகைகள் பணிகள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களின் பேரிலான உட்பாய்ச்சல்கள் பல்வேறு உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களுக்கு நிதியிடுவதற்காக அரசிற்கு கிடைத்த உட்பாய்ச்சல்கள் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் சொத்துப்பட்டியல் முதலீடுகள் என்பன நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகள் அத்தகைய மட்டமொன்றிற்கு உயர்வடைய உதவின.

# வருகிறது நோக்கியாவின் லூமியா 920 போன்



நோக்கியாவின் லூமியா 920 வரும் நவம்பரில் விற்பனைக்கு வருகிறது. எந்த நாட்டில் இந்தப் போனை நோக்கியா முதலில் விற்பனைக்கு விடப்போகின்றது என்று தெரியவில்லை. ஆனால் இந்தப் போன் விண்டோஸ் 8 இயங்குதளத்தில் வருகிறது என்பது உறுதிப்படுத்தப்பட்டு இருக்கிறது. ஆப்பிளின் புதிய ஐபோன் 5 மற்றும் ஐபேட் மினியும் போட்டியைக் கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடும் போட்டிகளிடையே வரும் நோக்கியாவின் இந்த புதிய லூமியா 920 வெற்றியைப் பறிக்குமா? என்பது இன்னும் சில மாதங்களில் தெரிந்து விடும்.

**இலங்கையின் சமூக பொருளாதார தரவுகள்-2012 வெளியீடு**

# மும்மொழிகளில் பதிப்புகள்; தற்போது விற்பனைக்கு

இலங்கை மத்திய வங்கி, இலங்கையின் சமூக பொருளாதார தரவுகள் - 2012 என்ற அதன் அண்மைய தரவு ஏட்டினைத் தற்பொழுது வெளியிட்டிருக்கின்றது.

இத் தொடரில் இது 35-வது தொகுதியாகும். இத் தொகுதி இலங்கையின் சமூக, பொருளாதார நிலைமைகள், மனித வளங்கள், தேசிய கணக்குகள், வேளாண்மை, கைத்தொழில், பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு, விலைகளும் கூலிகளும், வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் சுற்றுலா, வெளிநாட்டு நிதி இறைத்துறை மற்றும் நிதியற்றுறை தொடர்பான ஆகப்பிந்திய தகவலை உள்ளடக்கிய 88 புள்ளி விபர அட்டவணைகளையும் 12 வரைபடங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

இவ்வெளியீட்டில், ஆகப்பிந்திய தரவுடன் 2011 ஆம் ஆண்டுக்கான ஆகப்பிந்திய மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தி புள்ளி விபரங்களும் வெளியிடப்பட்டுள் ளன.

இத் தொகுதி, முக்கிய சமூக பொருளாதார மாறிகள் தொடர்பாக சார்க் மற்றும் தென் கிழக்காசிய பிராந்திய நாடுகளின் ஒப்பிட்டுத் தரவுத் தொகுதியொன்றினையும் தருகின்றது.

இத் தரவேடானது தற்போது ஈடுபாடுமிக்க விடயங்களான பரந்தளவில் சமூக பொருளாதார தரவில் அநேகமானவற்றை சுருக்கமான முறையில் தருகிறது.

எனவே, இது கொள்கை வகுப்போர், ஆராய்ச்சியாளர்கள், கல்விமான்கள், மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாகவிருக்கும்.

இவ் வெளியீட்டின் ஆங்கில பிரதியொன்று ரூ.100 ஆகவும், சிங்களம்/தமிழ் பிரதியொன்று ரூ 30 ஆகவும் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன்,

இது, 58, சிறி ஜெயவர்த்தன புர மாவத்தை, இராஜகிரியவில் அமைந்துள்ள இலங்கை மத்திய வங்கியின் விற்பனை மற்றும் விநியோகப் பீடத்திலும், மாத்தறை, மாத்தளை அநுராதபுரம், யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலையிலுள்ள மத்திய வங்கியின் மாகாண அலுவலகங்களிலும் முன்னணிப் புத்தகக் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5180.15 | 5496.85 ⇧ |
| மிலங்கா விலைச்சுட்டி | 4811.99 | 5093.36 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 2877.88 | 2983.81 ⇧ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 6,008.111 |

**உயர்வடைந்தபங்குகள்(ரூ)** எஸ்.எம்.பி.லீசிங்(X)(0.50), லங்கா சீமெண்ட் (14.30), பேர்ஹறாஸ் ஹோட்டல்(48.00), கொம்.லீஸ்&பினா (4.80),கண்டி ஹோட்டல்ஸ் (8.50).

**சரிவடைந்தபங்குகள்(ரூ)** சுவாடெஷி(8200.00), சலிமர்(810.00), யூனியன் கெமிக்கல்ஸ்(530.00), சிலின்சிங்(1099.00), பளம் காடின் ஹோட்டல்(157.30).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 130.91 | 133.83 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 207.95 | 213.61 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 164.47 | 169.67 |
| சுவிஸ் பிராங் | 136.25 | 141.19 |
| கனேடிய டொலர் | 132.42 | 136.97 |
| அவுஸ்திரேலிய டொலர் | 133.82 | 138.71 |
| சிங்கப்பூர் டொலர் | 104.69 | 108.13 |
| ஜப்பான் யென் | 1.64 | 1.70 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.37 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 36.03 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சர்வதேச தொடர்பாடலுக்கான ஆங்கிலப் பரீட்சை




சர்வதேச தொடர்பாடலுக்கான ஆங்கிலப் பரீட்சையினை knowledge merchadising என்னும் நிறுவனம் இலங்கையில் யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக நாளை மறுதினம் புதன்கிழமை யாழ்.ரில்கோ ஹோட்டலில் அறிமுகப்படுத்தவுள்ளது

இந்தப் பரீட்சை தொடர்பாக விளக்கமளிக்கும் வகையில் பத்திரிகையாளர் சந்திப்பொன்று அண்மையில் அந்த நிறுவனத்தின் யாழ்.கிளையில் இடம்பெற்றது. இப் பத்திரிகையாளர் சந்திப்பின்போது நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் கே.விவேகானந்தர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் குறிப்பாக வடமாகாணத்திலுள்ளவர்களின் ஆங்கில அறிவினை விருத்தி செய்யும் வகையில் TOEIC என அழைக்கப்படும் Test Of English for International Communication பரீட்சையினை எதி ர்வரும் 12 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் அறி முகப்படுத்தவுள்ளது.

இந்தப் பரீட்சையில் உலகளாவிய ரீதியில் சுமார் 6 மில்லியன் பரீட்சார்த்திகள் பங்கு கொள்கின்றனர்.

நீண்டகாலமாக யுத்த அழிவுகளை எதிர் கொண்ட பிரதேசமாக வடக்கு மாகாணம் உள்ளதால் இந்த மாகாணத்தை சேர்ந்த பரீட்சார்த்திகளுக்கு சலுகைகளும் வழங்கப்படும்.

ஆங்கிலத்தை அடிப்படையிலிருந்து கற்று பரீட்சிப்பதற்கான பரீட்சையாக இது விளங்கவுள்ளதோடு க.பொ.த.சா/த, உயர்தர மாணவர்களுக்கு ஒரு சிறந்த தேர்வாகும்.

இந்தப் பரீட்சை சம்பந்தமான மேலதிக விபரங்களை அறிய விரும்பினால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் இலக்கம் 19 இல் அமைந்துள்ள (மக்கள் வங்கி கட்டடம்) எமது நிறுவனத்துடன் தொடர்பு கொள்ள முடியுமென அவர் தெரிவித்தார். (அ-6)

YARL Properties
(புதிய பரிமாணத்துடன் சிறந்த சேவை)
யாழ் குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் அழைக்க வேண்டிய ஒரே தொலைபேசி இலக்கம்
021 2221919/0759751919
யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் Brown வீதியில் 3 1/2 பரப்பு காணி பழைய வீட்டுடன் விற்பனைக்கு உண்டு உடன் தொடர்பு கொள்ளுங்கள்
விற்றல், வாங்குதல் (Sales/Buy)
வாடகை (Rent)
பராமரிப்பு (Property Managment)
அனைத்து தேவைகளுக்கும் அழையுங்கள்
36, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம்
E-Mail - yarlproperties@gmail.com

# திட்டமிட்டபடி பலிபூஜை; பிரதமகுரு தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னேஸ்வரம் ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோயில் மிருகபலி பூஜைகள் திட்டமிட்டபடி மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கபிலவஸ்து புனிதப்பண்டம் நாட்டில் காட்சிப்படுத்தப்பட்டு வரும் காரணத்தினால் மிருகபலி பூஜை ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

எனினும் நாளை மறுதினம் புதன்கிழமை மிருகபலி பூஜைகள் திட்டமிட்டபடி முன்னெடுக்கப்படும் என ஆலய பிரதம குரு காளிமுத்து சிவபாதகுருக்கள் தெரிவித்துள்ளார்.

மிருகபலி பூஜை நடத்துவது தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவுடன் முன்னேஸ்வர ஆலய நிர்வாகம் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டுள்ளது.

ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்கவிற்கும் காளிமுத்து சிவபாதசுந்தர குருக்களுக்கம் இடையில் கடந்த செவ்வாய்க்கிழமை விசேட பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன.

மிருகபலி பூஜைகளில் தாம் கலந்து கொண்டுள்ளதாகவும் பூஜைகளை நடத்துவதற்கு தேவையான பாதுகாப்பு வழங்கப்படும் எனவும் லலித் வீரதுங்க உறுதியளித்துள்ளார்.

மிருகபலி பூஜை நடைபெறும் தினம் தொடர்பில் அறிவிக்குமாறு அவர் கோரியுள்ளார்.

இதேவேளை முதல் பெண்மணி ஷிராந்தி ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச, எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட பலரும் இந்த மிருகபலி பூஜைகளில் கடந்த காலங்களில் பங்கேற்றுள்ளதாக சிவபாதசுந்தர குருக்கள் தெரிவித்துள்ளார். (அ-2)

# அமைச்சர் வீரவன்ச மீது ஒழுக்காற்று நடவடிக்கை

## அமைச்சர் சுசில் தெரிவிப்பு

மாகாண சபைத் தேர்தல்களின் முடிவுகள் வெளிவந்தவுடன் அமைச்சர் விமல் வீரவன்ச மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளதாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடும் தேசிய சுதந்திர முன்னணியின் வேட்பாளர் குழுத் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஜயந்த வீரசேகர தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக் குறித்து கடுமையான விமர்சனங்களை முன்வைத்தமை தொடர்பில் விமலின் கட்சி மீது நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைச்சர் சுசிலை பணித்திருந்தார்.

இதனையடுத்தே தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் என்ற அடிப்படையில் விமல் வீரவன்ச மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அமைச்சர் சுசில் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடும் ஜயந்த வீரசேகர தனது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு அளிக்கும் வாக்கானது மீண்டும் புலிகளை உயிர்ப்பிக்க உதவும் என தெரிவித்தமைக்கே கட்சியின் தலைவர் விமல் வீரவன்ச மீது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தனது கட்சி சார்பான வேட்பாளர் ஜயந்த வீரசேகர மீது ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினர் தாக்குதல் நடத்தியதாக விமல் வீரவன்ச குற்றஞ்சாட்டியிருந்தார். (அ-2)

# 42 பாடசாலைகளுக்கு சமையற்கூடங்கள்

(மல்லாவி)

ஐக்கிய நாடுகள் உலக உணவுத் திட்டத்தின் மூலம் துணுக்காய் கல்விவலயத்தில் உள்ள பாடசாலைகளில் 42 பாடசாலைகளுக்கு மதிய உணவு சமைப்பதற்கான சமையற்கூடங்கள் அமைக்கப்படவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இதில் 42 பாடசாலைகளுக்கும் 77 இலட்சத்து 94 ஆயிரத்து 700 ரூபா நிதி மூலப்பொருட்கள் வாங்குவதற்கும் வேலைக்கான கூலியாக 21 ஆயிரம் மனித வலுவுக்கான உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டு வேலைகள் துரிதகதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

துணுக்காய் கோட்டத்தில் 16 பாடசாலைகளுக்கும் மாந்தை கிழக்கு கோட்டத்தில் 9 பாடசாலைகளுக்கும் ஒட்டுசுட்டான் கோட்டத்தில் 17 பாடசாலைகளுக்கும் இத்திட்டத்தின் மூலம் சமையற்கூடங்கள் அமைக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-3-15)

## கல்யாண மாலை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:- 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-ரோகிணி 2<br>உயரம்:-5'4"<br>கி.பா:-49.25, 2 இல் செவ்வாய்<br>தொழில்:-Msc இன்ஜினியர் U.K. (P.R) B/349 | பிறப்பு:- 1988 இந்து<br>நட்சத்திரம்:- ரோகிணி 4<br>உயரம்: 5'3"<br>கி.பா:-11<br>தொழில்:-A/L சித்தி G/413 |
| பிறப்பு:- 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- மூலம் 4<br>உயரம்:-5'11"<br>கி.பா:-45, 8 இல் செவ்<br>தொழில்:-Bsc,M.A கணனி இன்ஜினியர் அவுஸ் P.R B/398 | பிறப்பு:- 1989 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- பரணி 3<br>உயரம்: 5'<br>கி.பா:-04<br>தொழில்:-சித்த மருத்துவ மாணவி G/412 |
| பிறப்பு:-1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-பூசம் 1<br>உயரம்:-5'10"<br>கி.பா:-36.25<br>தொழில்:-Bsc (Hons) Quantity Surveyor ஓமான் B/401 | பிறப்பு:- 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- புனர்பூசம் 4<br>உயரம்: 5'4"<br>கி.பா:-57, 12 இல் செவ்<br>தொழில்:-Bsc பட்டதாரி ஆசிரியை G/415 |
| பிறப்பு:- 1978 R.C விஸ்வகுலம்<br>நட்சத்திரம்:-பூரம் 2<br>உயரம்:-5'6"<br>கி.பா:-69, 12 இல் செவ்வாய்<br>தொழில்:-போதனாசிரியர் விளம்பர சேவை B/403 | பிறப்பு:- 1980 இந்து<br>நட்சத்திரம்:- மகம் 1<br>உயரம்: 5'3"<br>கி.பா:- 10.75, 4 இல் செவ்<br>தொழில்:-B.A. இறுதி வருட மாணவி G/417 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com
ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குப்பிளானில் தேவாலயம் அமைப்பு; இந்து மகா சபைத்தலைவர் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை குப்பிளான் பகுதியில் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று அத்துமீறி அமைக்கப்பட்டு வருகின்றது என அப்பகுதியில் வாழும் இந்து மக்களினால் யாழ்ப்பாணம் இந்து மகா சபையிடம் முறையிடப்பட்டுள்ளதாக இந்து மகா சபையின் தலைவர் டாக்டர் இ.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்து மக்கள் அதிகளவில் வாழும் ஏழாலை குப்பிளான் பகுதியில் மக்களின் விருப்பத்திற்கு எதிராக கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

ஏற்கனவே ஏழாலை குப்பிளான் பகுதியில் இரண்டு கிறிஸ்தவ தேவாலயங்கள் அமைப்பதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகள் இந்து மக்களினால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் மீண்டும் கிறிஸ்தவ தேவாலயத்தை அமைக்கும் பணி இடம்பெற்று வருகிறது. அத்தோடு அப்பகுதியில் வாழும் இந்து மக்களை மதம் மாற்றும் நடவடிக்கையிலும் சிலர் ஈடுபட்டுள்ளனர். மக்களின் எதிர்ப்பினால் குறித்த கிறிஸ்தவ தேவாலயம் அமைக்கும் பணிக்கு அதிகாரிகளினால் நெருக்கடி கொடுக்கப்படவே அப்பகுதி மக்களின் ஆதரவினைப் பெறும் வகையில் கையெழுத்துப் பெறும் நடவடிக்கையில் தேவாலயத்தை அமைப்போர் ஈடுபட்டுள்ளனர்.

இருப்பினும் அந்த முயற்சி பயனளிக்கவில்லை. இதனால் சிலரை அச்சுறுத்தியும் உள்ளனர். மக்களின் விருப்பத்திற்கு எதிராக அப்பகுதியில் கிறிஸ்தவ தேவாலயம் அமைக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும்.

அத்துடன் இந்து மக்களை மதமாற்றும் நடவடிக்கைகளை கைவிட வேண்டும் எனவும் இந்து மகா சபை கேட்டுக்கொண்டுள்ளதோடு இவை இந்து சமய கலாசாரத்திணைக்களப் பணிப்பாளரிடம் தெரிவித்துள்ளதாகவும் இந்து மகா சபையின் தலைவர் தெரிவித்தார்.

மேலும் குப்பிளானில் அமைக்கப்பட்டு வரும் தேவாலயம் தொடர்பில் தமக்கு முறைப்பாடு கிடைத்தவுடன் அப்பகுதி மக்களை நேரில் சென்று சந்தித்ததாகவும் இதன்போது தேவாலயம் அமைக்கப்படுவது தொடர்பில் மக்கள் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

## நிர்வாகிகள் தெரிவு

(நல்லூர்)

சிறுப்பிட்டி கிழக்கு முதியோர் சங்க புனரமைப்புக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் அண்மையில் கிராமசேவையாளர் ஐ.சிவானந்தம் தலைமையில் நடைபெற்றது.

இதில் தலைவராக இளைப்பாறிய அதிபர் சுப்பிரமணியம் கனகராசா, உபதலைவராக சின்னட்டி சண்முகம், செயலாளராக இளைப்பாறிய கல்வி ஆலோசகர் செல்லத்துரை விஸ்வலிங்கம், உபசெயலாளராக சின்னையா கனகசபை, பொருளாளராக இளைப்பாறிய அதிபர் கார்த்திகேசு தர்மரத்தினம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் 10 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-3-134)

# பல்வேறு குற்றச்சாட்டுக்களில் 102 பேர் கைதாகியுள்ளனர்

(யாழ்ப்பாணம்)

யாழில் கடந்த 7நாட்களில் மட்டும் பல்வேறு குற்றச்சாட்டுக்களில் 102பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேரா தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

நீதிமன்றங்களினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 39 பேரும் பொது இடங்களில் மதுபோதையில் பயணிகளுக்கு இடையூறு ஏற்படுத்திய 27 பேரும் (இதில் 21பேர் கோப்பாய் பிரதேசத்தினை சேர்ந்தவர்கள்), சட்ட விரோத மது விற்பனையில் ஈடுபட்ட 11பேரும் மதுபோதையில் வாகனம் செலுத்திய 10 பேரும் சூழல் மாசடைவதற்கு காரணமாக விருந்த 6 பேரும் அனுமதியின்றி மாடுகளினை ஏற்றிச்சென்ற 7பேரும்(இதில் 3 பேர் ஊர்காவற்றுறையினைச்சேர்ந்தவர்கள்), அனுமதியின்றி ஆடுகளினை ஏற்றிச்சென்ற 2 பேரும் அனுமதியின்றி மணல் ஏற்றிச் சென்ற ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட இவர்கள் அனைவரும் நீதிமன்றங்களின் முன் முற்படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)

## கட்டட திறப்பு விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபைக்கென ஏ9 வீதி கொடிகாமத்தில் அமைக்கப்பட்ட புதிய கட்டடம் இன்று திங்கட்கிழமை காலை 11 மணிக்கு வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளர் சி.துரைராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் புதிய கட்டடத்திற்கான பெயர்ப்பலகையும் திரை நீக்கம் செய்யப்படவுள்ளது. (அ-3-29)




## கலைஞர்களுக்கு அடையாளஅட்டை

(நல்லூர்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 18 வருடங்களுக்கு குறையாமல் கலைச்சேவை செய்த கலைஞர்களுக்கு அடையாளஅட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே, இது தொடர்பாக வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேசத்திற்குட்பட்ட கலைஞர்கள் கோப்பாய் பிரதேச கலாசார கிளையுடன் தொடர்பு கொண்டு மேலதிகமாக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம் என கலாசார உத்தியோகத்தர் அ.மிலாசினி தெரிவித்துள்ளார். (அ-3-134)

# கைதிகள் தினத்தில் உறவுகள் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

கைதிகள் தினத்தை முன்னிட்டு யாழ். சிறைச்சாலையில் 2 தண்டனைக் கைதிகள் நேற்று மிக நீண்டகாலத்தின் பின்னர் தமது உறவுகளோடு நன்றாக இருந்து தமது அன்பினை பகிர்ந்து கொண்டனர்.

இந்நிகழ்விற்கு சிறைச்சாலை நலன்புரிச்சங்க தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சாந்தா அபிமன்ன சிங்கி உட்பட சட்டத்தரணிகளான குருபரன், பார்த்தீபன் அரச சட்டவாதியான வி.திருக்குமரன் மற்றும் நலன்புரிச்சங்க உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வு கைதிகளிற்கு நிறைந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருந்ததோடு தமது பிள்ளைகளை தூக்கி அரவணைத்து சோறு ஊட்டியும் மகிழ்ந்தனர்.

இந்நிகழ்வின் போது கைதிகளினால் நாடகம், பாட்டுக்கள், கவிதைகள் என்பனவும் பாடப்பட்டன. இறுதியில் தமது உறவினர்களோடு கைதிகள் உணவருந்தி மகிழ்ந்தனர். (அ-4)

# பொருட்களை பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் உரிமை கோரப்படாத பொருட்களாக கட்டட வேலைகளுக்கு பயன்படும் றூட்டர் 2, ஜிப்சோ 1, மரவேலைகளுக்கு பயன்படும் வாச்சி 1 ஆகியவை யாழ்.பொலிஸாரால் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

உரியவர்கள் உரிய ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளலாம் என்றும் 6 மாத காலத்திற்குள் உரிமை கோர தவறும் பட்சத்தில் அவை அரசுடைமையாக்கப்படும் என்றும் யாழ்.நீதிவான் நீதிமன்ற பதிவாளர் தெரிவித்துள்ளார். (அ-9)

# உணவுக்கான வேலைத்திட்டம்

(நல்லூர்)

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் உணவுக்கான உலக வங்கி வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. கோப்பாய் பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் சமுர்த்தி நிவாரணம் பெறாத 30 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

தெரிவு செய்யப்படும் பயனாளிகள் ஒவ்வொரு வீதிக்கரையோர பகுதிகளை துப்புரவு செய்வதற்காக பயன்படுத்தபடுவார்கள் என தெரிவிக்கப்படுகிறது. இதற்கான பயனாளிகளை தெரிவு செய்யும் பணியில் கிராம சேவையாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். (அ-3-134)


# ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் 18 ஆம் திகதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் எதிர்வரும் 18 ஆம் திகதி யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெறும். இந்த ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்கள், எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் ஆராயப்படவுள்ளது.

இந்த கூட்டத்தில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், பிரதேச செயலாளர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் பங்கு கொள்ளவுள்ளனர். (அ-6)





யாழ்.சிறைச்சாலையில் கைதிகள் தினம் நேற்று முற்பகல் 10 மணிக்கு கொண்டாடப்பட்டது. இந்நிகழ்விற்கு தலைமைதாங்கிய பிரதான சிறைச்சாலை அதிகாரி எஸ்.இந்திரன் மங்கல விளக்கேற்றுவதையும் கைதிகளின் இசை நிகழ்வினையும் கைதிகள் தமது உறவினர்களுடன் அன்பினை பரிமாறிக் கொள்வதையும் படங்களில் காணலாம். (படங்கள்:– உ.சாளீன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் அவுஸ். பயணம்; அரசாங்கத்தின் திட்டமிட்டசதி

## கொழும்பு மாநகர சபை உறுப்பினர் எஸ்.குகவரதன்

(கொழும்பு)

வடபகுதியில் தமிழ் மக்களின் குழுமத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான சதித் திட்டமே அவுஸ்திரேலிய புகலிடப் பயணங்களாகும். இதற்கு தமிழ் இளைஞர்கள் தொடர்ந்தும் ஏமாறாது தம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் எஸ்.குகவரதன் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தால் அனைத்தையும் இழந்த தமிழ் சமூகத்தில் எஞ்சியுள்ள இளம் சமூகத்தையும் நடுத்தெருவில் தடுக்க விடுவதே இப்பயணங்களின் இலக்காகும்.

காலி, நீர்கொழும்பு உட்பட பல பகுதிகளில் இவ்வாறான படகுகள் படையினரால் சுற்றி வளைக்கப்படுகின்றன. இவ்வாறு பயணிப்போரில் மூவினத்தவர்களும் இருந்தாலும் அதிக எண்ணிக்கையில் வடபகுதி தமிழ் இளைஞர்கள் யுவதிகள் குடும்பஸ்தர்களே காணப்படுகின்றனர். படகுகளில் பயணம் செய்த பெரும்பாலான வடபகுதி தமிழர்கள் தமது பணத்தையும் இழந்து சிறைச்சாலைகளில் சிறைவாசம் அனுபவிக்கின்றனர். வடபகுதி தமிழ் இளைஞர்களை நிர்க்கதியாக்கும் திட்டமிடப்பட்ட நடவடிக்கையே அவுஸ்திரேலிய புகலிடப் பயணமாகும்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு நிர்க்கதியாகி நிற்கும் வடபகுதி தமிழ் மக்கள் குழுமத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி அங்கு பெரும்பான்மை இனத்தவரை குடியேற்றி தமிழ் சமூகத்தை முற்றாக இல்லாதொழிக்கும் நோக்கிலேயே அதிகார குழுவொன்று இத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது.

எமது சமூகம் யுத்தத்தால் அனைத்தையும் இழந்து விட்டது. எஞ்சியுள்ள இளம் சமூகமும் அழிய வேண்டுமா? சிந்தியுங்கள். அவுஸ்திரேலிய புகலிடம் என்ற மாயையில் சிக்கி பணத்தையும் உரிமைகளையும் இழந்து விடாதீர்கள் மாறாக சுய தொழில்கள் அல்லது இலங்கைக்குள் தொழில்களில் ஈடுபடுங்கள் இல்லாவிட்டால் சட்ட ரீதியாக வெளிநாடு செல்லுங்கள். (அ-2)

# கசிப்பு விற்றவருக்கு அபராதம் விதிப்பு

(கரவெட்டி)

துன்னாலைப் பகுதியில் தனது வீட்டில் வைத்து கசிப்பு விற்பனை செய்த பெண்மணி ஒருவருக்கு 15 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 6 மாத கால சிறைத் தண்டனையும் வழங்கி பருத்தித்துறை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

துன்னாலை குடவத்தைப் பகுதியில் சம்பவதினம் வீட்டில் வைத்து கசிப்பு விற்பனை செய்வதாக கிடைத்த இரகசிய தகவலை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த நெல்லியடி பொலிஸார் குறித்த பெண்மணிக்கு எதிராக வழக்குப் பதிவு செய்தனர்.

குறித்த நபரை கடந்த 7 ஆம் திகதி பருத்தித்துறை நீதவான் நீதமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதவான் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு மேற்படி தீர்ப்பை வழங்கினார். (அ-3-24)

# இலங்கைக்கு செல்ல வேண்டாம் என தமிழ்நாடு சபாநாயகருக்கு அழுத்தம்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெறும் பொது நலவாய நாடுகள் மாநாட்டின் சபாநாயகர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டாம் என தமிழக புதுச்சேரி சபாநாயகர் வி.சபாபதிக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது.

பல்வேறு சமூக அமைப்புக்கள் ஒன்றிணைந்து புதுச்சேரி சபாநாயகர் வி.சபாபதிக்கு இந்த அழுத்தத்தை கொடுத்துள்ளனர்.

குறித்த கூட்டத்திற்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமை தாங்குவதாகவும் இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்டமை, மீனவர்கள் கொல்லப்பட்டமை, சிறையில் அடைக்கப்பட்டமை போன்றவற்றிற்கு அவர் பொறுப்புக் கூற வேண்டும் எனவும் அவர் ஒரு போர்க்குற்றவாளி எனவும் பல்வேறு சமூக அமைப்புக்கள் குறிப்பிட்டுள்ளன.

எனவே தமிழ்நாடு சபாநாயகர்கள் அதில் பங்குபற்றக் கூடாதென அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில் வலியுறுத்தியுள்ளனர்.

தமிழர் தேசிய இயக்கத்தைச் சேர்ந்த ஆர்.அழகிரி, மக்கள் உரிமை கூட்டமைப்பைச் சேர்ந்த ஜி.சுகுமாரன் மற்றும் தந்தை பெரியார் திராவிட கழக உறுப்பினர்கள், அம்பேத்கார் மக்கள் படை உள்ளிட்டோர் குறித்த கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளனர். (எ-11)

# நீர்கொழும்பில் கைதான 71 பேரில் 64 பேருக்கு பிணை

(நீர்கொழும்பு)

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முயற்சித்த நிலையில் நீர்கொழும்பு கடற்கரை பகுதியில் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 71 பேரில் 64 பேரை பிணையில் விடுதலை செய்யுமாறு கொழும்பு பிரதான நீதவான் ரஷ்மி சிங்கப்புலி கடந்த 7 ஆம் திகதி உத்தரவிட்டுள்ளார்.

இந்த 64 பேரும் தலா இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான சரீர பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். இதனடிப்படையில் 64 பேருக்கும் பிணையாக 128 இலட்சம் ரூபாவை செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது.

அதேவேளை இந்தச் சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட சட்டவிரோதமாக ஆட்களை அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்லும் வர்த்தகத்தில் ஈடுபட்ட 7 பேருக்கு பிணை வழங்க மறுத்த நீதவான் அவர்களை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார். (அ-9)

# தமிழ் வர்த்தகர்களின் ஆர்ப்பாட்டத்தினால் அதிர்ச்சியில் உறைந்த ஆதரவாளர்கள்

இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு ஆன்மீக சுற்றுலா வந்த 184 இலங்கைப் பயணிகள் தமிழ்நாட்டில் உள்ள சில இயக்கங்களின் எதிர்ப்பு காரணமாக திருப்பி அனுப்பப்பட்டனர். மேலும் திருச்சி விமான நிலையத்தில் இலங்கை பக்தர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டது.

இந்நிலையில் இலங்கை பக்தர்கள் மீது தமிழ்நாட்டில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து கொழும்பில் தமிழ் வர்த்தகர்கள் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

கொழும்பில் உள்ள இந்திய தூதரகம் முன்பு நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 200 தமிழ் வியாபாரிகள் கலந்து கொண்டு இந்தியா வரும் இலங்கை மக்களின் பாதுகாப்பை இந்திய அதிகாரிகள் உறுதிசெய்ய வேண்டுமென கோஷமிட்டனர்.

இலங்கையிலிருந்து தமிழகம் வந்த சிங்கள பக்தர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதற்கு இலங்கையில் வாழும் தமிழர்கள் எதிர்ப்பு தெரிவித்திருப்பது தமிழ்நாட்டிலுள்ள இலங்கை தமிழர்களின் ஆதரவாளர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ஏ-2)




★1759-பாண்டிச்சேரியில் பிரெஞ்சுக் கடற்படைகளுக்கும் ஜோர்ஜ் போக்கொக் தலைமையிலான பிரித்தானியக் கடற்படைக்கும் இடையில் போர் வெடித்தது. பிரெஞ்சுக் கப்பல் பலத்த சேதத்துடன் பின்வாங்கியது.

★1823-சிமோன் பொலிவார் பெருவின் ஜனாதிபதியாக அறிவிக்கப்பட்டார்.

★1840- ஒட்டோமான் மற்றும் பிரித்தானியப் படைகள் பெய்ரூட் நகர் மீது தாக்குதலைத் தொடுத்தனர்.

★1846- எலியாஸ் ஹோவ் தையல் இயந்திரத்துக்கான காப்புரிமம் பெற்றார்.

★1858- 55 பண்டோரா என்ற சிறுகோள் கண்டுபிடிக்கப்பட்டது.

★1898-ஆஸ்திரியாவின் அரசி எலிசபெத் கொலை செய்யப்பட்டார்.

★1931- பெலீசில் இடம்பெற்ற மிகப் பெரும் சூறாவளியினால் ஆயிரத்து 500 பேர் உயிரிழந்தனர்.

★1939-இரண்டாம் உலகப் போர்: கனடா ஜேர்மனி மீது போரை அறிவித்தது.

★1943-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியப் படையினர் ரோம் நகரினுள் நுழைந்தனர்.

★1951-ஐக்கிய இராச்சியம் ஈரான் மீது பொருளாதாரத் தடைகளை அறிவித்தது.

★1967-கிப்ரல்டார் மக்கள் பிரித்தானியாவின் கீழ் தொடர்ந்திருக்க வாக்களித்தனர்.

★1974-கினி பிசாவு போர்த்துக்கல்லிடம் இருந்து விடுதலை பெற்றது.

★1976-பிரித்தானிய விமானம் ஒன்று யூகொஸ்லாவியாவின் சாக்ரெப் நகரில் வேறொரு விமானத்துடன் மோதியதில் 176 பேர் உயிரிழந்தனர்.

★2000- மட்டக்களப்பு நகர முன்னாள் நகரத் தந்தை செழியன் பேரின்பநாயகம் படுகொலை செய்யப்பட்டார்.

★2002- சுவிட்சர்லாந்து ஐ.நாவில் இணைந்தது.

**பிறப்புக்கள்**

★1974-பென் வாலஸ், அமெரிக்கக் கூடைப் பந்து ஆட்டக்காரர்

★1980-ஜெயம் ரவி, தமிழ்த் திரைப்பட நடிகர்

**இறப்புக்கள்**

★1975-ஜோர்ஜ் தொம்சன், நோபல் பரிசு பெற்றவர் (பி.1892)

★1983-ஏ.கே.செட்டியார், காந்தி பற்றிய ஆவணப்படத்தை முதன்முதலில் தயாரித்தவர் (பி.1911)

★1983-பீலிக்ஸ் புளொக், சுவிசில் பிறந்த இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1905)

★2008-வி.கே. கானமூர்த்தி, ஈழத்து நாதஸ்வரக் கலைஞர் (பி.1948)

### வி.கே.கான மூர்த்தி



வி.கே. கானமூர்த்தி ஈழத்தின் புகழ் பெற்ற நாதஸ்வரக் கலைஞர் ஆவார். வி.கே. பஞ்சமூர்த்தியின் சகோதரர். யாழ்ப்பாணம் கோண்டாவில் மேற்கு காளிகோவிலடியைச் சேர்ந்த இவர் பிரபல நாதஸ்வர மேதை வி.கோதண்டபாணிக்கும் இராஜேஸ்வரிக்கும் மகனாகப் பிறந்தார். தனது 14 ஆவது வயதில் நாராயணசாமி என்பவரிடமும் அதன் பின்னர் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த இராசா என்பவரிடமும் நாதஸ்வரக் கலையைக் கற்றார். தனது இளைய சகோதரனான பஞ்சமூர்த்தியுடன் இணைந்து பல்லாண்டுகளாக இலங்கையில் பல பாகங்களிலும் தமிழ்நாடு, மலேசியா, சிங்கப்பூர் உட்பட உலகின் பல பாகங்களுக்கும் நாதஸ்வரக் கச்சேரிகளை நடத்தினார்.

1989 ஆம் ஆண்டு மார்ச் 23 மாதம் ஆம் திகதி இவர்கள் இருவரும் நாதஸ்வர இசைத்துறையில் பிரவேசித்த வெள்ளி விழாவை கம்பன் கழகம், யாழ்.பல்கலைக்கழகம் கைலாசபதி அரங்கில் வரலாறு காணாத விழாவாக நடத்தியது.

இவர்கள் பல்லாண்டுகளாக பல சைவ ஆலயங்கள், திருமணச் சடங்குகள் என இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்று நாதஸ்வரம் வாசித்து பெரும் விருதுகள், பாராட்டுகள், கௌரவங்கள் என அளப்பரியன பெற்றார்கள். 2005 ஆம் ஆண்டில் இலங்கை அரசின் கலாபூசண விருதைப் பெற்றார்.

**மறைவு**

சிறிது காலம் நோய் வாய்ப்பட்டிருந்த இவர் யாழ்ப்பாண வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 2008 ஆம் ஆண்டு செப்டெம்பர் 10 ஆம் திகதி இரவு 11 மணியளவில் காலமானார். இவருக்கு மூன்று ஆண் பிள்ளைகளும் இரு பெண் பிள்ளைகளும் உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவுக்கு விருந்து கொடுக்காது தமிழக மீனவர்களை காப்பாற்றுங்கள்

## மத்தியரசை கோருகிறார் வைகோ

இந்தியாவிற்கு வருகைதரவுள்ள ஜனாதிபதி ராஜபக்ஷவிற்கு எதிரான கறுப்புக்கொடி போராட்டத்திற்கு தடை விதிக்கப்பட்டாலும் அதையும் மீறி போராட்டம் நடத்துவோம் என ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

ம.தி.மு.க. அரசியல் மையச் செயலாளர் மு.செந்திலதிபன் தொகுத்த நாடாளுமன்றத்தில் வைகோ நூல் வெளியீட்டு விழா சென்னையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் நூலை வெளியிட விஜடி பல்கலைக்கழக வேந்தர் ஜி.விசுவநாதன் முதல் நூலை பெற்றார்.

இவ் விழாவில் உரையாற்றிய வைகோ கூறுகையில், தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் படுகொலையை கண்டிக்க நாதியில்லை. இலங்கை ஜனாதிபதியை அழைத்து விருந்து கொடுப்பது சரியா? தமிழக மீனவர்களை காப்பாற்ற இனியாவது மத்திய அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சாஞ்சி நிகழ்ச்சியில் பங்கேற்க அவரை வரவேற்றதாக கூறிய பா.ஜ.க தலைவர் சுஷ்மா சுவராஜ் பின்னர் இல்லை என்கிறார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கை சென்ற போது சுஷ்மா மட்டும் ராஜபக்ஷவை ஏன் தனியாக சந்தித்தார் என்ற கேள்வி இன்னும் அப்படியே இருக்கிறது.

சாஞ்சிக்கு வரும் அவருக்கு கறுப்புக்கொடி காட்டுவதற்காக சென்னையில் இருந்து பஸ்களில் பயணிக்கிறோம். நாங்கள் நடத்தும் சிலுவைப் போருக்கு ஆதரவு தாருங்கள் என்று மத்திய பிரதேச முதல்வருக்கு கடிதம் எழுதியிருக்கிறேன். அவர் ஆதரவு தராமல் எங்கள் போராட்டத்துக்கு தடை விதித்தாலும் அதை மீறிப் போராட்டம் நடத்துவோம் என்றார்.

தமிழருவி மணியன், கொளத்தூர் மணி, புகழேந்தி தங்கராசு, நாசரேத்துரை, மல்லை சத்யா உட்பட பலர் கலந்து கொண்டனர். (அ-2)

# இளைஞர்களின் குத்தாட்டம்; பார்வையாளர்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதித் திருவிழாவின் போது அங்கு வந்திருந்த இளைஞர்கள் சிலர் மதுபோதையில் நடனமாடி பார்வையாளர்களுக்கு இடையூறு ஏற்படுத்தியுள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த இறுதிநாள் திருவிழாவின் போது இரவு நடந்த இசை நிகழ்ச்சியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

சில இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் சுற்றித்திரிந்து அங்கு நின்ற பெண்களோடு சேஷ்டையில் ஈடுபட்டுள்ளனர் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனைவிட அங்குள்ள இளைஞர்கள் குழுக்களிடையில் சிறுசிறு மோதல்கள் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கின்றனர். இவ்வாறான திருவிழாக்காலங்களில் பொலிஸார் ரோந்து கடமைகளில் ஈடுபடுவது அவசியம் என வலியுறுத்தப்படுகிறது எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (அ-4)

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குள் மூன்று பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன

## மக்கள் விசனம்

(சாவகச்சேரி)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குட்பட்ட மூன்று பாடசாலைகள் தொடர்ந்து மூடப்பட்ட நிலையில் உள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

முகமாலை றோ.க.த.க.பாடசாலை, அல்லிப்பளை அ.த.க.பாடசாலை, வேம்பொடுகேணி அ.த.க.பாடசாலை ஆகியவையே தொடர்ந்து மூடப்பட்ட நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்குறித்த பாடசாலைகள் இயங்காமையால் அப்பகுதியில் உள்ள மாணவர்கள் தூர இடங்களில் உள்ள பாடசாலைகளுக்கு செல்ல வேண்டியள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, இப்பாடசாலைகளை இயங்க வைத்து அருகில் உள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவுமாறு அப்பகுதி பெற்றோர் உரிய தரப்பினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-29)

# தேவாலய திருப்பலியின் போது இனந்தெரியாதோர் தாக்குதல்

## மன்னாரில் சம்பவம்; கூட்டமைப்பு கண்டனம்

(மன்னார்)

மன்னார் கரைசல் புனித கப்பலேந்தி மாதா தேவாலய திருப்பலிப் பூசையின் போது இனந்தெரியாதோர் கற்களை வீசியும் வெடிகளை கொளுத்தி எறிந்தும் தாக்குதல் நடத்தியதில் அருட்தந்தை உட்பட மூவர் படுகாயமுற்று மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கரைசல் புனித கப்பலேந்தி மாதா ஆலய உற்சவத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தை வன்னி மாவட்ட கூட்டமைப்பு எம்.பி. செல்வம் அடைக்கலநாதன் வன்மையாக கண்டித்துள்ளார்.

மன்னார் கரைசல் மாதா ஆலய வருடாந்த உற்சவம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதையொட்டி கடந்த 7 ஆம் திகதி இரவு திருப்பலி பூசை ஒப்புக்கொடுக்கப்பட்ட போது இனந்தெரியாத ஒரு குழுவினர் கல் வீசி தாக்குதல் நடத்தியதுடன் வெடிகளையும் கொளுத்தி ஆலயத்தினுள் எறிந்துள்ளனர்.

இதனால் பூசையை நடத்திய அருட்தந்தை ஒருவரும் இரு இளைஞர்களும் படுகாயமடைந்தனர். இத்தாக்குதல் சம்பவத்தை அடுத்து பெருந்தொகையான மக்கள் கரைசல் கிராமத்தை நோக்கி திரண்டு வரத்தொடங்கினர்.

பொலிஸார் இம் மக்களை சமாதானப்படுத்தி திருப்பியனுப்பினர். இச்சம்பவத்தையடுத்து பெருந்தொகையான இராணுவத்தினரும் பொலிஸாரும் கரைசல் கிராமத்தில் குவிக்கப்பட்டனர். (அ-9)

# அத்துமீறிய அமைச்சர் வெளியேற்றப்பட்டார்

(கொழும்பு)

வாக்குகள் எண்ணப்படும் நிலையத்திற்குள் அத்துமீறி பிரவேசித்த ஆளும் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர் வெளியேற்றப்பட்டுள்ளார்.

ஆளும் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர் அதாவுத செனவிரட்னவே இவ்வாறு வாக்கு எண்ணும் நிலையத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.

கேகாலை மாவட்ட சிரேஷ்ட துணைத் தேர்தல் ஆணையாளர் நாமல் தலங்கமவினால் அமைச்சர் அதாவுத வெளியேற்றப்பட்டுள்ளார். அனுமதியின்றி வாக்கு எண்ணும் நிலையத்திற்குள் பிரவேசித்தாக அமைச்சர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பொலிஸாரின் ஒத்துழைப்புடன் அமைச்சர் வாக்கு ஏண்ணும் நிலையத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார். கேகாலை மகளிர் கல்லூரி வாக்கு எண்ணும் நிலையத்திற்குள் அமைச்சர் அத்துமீறி பிரவேசிக்க முயற்சி செய்துள்ளார். (அ-2)

# பொதுநலவாய பிரதிநிதிகள் வடக்கிற்கு விஜயம் செய்யலாம்

## விடைகொடுக்கிறார் சபாநாயகர்

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் பிரதிநிதிகள் வடக்கிற்கு நேரில் சென்று நிலைமைகளை பார்வையிட முடியும் என சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். மனிதவுரிமை மற்றும் சட்டம் ஒழுங்கு நிலைமைகள் குறித்து பொதுநலவாய நாடுகள் பிரதிநிதிகள் நேரடியாக மதிப்பீடு செய்ய முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தின் பின்னரான இலங்கையில் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகளை உலக சமூகத்திற்கு எடுத்தியம்ப பொதுநலவாய நாடுகள் பாராளுமன்ற அமர்வு ஓர் சந்தர்ப்பமாக அமைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# அமைச்சர் ரத்நாயக்கவுக்கு மரண அச்சுறுத்தல் விடுப்பு

(கொழும்பு)

தமக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருவதாக தனியார் போக்குவரத்து அமைச்சர் சீ.பி.ரத்நாயக்க தெரிவித்துள்ளார். கொழும்பு-யாழ்ப்பாணம், கொழும்பு- சிலாபம், கொழும்பு-மாத்தறை ஆகிய வீதிகளில் அனுமதிப்பத்திரம் இன்றி பேருந்து சேவையில் ஈடுபடும் அரசியல்வாதிகள் இவ்வாறு அச்சுறுத்தல் விடுத்து வருகின்றனர்.

ஆளும் கட்சியை சேர்ந்த சீல முக்கியமான அரசியல்வாதிகளும் இவ்வாறு தமக்கு எதிராக அச்சுறுத்தல் விடுத்து வருவதாக தனியார் போக்குவரத்து அமைச்சர் தெரிவித்துள்ளார்.

குறித்த பாதைகளில் போக்குவரத்தில் ஈடுபட்டு வரும் பேருந்துகள், முக்கிய அரசியல்வாதிகள், பாதுகாப்பு உயர் அதிகாரிகள் மற்றும் அவர்களுக்கு நெருக்கமானவர்களுக்கு சொந்தமானவை என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமான முறையில் போக்குவரத்தில் ஈடுபடும் தனியார் பேருந்துகளை தடுத்து நிறுத்துவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)



வடமாகாண ஆளுநரின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் தேசிய அபிவிருத்தி திட்டத்திற்கான விவசாய இயந்திர உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு கடந்த 7 ஆம் திகதி கிளிநொச்சி பிரதி விவசாய பணிப்பாளர் காரியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநரின் பிரதம செயலாளர் திருமதி ஆர்.விஜயலட்சுமியிடமிருந்து பிரிகேடியர் கொஸ்தா விவசாய பொருட்களை பெற்றுக்கொள்வதையும் விருந்தினர்கள் அருகில் நிற்பதையும் விவசாய இயந்திர உபகரணங்களையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

36

# அக்கபோதி மன்னர்கள்



செங்கை ஆழியான்

### ஒன்பது மன்னர்கள்


மொகல்லானனின் மரணத்தின் பின்னர் அவனது மகனான குமாரத்து சேனன் அரசனாகினான். ஒன்பதாண்டு ஆட்சியின் பின்னர் அவன்



குட்டன் தடாகத்தின் காவல் தெய்வமாக விளங்கும் ஐந்துதலை நாகன்

மரணமடைய, அவனுடைய மகனான கீர்த்திசேனன் என்பவன் அரியணையில் அமர்ந்தான். ஒன்பதாம் மாதம், அவனுடைய மாமன் சிவா என்பவனால் கொலை செய்யப்பட்டான். நூறு நாட்களே சிவாவால் ஆட்சியிலிருக்க முடிந்தது. சிவாவைக் கொன்றழித்துவிட்டு உபதீசன் என்பவன் முடிசூடிக் கொண்டான். மொகாலனனுடைய ஒரு சகோதரியின் கணவனும் சேனாதிபதியுமான உபதீசன் ஆட்சியை நடாத்தினான். இன்னொரு வகை உரித்தாளியான சிலாகாலனைத் திருப்திப்படுத்துவதற்காக தனது மகளையும் திரண்ட செல்வத்தையும் சிலாகாலனுக்கு திருமணத்தின் மூலம் வழங்கினான்.


உபதீசனுக்கு காசியப்பன் என்றொரு மகனுள்ளான். அவன் சிறந்த வீரன். பதினாறு திறனுடைய தோழர்களைக் கொண்டிருந்தான். உபதீசன் அரசுரிமை பெற்றதும், சிலாகாலன் தனது உரிமையை நிலைநாட்ட விரும்பி மலையகத்தில் படை திரட்டி, அனுராதபுரத்தின் மீது தண்டெடுத்து



மெகாலனின் காலத்து சம்பவத்தை சித்தரிக்கும் சித்திரம்

வந்தான். இதனைக் கேள்வியுற்ற காசியப்பன், தன் தந்தை உபதீசன் கட்டளைப்படி, யானையில் அமர்ந்து தன் தோழர்களுடன் படை நாடாத்திச் சென்று சிலாகாலனை எதிர்கொண்டான். காசியப்பன் தோல்வியடைய நேரிட்டது. வயோதிபனான தந்தை உபதீசனையும் தாயையும் திரண்ட திரவியங்களையும் எடுத்துக் கொண்டு தப்பிஓட முயன்ற காசியப்பனின் முயற்சி தோல்வி கண்டது. அதனால் அவன் தற்கொலை செய்து கொண்டான். இதனை அறிந்த உபதீசன் மரணமடைந்தான்.

அதன் பின்னர் சிலாகாலன் முடிபுனைந்து கொண்டான். பதின்மூன்றாண்டுகள் ஆட்சி புரிந்தான். பல சமயப் பணிகளை நிறைவேற்றினான். சிலா காலனுக்கு மொகாலனன், தடாபபூதி, உபதீசன் என மூன்று புதல்வர்கள் இருந்தனர். மன்னன் உயிரோடிருக்கும் போதே, இலங்கையின் கிழக்குப் பிராந்தியத்தின் ஆதிபதாவாக (முடிக்குரிய இளவரசன்) மொகல்லானன் நியமிக் கப்பட்டிருந்தான். இரண்டாவது மகனான தடாபபூதி, மலையராஜாவாக நியமிக்கப்பட்டிருந்தான். தக்கிண தேசத்தின்




குட்டன் தடாகம்- அனுராதபுரம்

நிர்வாகம் அவனுக்குரியதாகவிருந்தது. மூன்றாவது புதல்வன் உபதீசன், தந்தையுடன் வாழ்ந்து வந்தான்.

சிலாகாலன் (கி.பி.522- கி.பி 535) ஆட்சியின் பன்னிரண்டாமாண்டு, ஒரு இளம் வர்த்தகன், இந்தியாவிலிருந்து தர்மதூது எனும் மகாயான பௌத்த நூலை இலங்கைக்கு எடுத்துவந்தான். அதனை வெகு மரியாதையுடன் ஏற்று, அதனைக் கொண்டுவந்து வர்த்தகனுக்கு ஏராளமான தங்கக் காசுகளையும் வழங்கினான். சிலாகாலன் இறந்ததும், கூடவே இருந்த உபதீசன் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண் டான். அதனைக் கேள்வுயுற்ற மலையராஜா தடாபபூதி விரைந்து வந்து தம்பியைக் கொன்று அரியாசனம் ஏறினான். அதனைக் கேள்வியுள்ள மொகல்லானன் கிழக்குப் பிராந்தியத்திலிருந்து பெரும் படையுடன் வந்தான். தடாபபூதியும் படைகளைத் திரட்டிக்கொண்டு எதிர்கொண்டான். "நமது உரிமையை நிலைநாட்ட எமது மக்கள் பலியாகக் கூடாது. ஆகவே, நானும் நீயும் தனித்துப்போராடி, சண்டையிட்டு உரிமையை நிலைநாட்டுவோம்" என மொகல்லானன் அறிவித்தான். இருசகோதரர்களும் தத்தமது யானைகளிளேறி ஆரோகணித்து, பஞ்ச ஆயுதங்களுடன் போரிட்டனர். போரில் தடாபபூதி தோல்வி காண நேர்ந்தபோது அவன் தனது கத்தியை எடுத்துக் கழுத்தினை அரிய முயல்வதைக் கண்ட தமையன், "வேண்டாம் அப்படிச் செய்யாதே" எனத் தடுத்தும்கேளாது, அவன் தற்கொலை புரிந்து கொண்டான். தடாபபூதியின் ஆட்சி ஆறுமாதங்கள், ஆறுநாட்கள் மட்டுமே நிலைத்திருந்தது.

அதன் பின்னர் மொகலானன், சூளமொகல்லானன் (கி.பி.535 கி.பி.555) என்ற நாமத்தோடு அரச கட்டிலமர்ந்தான். ஏனைய மன்னர்கள் போலப் பல சமயப்பணிகளைச் செய்தான்; கவிஞனாக விளங்கினான். கதம்பநதியை (அருவியாறு) அணை கட்டி பத்தசனவாவி, தனவாவி, கறித்தறவாவி ஆகிய குளங்களைக் கட்டுவித்தான்.

மொகலானனிற்குப் பின் அரசுரிமை தனது மகனான கீர்த்தி ஸ்ரீமேகனுக்குக் கிடைக்க வேண்டுமென்பதற்காகப் பட்டத்து மகாராணி, அரச உரிமையுடைய உறவினர்களை நஞ்சூட்டிக் கொன்று ஆட்சியில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தாள். மன்னன் இறந்ததும், கீர்த்தி ஸ்ரீமேகனை அரசனாக்கி அதிகாரத்தை ராணியே தன் கரங்களில் வைத்திருந்தாள். அதனால் நாட்டில் நிர்வாகம் ஊழல்கள் மலிந்து, கலவரங்கள் தலை தூக்கின. சிலாகாலன் அரசனாக விளங்கிய காலத்தில் சங்கில்லா என்ற கிராமத்தில், மௌரிய வம்சத்தைச் சேர்ந்த பஹாயாசிவா என்றொருவன் வசித்து வந்தான். அவனது மகன் அக்கபோதி என்பவனாவான். அத்தோடு பஹயசிவாவின் சகோதரி மகனாக மகாநாகன் உயர்ந்த கம்பீரமான தோற்றத்தினன். அக்கபோதி மிகுந்த அழகன். தனது பயத்தினாலும் மாந்திரிகன் ஒருவனின் உதவியாலும் மகாநாகன், மைத்துனன் அக்கபோதிக்குரிமையான உருகுணையின் ஆட்சியாளனாக மாறினான். தலைநகரில் சகோதரர்களிடையே ஏற்பட்டிருந்த (மொகலானன், தடாபபூதி, உபதீசன்) குழப்பத்தினைப் பயன்படுத்தி ஆட்சியைக் கைப்பற்ற படையுடன் விரைந்த மகாநாகன், மொகலானன் அரசனாகி விட்ட செய்தியைக் கேள்வியுற்று உருகுணைக்குத் திரும்பநேர்ந்தது. இப்போது கீர்த்திஸ்ரீமேகன் ஆட்சியில் குழப்பம் ஏற்பட்டிருப்பதை அறிந்து, ஏற்ற வாய்ப்பிற்காகக் காத்திருந்த மகாநாகன் அனுராதபுரத்திற்குப் படையுடன் விரைந்து ஆட்சியைக் கைப்பற்றி மன்னனானான். மௌரிய மரபினர் மீண்டும் ஆட்சிக்கு வந்தனர். தன் மைத்துனர் அக்கபோதியை அழைத்து, உபராஜா வாக்கினான். சமயப் பணிகளை ஏனைய மன்னர்கள் போல ஆற்றி முன்றாண்டு அனுராதபுர ஆட்சியாளனாக விளங்கி மரணமுற்றான். (தொடரும்)



காசியப்பனின் அரண்மனைச் சிதைவுகள்- அனுராதபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்துடனான தொப்புள்கொடி உறவை சீர்குலைப்பதே அரசாங்கத்தின் நோக்கம்

## மனோ கணேசன் தெரிவிப்பு

**தமிழகத்திற்கு புனிதயாத்திரை சென்ற சிங்கள-தமிழ் கத்தோலிக்க இலங்கை பிரஜைகள் வன்முறை மற்றும் அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுத்துள்ளார்கள். இந்த சம்பவங்களை ஜனநாயக மக்கள் முன்னணி வன்மையாகக் கண்டிக்கின்றது. எமது கண்டனங்கள் உடனடியாக இலங்கை, இந்திய அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் வெளியிடப்பட்டன.**

இந்த வன்முறை நடவடிக்கைகளை கண்டித்ததுடன் இந்த விடயம் தொடர்பான எமது நிலைப்பாடு முடிவுக்கு வரவில்லை. உண்மையில் இப்போதுதான் மெய்யான சிக்கல் ஆரம்பித்துள்ளதாக நினைக்கின்றேன்.

இந்த வன்முறை சம்பவங்கள் காரணமாக இலங்கை வாழ் தமிழர்கள், தமிழக முதல்வர் உட்பட அரசியல் தலைவர்களை கடுமையாக கண்டிக்க வேண்டும் என்றும் தகாத அரசியல் வார்த்தைகளாலும் செயல்களாலும் அவர்களை அவமானப்படுத்த வேண்டும் என்று இலங்கையின் பெரும்பான்மை இனவாதம் பெருவிருப்புடன் எதிர்பார்க்கிறது.

அதாவது இலங்கை வாழ் தமிழர்களைக் கொண்டே தமிழக தலைவர்களையும் மக்களையும் கோபப்படுத்தி அதன்மூலம் எமக்குள் இருக்கின்றதாக சொல்லப்படும் தொப்புள்கொடி உறவை அறுத்து எறிய இந்த துரதிர்ஷ்ட நிகழ்வுகளை பயன்படுத்த இனவாத சக்திகள் விரும்புகின்றன.

இந்த அடிப்படையில்தான் கொழும்பில் தமிழ் வர்த்தகர்களைக் கொண்டு ஒரு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழக முதல்வரை ஆபாசமாக வர்ணிக்கும் சித்திரக்காட்சிகளும் முன்னெடுக்கப்பட்டன. உண்மையில் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பெரும்பாலான அப்பாவி தமிழ் வர்த்தகர்களுக்கு இது தொடர்பில் எதுவும் தெரியாது. வர்த்தக சமூகத்தை இது தொடர்பில் நாம் ஒருபோதும் குறை சொல்ல முடியாது. பல்வேறு அழுத்தங்களுக்கு முகம்கொடுத்து வாழ வேண்டிய சூழலில் அவர்கள் உள்ளார்கள்.

ஆனால், இந்த எதிர்ப்பு நிகழ்வுகளை முன்னெடுத்துள்ள நாம் தமிழர், ம.தி.மு.க. ஆகிய கட்சியினரின் வாதம் வேறுவிதமாக இருக்கின்றது.

நாம் இத்துனை நாட்களாக இலங்கை தமிழர்களுக்காக உண்ணாவிரதம் இருந்தோம். இலங்கை தூதுவராலயத்தின் முன்னால் சென்று ஆர்ப்பாட்டம் செய்தோம். எம்மை எவரும் இந்திய அரசு உட்பட சட்டை செய்யவில்லை. ஆனால், இப்போது தமிழகம் வரும் இலங்கை சிங்கள மக்களை தேடிச் சென்று விரட்டி அடித்தவுடன் இது பாரிய பிரச்சினையாக மாறியுள்ளது. இது தான் எமக்கு கிடைத்துள்ள வெற்றி என்பதுவே அவர்களின் வாதம்.

இலங்கை அரசு, இந்திய மத்திய அரசுடன் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை கையெழுத்திட்டது. கோர இறுதி யுத்தம் நடைபெறும் போது 13 பிளஸ் என்ற வாக்குறுதியை அளித்தது. இலங்கை அரசின் வாக்குறுதிகளை அடிப்படையாகக்கொண்டு இந்திய வாழ் தமிழ் மக்களுக்கு வாக்குறுதி அளித்தது.

அதுமட்டும் அல்ல. மறுபுறத்தில் இலங்கை அரசின் கோர யுத்த நடவடிக்கைக்கு முழுமையான ஒத்துழைப்பை இந்தியாவின் காங்கிரஸ் அரசு வழங்கியது. இது வெறும் ஆயுத உதவி மட்டுமல்ல. யுத்தத்தின்போது மேற்கு நாடுகளும் ஐ.நா. சபையும் இலங்கை அரசை கட்டுப்படுத்த முயன்ற போது அதற்கு தடை போட்டதும் இந்திய அரசுதான். கடைசிக் கட்டத்தில் சர்வதேச சமூகம் நேரடி தலையீடு செய்து சாதாரண மக்களை காக்க முயன்றதையும் தடுத்தது இந்தியாதான் என்பது ஆய்வாய்வாளர்களின் கருத்து ஆகும்.

இதையெல்லாம் மறந்துவிட்டு இன்று இந்தியா, இலங்கை அரசுடன் அரசியல் சடு-குடு விளையாடிக் கொண்டிருக்கிறது. இந்த நிலைமையை பயன்படுத்திக்கொண்டு இன்று இலங்கை அரசு இந்திய அரசுக்கு தந்த எல்லா வாக்குறுதிகளையும் உடன்பாடுகளையும் குப்பையில் தூக்கி போட்டுவிட்டது. இதனால் அரசியல் அதிகாரத்தை பகிரும் அரசியல் தீர்வைக்கொண்டு வரச்செய்வோம் என்று இந்திய அரசு இலங்கை தமிழ் மக்களுக்கு அளித்த வாக்குறுதியை இன்று வரை நிறைவேற்றவில்லை.

புலிகளை அழிக்கின்றோம் என்று சொல்லிவிட்டு சாதாரண தமிழ் பொதுமக்களைக் கொன்று குவித்துவிட்டு இன்றளவும் புலிகளை பற்றி பேசியே இலங்கை அரசு காலத்தை கடத்துகிறது. இது தொடர்பில் இந்தியா இடைக்கிடை கேள்வி எழுப்பும் போதெல்லாம் சீனா என்ற ஆயுதத்தை மடியில் இருந்து எடுத்து இலங்கை காட்டுகிறது.

இன்று கோர யுத்தம் முடிவடைந்து மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. இதுவரையிலும் இலங்கைத் தமிழர் சிக்கலில் ஒரு அடிகூட முன்னேற்றம் இல்லை.

இதுதான் இன்றைய இலங்கை தமிழர் ஆதரவு தமிழக கட்சிகளின் கிளர்ச்சிகளுக்கு (புலம்பெயர்ந்த நாட்டு தமிழர்களின் கிளர்ச்சிகளுக்கும் உள்நாட்டில் தமிழர் மத்தியில் அமைதி இன்மைக்கும்) அடிப்படை காரணங்களாகும்

எனவே, இலங்கை தமிழர் தொடர்பாக இந்திய மத்திய அரசுக்கு இருக்கும் பெரும் தார்மீக கடப்பாட்டை மத்திய அரசு இனியாவது உணர வேண்டும். இலங்கையில் யுத்தத்திற்கும் சமாதானத்திற்கும் இடையில் நந்தியாக இருப்பது சிங்கள பேரினவாதம் என்பதை இந்தியா உணர வேண்டும். இதுதான் இன்று தமிழகம் வரை சென்று அங்கேயும் கிளர்ச்சிகளை தூண்டிவிட்டுள்ளது. இதுதான் தமிழக கிளர்ச்சிகளுக்கு அடிப்படைக்காரணம். (அ-2)

# இலங்கையிலிருந்து வெளியேறிய ஊடகவியலாளர்களின் தகவல் படம்

## மெல்பேர்னில் வெளியீடு

(கொழும்பு)

இலங்கையிலிருந்து வெளியேறிய ஊடகவியலாளர்களின் கதைகளை கொண்டு தயாரிக்கப்பட்ட திரைப்படம் அவுஸ்திரேலியா மெல்பேர்னில் கடந்த 6 அம் திகதி காண்பிக்கப்பபட்டது.

இதில் இலங்கையில் இருந்து வெளியேறிய மூன்று ஊடகவியலாளர்களின் தகவல்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

இதில் சோனாலி விக்ரமதுங்க தமது கணவர் இலங்கை அரசாங்கத்தின் முகவர்களாலேயே கொல்லப்பட்டதாக தெரிவித்துள்ளார். இலங்கையின் விடயத்தில் ஐக்கிய நாடுகளின் தலையீடு சாத்தியமற்றுப்போனமை மற்றும் போர்க்குற்றங்களின் பின்னால் இலங்கையின் இராணுவ அதிகாரிகள் செயற்பட்டமையையும் இந்த திரைப்படம் காட்டுகின்றது.

தமிழ்நெற் இணையத்தளத்தின் ஊடகவியலாளர் லோகீஸன் போரின் போது பொதுமக்கள் இலக்குகள் மீது இலங்கை படையினர் குண்டு வீச்சு மேற்கொண்ட புகைப்படங்களை இந்த திரைப்படத்தில் காட்டுகிறார். இந்த படங்கள் தமிழ்நெற்றில் வெளியான போதும் அதனை உலக ஊடகங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதனை திரைப்பட தயாரிப்பாளரும் நோர்வேஜிய ஊடகவியலாளருமான பீட்டி ஆன்ஸ்டெட் நடத்தினார். இதன்போது கருத்துரைத்த பாஸன அபேவர்த்தன போர் முடிந்துள்ள போதும் இலங்கை தமிழர்கள் தொடர்ந்தும் அடக்குமுறைகளுக்கு [illegible] வருவதாக குற்றம் சுமத்தினார். (அ-2)

# யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் நடத்தும் பாரதி விழா-2012

**இடம்** :- நல்லூர் துர்க்கா மணிமண்டபம்
**காலம்** :- 11.09.2012 செவ்வாய்க்கிழமை
**நேரம்** :- காலை 9.00 மணி

### காலை அமர்வு

**நேரம்** :- காலை 9.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணி வரை
**தலைவர்** :- வண. கலாநிதி நீ.மரியசேவியர் அடிகள்

**நிகழ்வுகள்**

- மங்கல இசை- "நாதஸ்வர இளவரசு", ஈழ நல்லூர் பி.எஸ்.பாலமுருகன் குழுவினர்
- மங்கல விளக்கேற்றல்
- தமிழ்மொழி வாழ்த்து- யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவியர்
- தமிழ்த் தெய்வ வணக்கம்- யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவியர்
- வரவேற்புரை- திரு. லோ.துஷிகரன் (ஆட்சிக்குழு உறுப்பினர், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம்)
- வாழ்த்துரை- சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திஹரக்குருக்கள் (ஆட்சிக்குழு உறுப்பினர், யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம்)
- தலைமையுரை
- மாணவர் அரங்கம்

பொருள் :- 'எங்கள் பார்வையில் பாரதி'

பங்கேற்போர்:
- பாரதியின் சமூகம் — செல்வன் எ.ஜெனால்ட் (மாணவன், புனித பத்திரிசியார் கல்லூரி)
- பாரதியின் உரைநடை — செல்வன் ப.ஜெகநாதன் (மாணவன், யாழ்.மத்திய கல்லூரி)
- பாரதியின் கவித்துவம் — யோ.கௌதமி (மாணவி, மானிப்பாய் மகளிர் கல்லூரி)

நெறியாளர் :- திரு.சிவ.மகாலிங்கம் (துணைத்தலைவர், யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம்)

- இறுவெட்டு வெளியீடு :- "மகாகவி பாரதி"
  வெளியீட்டுரை:- திரு.ச.லலீசன் (துணைச் செயலர், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம்)
  முதற்பிரதி பெறுநர்:- திரு.க.அருள்நேசன் (உரிமையாளர், சிவகணேசன் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்)
- சிறப்புரை :- கலாநிதி றமீஸ் அப்துல்லா, தலைவர், மொழி பண்பாட்டுத்துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
  பொருள்: பாரதியின் பன்முக ஆளுமையும் புனைதிறனும்
- தமிழ்ச்சங்கத்தின் மாணவ அங்கத்தவரிடையே நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக்கொண்டவர்களின் பேச்சு
- நன்றியுரை:- திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் (ஆட்சிக்குழு உறுப்பினர், யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம்)

**நிகழ்ச்சி முன்னிலைப்படுத்தல்**
கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
(ஆட்சிக்குழு உறுப்பினர், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம்)

### மாலை அரங்கு

**நேரம்** :- பி.ப.3.30 மணி தொடக்கம் இரவு 8.00 மணி வரை
**தலைவர்**:- பேராசிரியர் அ.சண்முகதாஸ் (தலைவர், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம்)

**நிகழ்வுகள்**

- மங்கல விளக்கேற்றல்
- தமிழ்மொழி வாழ்த்து :- யாழ்.கனகரத்தினம் மத்திய ம.வி. மாணவியர்
- தமிழ்த் தெய்வ வணக்கம் :- யாழ்.கனகரத்தினம் மத்திய ம.வி. மாணவியர்
- வரவேற்பு நடனம் :- யாழ்.கனகரத்தினம் மத்திய ம.வி. மாணவியர்
- வரவேற்புரை :- திரு.நாக.தமிழிந்திரன் (துணைச்செயலர், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம்)
- தலைமையுரை
- கவியரங்கம்

பொருள்: "கனவு மெய்ப்பட வேண்டும்"
தலைவர்: கவிஞர் சோ.பத்மநாதன் (தலைவர், சைவவித்தியா விருத்திச்சங்கம்)
பங்கேற்போர் :
- கவிஞர் த.ஜெயசீலன் (பிரதேச செயலர், பருத்தித்துறை)
- கவிஞர் கு.றஜீவன் (ஆட்சிக்குழு உறுப்பினர், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம்)
- கவிஞர் த.நாகேஸ்வரன் (தமிழாசிரியர்)

- சிறப்புரை :- கலாநிதி ஆறு.திருமுருகன் (துணைத் தலைவர், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம்)
  "பாரதி கண்ட தெய்வீகம்"
- ஆடலளிக்கை :- யாழ்.கனகரத்தினம் மத்திய ம.வி.
- நூல் வெளியீடு :- பாரதியின் புலமைத்துவம்
  வெளியீட்டுரை : திரு.எஸ்.சத்தியசீலன் (செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வட மாகாணம்)
  அறிமுகவுரை :பேராசிரியர் கி.விசாகரூபன் (ஆட்சிக்குழு உறுப்பினர், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம்)
- இசை நாடகம் :- பாஞ்சாலி சபதம்
  வழங்குவோர்: யாழ்.நாட்டார் வழக்கியல் கழகம்
- நன்றியுரை :- திரு.இரா.செல்வவடிவேல் (பொதுச் செயலர், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம்)

**நிகழ்ச்சி முன்னிலைப்படுத்தல்**
பேராசிரியர் தி.வேல்நம்பி
(பொருளாளர், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

(இ) **யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸிக்கு அனுப்புமாறுகோரி இலங்கை அகதிகள் உண்ணாவிரதம்

(சென்னை)


இலங்கையில் இருந்து கடல் மார்க்கமாக இந்தியாவிற்கு மீண்டும் படகு மூலம் தமிழகத்தில் இருந்து அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 53 போ இந்தோனேசியக் கடற்படையால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தம்மை அவுஸ்திரேலியா செல்ல அனுமதிக்க வேண்டும் என்றுகோரி தடுத்து வைக்கப்பட்டவர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டு வருகின்றனர்

இது குறித்து பீபீசி தமிழோசையிடம் அவர்கள் கருத்து தெரிவிக்கையில், தம்மை குடிபெயர்ந்தோருக்கான சர்வதேச நிறுவனமான ஐஓம் இடம் ஒப்படைக்க வேண்டும் அல்லது இந்தோனேசியாவில்உள்ளஅவுஸ்திலேியஉயர்ஸ்தானிகரிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் அல்லது தமது பயணத்தை தொடர 2ஆயிரம்லீற்றர்டீசல்வழங்கவேண்டும்என்று கோரியே போராட்டம் நடப்பதாக தெரிவித்தார்.

இந்தோனேசியாவின் மென்டாவி தீவின் உள்ளூர் நிர்வாகத்தின் துணைத்தலைவர் யூதாஸ் சபர்கலேட்டிடம் இந்த சம்பவம் குறித்து கேட்டபோது, கடந்த வாரம் இரண்டு படகுகளில் இலங்கைத் தமிழர் வந்ததாக கூறினார்.

முதல் படகில் 43 பேரும் இரண்டாம் படகில் 53 பேரும் வந்ததாகவும் இரண்டாம் படகில் வந்தோர் தான் தற்போது உண்ணாவிரதம் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (அ)



வல்வெட்டித்துறை இலங்கை வங்கி கிளையில் தன்னியக்க பணப்பரிமாற்று இயந்திரத்தினை (A.T.M) வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் கே.ஈ.டி. சுமணசிறி, முன்னாள் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் என்.சிவரட்ணம் ஆகியோர் இணைந்து நாடாவெட்டி திறந்து வைப்பதையும் அருகில் இக்கிளையின் முகாமையாளர் சி.சிறிகாந்தன் மற்றும் பருத்தித்துறை கிளையின் முகாமையாளர் எஸ்.தர்மராஜா ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# இன்டர்போலினால் தேடப்படும் சீன கொள்ளையர்கள் இலங்கையில்?

இன்டர்போல் எனப்படும் சர்வதேச பொலிஸாரினால் தேடப்பட்டு வரும் சீன கொள்ளைக் கூட்டமொன்று இலங்கையில் தங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இரத்தினக்கல் கண்காட்சியில் 18 மில்லியன் பெறுமதியான இரத்தினக்கல்லை விழுங்கிய நபருடன் மேலும் இருபது சீனர்கள் இவ்வாறு இலங்கையில் தங்கியிருப்பதாக விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

இந்தக் கும்பல் பல்வேறு நாடுகளுக்கு விஜயம் செய்து இரத்தினக்கல் கொள்ளையில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. போலியான இரத்தினக்கற்களை வைத்து உண்மையான கற்களை களவாடி வருவதாக குறிப்பிடப்படுகிறது.

கைது செய்யப்பட்டுள்ள சீன பிரஜை மலேசியா, சிங்கப்பூர், கொரியா உள்ளிட்ட பல நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளார்.

தலைமறைவாகியுள்ள ஏனைய சந்தேக நபர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கொழும்பில் களவாடி விழுங்கிய பெறுமதிமிக்க இரத்தினக்கல் குறித்த சீனரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளது. (அ-2)

# நாட்டில் இரத்தம்சிந்த இடமளிக்கமாட்டேன்

## அமைச்சர் மேர்வின் திட்டவட்டம்

(கொழும்பு)

30 வருடங்களாக இரத்தம் சிந்திய இந்த நாட்டில் ஆலயங்கள் என்ற பெயரில் மீண்டும் இரத்தம் சிந்த நான் ஒருபோதும் இடமளிக்கமாட்டேன் என்று அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயத்தில்நடைபெறும்பலிபூஜையை நிறுத்தும்படி ஓமாரே காசியப்பதேரர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து பொலிஸார் இவ்விடயத்தை சிலாபம் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

இச்சந்தர்ப்பத்தில் நீதிமன்றத்துக்கு வருகை தந்திருந்த அமைச்சர் மேர்வின் சில்வாஅங்கிருந்த ஊடகவியலாளர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்

பிரபாகரனுக்கே நான் சவால் விடுத்திருக்கின்றேன். அதேபோல் நான் எவ்வாறாயினும் இந்த மிருகபலி பூஜையை தடுத்து நிறுத்தியே தீருவேன். முதலில் நாம் நீதிமன்றத்தை நாடுவோம். மதிக்கின்றோம். இருந்தும் நான் மிருகங்கள் பலியிடுவதை எவ்வாறாயினும் தடுத்து நிறுத்துவேன் என உறுதியளிக்கிறேன்.

பலி பூஜையை நிறுத்தினால் தெய்வத்தின் கோபத்துக்குள்ளாக வேண்டுமென யாராவது கூறினால் தெய்வம் எனது கழுத்தை வெட்டட்டும், எனது இரத்தத்தை உறிஞ்சட்டும். எந்த விதத்திலாவது நான் இந்த மிருகபலி பூஜையை தடுத்து நிறுத்துவேன். இவ்வாறு அவர் தெரிவித்தார். (அ-9)

# விசேடகல்வி நூற்றாண்டுக்கான போட்டியில் வெற்றிபெற்றோர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விசேட கல்வி மன்றத்தினால் விசேட கல்வி நூற்றாண்டையொட்டி வடமாகாண பாடசாலை மாணவர்களுக்கான சித்திரப் போட்டி முடிவுகளை கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார்.

இப்போட்டிகளில் மாவட்ட மட்ட ரீதியாக முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களது பெயர் விபரங்கள் வருமாறு,

**யாழ்.மாவட்டம்**

**ஆரம்பப்பிரிவு 1-5**

நிலக்ஷன் குரோஸ் (யா/சென் ஜோன்ஸ் கல்லூரி), எ.அபிஷாந்த் (யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி),முரளிதரன் நிதுஜன் (யா/அச்சுவேலி ஆரம்ப பாடசாலை),ப.பிரணவன் (யா/சென் ஜோன்ஸ் கல்லூரி)

**கனிஷ்ட இடைநிலை பிரிவு 6-9**

தி.திஜிதரன் (யா/அச்சுவேலி மத்திய கல்லூரி), வ.கஜீபன் (யா/இணுவில் மத்திய கல்லூரி), மு.சர்மினி (யா/தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலயம்), ப.செரோன் (யா/சென் ஜோன்ஸ் கல்லூரி)

**சிரேஷ்ட இடைநிலை 10-11**

பு.இளவரசன் (யா/இணுவில் இந்துக் கல்லூரி), து.உதயகுமாரன் ராம்கி (யா/அச்சுவேலி மத்திய கல்லூரி), ச.பானுஜா (யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), ப.அருண்ராஜ் (யா/அச்சுவேலி மத்திய கல்லூரி)

**மேற்பிரிவு**

சி.டினேசன் (யா/இணுவில் மத்திய கல்லூரி), சோ.வரகுலன் (யா/இணுவில் மத்திய கல்லூரி), ர.மதனிகா (யா/அச்சுவேலி மத்திய கல்லூரி), பா.கஜீபன் (யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்)

**வவுனியா மாவட்டம்**

**ஆரம்பப்பிரிவு 1-5**

யோ.நிலக்சனா (வ/பட்டிகுடியிருப்பு அ.த.க.பாடசாலை), கோ.கீர்த்திகா (வ/பட்டிகுடியிருப்பு அ.த.க.பாடசாலை), ம.கோபிகா (வ/பட்டிகுடியிருப்பு அ.த.க.பாடசாலை)

**இடைநிலை பிரிவு**

ஜீ.ருசிகரன் (வ/பட்டிகுடியிருப்பு அ.த.க. பாடசாலை),ம.நிலான் (வ/பட்டிகுடியிருப்பு அ.த.க. பாட சாலை),இ.நிரஞ்சனா (வ/பட்டிகுடியிருப்பு அ.த.க. கபாடசாலை)

**மன்னார் மாவட்டம்**

**ஆரம்ப பிரிவு 1-5**

லி.கிஷானந்தனா (ம/புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை), எஸ்.அனுஷா (ம/புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை), எஸ்.சிவானிகா (யா/புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை), வை.தக்ஷா (ம/புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை)

**இடைநிலை பிரிவு**

மரியகொன்சிகா (ம/புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை), பாத்திமா நிப்லா (ம/புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை), எலனா கிரிஸ்டல் ஓலியா பெர்னாண்டோ (ம/புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை)

**மேற்பிரிவு**

ச.அனோஜா (ம/புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை), ட.தர்சிகா (ம/புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை)

**முல்லைத்தீவு மாவட்டம்**

**ஆரம்பப்பிரிவு 1-5**

சி.கமல்ராஜ் (மு/மல்லாவி ம.க), தே.திருசயன் (மு/மல்லாவி ம.க.)

**இடைநிலை பிரிவு**

(ஆ.அண்டனி விதுர்சன் (மு/முல்லைத்தீவு ம.வி), அண்டனி சியாந் (மு/முல்லைத்தீவு ம.வி), ம.திசாந்த் (மு/மல்லாவி ம.க)

**மேற்பிரிவு**

வீ.டமருகா (மு/புதுக்குடியிருப்பு ம.வி)

**கிளிநொச்சி மாவட்டம்**

**ஆரம்பப்பிரிவு 1-5**

சி.துவிபன் (கிளி/கனகபுரம் ம.வி), ர.அபிசர் (கிளி/கனகபுரம் ம.வி.),ஜீ.சாறுஜன் (கிளி/கனகபுரம் ம.வி)

**இடைநிலைப்பிரிவு**

சி.ஜெகஸ்ரிகா (கிளி/கனகபுரம் ம.வி), நி.துலக்சிகன் (கிளி/கனகபுரம் ம.வி), கே.திருமகன் (கிளி/கனகபுரம் ம.வி)

(அ-9)

# கற்குவாரி வீதியை புனரமைக்க கோரிக்கை

(மல்லாவி)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் புறநெகும திட்டத்தின்கீழ் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட மாங்குளம் கற்குவாரி வீதிப்புனரமைப்பானது 77 இலட்சம் ரூபா செலவில் ஒப்பந்தகாரரிடம் புனரமைப்பு பணிக்காக கையளிக்கப்பட்டிருந்தது.

ஆயினும் வேலைகள் பூர்த்தியடையாமையால் இப்பகுதி ஊடாக போக்குவரத்து செய்யும் மக்கள் பாதிப்படைவதாக விசனம் தெரிவித்துள்ளனர். இவ்வீதியானது 1 1/2 கிலோமீற்றர் கொண்டதும் கற்குவாரி கிராமத்தில் உள்ள 68 குடும்பங்களின் பிரதான வீதியாகவும் உள்ளது.

இவ்வீதி போருக்கு முன்னர் பலத்த சேதம் அடைந்திருந்ததன் காரணமாக மீள்குடியேறிய பின்னரும் மக்கள் பல்வேறு இடர்களுக்கு மத்தியில் பயணத்தை மேற்கொள்கின்றனர்.

இவ்வீதியில் தார் ஊற்றி கழிவுநீர் பாலங்கள் அமைத்து புனரமைப்பதற்காக ஒப்பந்தகாரர்களிடம் கொடுக்கப்பட்டு கடந்த ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதியுடன் வேலைகள் முடிவடைய வேண்டியநிலையில் இருந்தது. தற்போதும் வேலைகள் பூர்த்தியாகாது இருப்பதனால் எதிர்வரும் மழைகாலத்திற்கு முன்னர் சம்பந்தப்பட்ட தரப்பினர் இதனில் தலையிட்டு புனரமைப்பு வேலைகளை விரைவாக பூர்த்தி செய்து தர வேண்டுமென மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-3-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழரின் சுயநிர்ணய உரிமை கோரிக்கைக்கு சமவுடமைவாதிகள் ஆதரவு

**அண்மையில் மெல்போர்னில் இடம்பெற்ற *சோஷலிஸ்ட் எலையன்ஸ்* சந்திப்பில், இதன் மெல்போர்ன் கிளை உறுப்பினரான *கிறிஸ் ஸ்லீ* வழங்கிய உரையைத் தழுவி ஆக்கப்பட்ட கட்டுரை-*கிறீன் லெஃவ்ட் வீக்லி* வெளியிட்டது**

சமவுடமை கூட்டணியானது தமிழ் மக்கள் தமக்கான சுய நிர்ணய உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு ஆதரவளிக்கின்றது. "இலங்கையில் வாழும் தமிழ்மக்கள் அடக்கியாளப் படுகின்றனர் என்பதை சமவுடமை கூட்டணியானது இனங்கண்டுள்ளது. இவ்வாறு அடக்கப்பட்டு வாழும் தமிழ் மக்கள் அவர்களுக்கான சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக்கொள்வதில் சமவுடமைக் கூட்டணியானது தனது ஆதரவை வழங்குகிறது" என இதன் தேசிய கருத்தரங்கில் எடுக்கப்பட்ட தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"தமிழ் மக்கள் ஐக்கிய இலங்கைக்குள் வாழ விரும்புகிறார்களா? அல்லது இலங்கையிலிருந்து பிரிந்து சென்று தமிழர்கள் தமது பாரம்பரிய வாழிடங்களான நாட்டின் வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் தமக்கான சுதந்திர தமிழர் தேசமொன்றை உருவாக்க விரும்புகின்றார்களா? அல்லது இரண்டுமில்லாத நடுநிலையான இணையாட்சி நிர்வாகம் போன்ற வேறுவகையான தன்னாட்சி உரிமையைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறார்களா? இவற்றில் எத்தெரிவையும் தமிழ்மக்கள் தாமாகவே தெரிவு செய்வதற்கான உரிமையைக் கொண்டிருக்க வேண்டும். இதுவே தமிழ் மக்களுக்கான சுயநிர்ணய உரிமையாகும்".

"இலங்கையானது தொடர்ந்தும் தனிநாடாக இருக்கலாம் அல்லது தமிழர் பிரதேசங்கள் பிரிந்து செல்லலாம். ஆனால், எது எவ்வாறிருந்தாலும், இலங்கையில் வாழும் சிறுபான்மை மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். இதில் தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் சிங்களப் பிரதேசங்களில் வாழும் சிறுபான்மையினரின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும். இதேபோன்று தமிழ்ப் பிரதேசங்களில் வாழும் முஸ்லிம் மற்றும் சிங்களவர்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும்".

இவ்வாறான சிறுபான்மையினரின் அரசியல், மத, மொழி சார் உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என சமவுடமை கூட்டணி கோரிக்கை விடுக்கின்றது. தமிழ் மக்கள் தாம் வாழும் இலங்கைத் தீவிலிருந்து பிரிந்து சென்று அவர்களுக்கான சொந்த நாடொன்றை உருவாக்கிக் கொள்வதற்கு சமவுடமை கூட்டணியானது, ரஷ்ய புரட்சியின்போது கைக்கொள்ளப்பட்ட லெனின் கோட்பாட்டை ஒத்த ஆதரவை வழங்கி நிற்கிறோம்.

பல்வேறு தேசியங்களைச் சேர்ந்தவர்கள் இணைப்பாட்சி நிர்வாகத்தின் கீழ் ஒன்றாக வாழ்வதற்குரிய நிலைப்பாட்டை லெனின் உருவாக்கியிருந்தார். ரஷ்ய புரட்சி முடிந்ததன் பின்னர், ரஷ்யப் பேரரசின் ஒருபகுதியாக காணப்பட்ட சடவுடமை சோவியத் குடியரசின் கீழ் பல்வேறு தேசியங்களைச் சேர்ந்த மக்களும் இணைந்து கொண்டனர்.

இதேபோன்று இலங்கையில் வாழும் தமிழ்மக்களுக்கு இணையாட்சி நிர்வாக கட்டமைப்பின் கீழ் உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.

தாம் வாழ்வதற்கான தெரிவை தமிழ்மக்கள் மட்டுமே தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். இந்த உரிமை அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். அவுஸ்திரேலியாவில் வாழும் சமவுடமைவாதிகள் பல ஆண்டுகளாக தமிழ் மக்களின் உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என ஆதரித்து தமது பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

1983 களில் சமவுடமை தொழிலாளர் கட்சியின் உறுப்பினராக செயற்பட்டேன். இது பின்னர் ஜனநாயக சமவுடமை கட்சி எனப் பெயர் மாற்றப்பட்டது. 1983 இல் இலங்கை அரசாங்கத்தால் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட படுகொலைகளை நாம் கண்டித்து ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டிருந்தோம். [illegible] இலங்கை தமிழ் சங்கத்துடன் இணைந்து நாம் கண்டன ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டோம்.

2001 இல் சமவுடமை கூட்டணி உருவாக்கப்பட்டபோது தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்கும் எமது செயற்பாடுகளும் தொடரப்பட்டன. நாங்கள் தமிழ் மக்களின் உரிமைக்காக பல்வேறு பரப்புரைகளை மேற்கொண்டுள்ளோம். அவுஸ்திரேலிய தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அகதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி நாம் பரப்புரைகளை மேற்கொண்டுள்ளோம். அத்துடன் தமிழ் செயற்பாட்டாளர்களைக் குறிவைத்து அமுல்படுத்தப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களையும் நாம் எதிர்த்து நிற்கின்றோம்.

1950 மற்றும் 60 களில் இலங்கையில் வாழ்ந்த தமிழ்மக்கள் தமக்கெதிராக நிறைவேற்றப்பட்ட பல்வேறு சட்டங்களை அமைதி வழிமுறையில் எதிர்த்து நின்றனர். அதாவது, 1956 இல் உருவாக்கப்பட்ட சிங்களம் மட்டுமே உத்தியோகபூர்வ மொழி என்கிற சட்டம் மற்றும் கல்வி அரசாங்கத் தொழில் வாய்ப்புகளில் தமிழ்மக்களை பாரபட்சப்படுத்தி நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் போன்றவற்றை எதிர்த்து தமிழர்கள் அமைதி வழி முறையில் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர்.


இவ்வாறு தமிழ் மக்களால் அமைதி வழியில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டங்களை இலங்கை இராணுவத்தினரும் காவற்றுறையினரும் வன்முறைகள் மூலம் எதிர்த்து நின்றனர். அத்துடன் அரசியல்வாதிகள் மற்றும் பௌத்த பிக்குகளால் ஆதரவளிக்கப்பட்ட சிங்களக் குண்டர்கள் பல்வேறு வழிகளில் வன்முறைகளில் ஈடுபட்டனர்.

1956 தொடக்கம் தமிழ் மக்களுக்கெதிராக வன்முறைகள் தொடர்ச்சியாக கட்டவிழ்த்து விடப்படுகின்றன. 1983 கறுப்பு ஜூலை இனக்கலவரத்தின் போது 3 ஆயிரம் தமிழ்மக்கள் படு கொலை செய்யப்பட்டனர். இவ்வாறான விளைவுகளால் பெரும்பாலான தமிழ்மக்கள் தனிநாடு வேண்டும் எனத் தீர்மானித்தனர்.

மே 1976 தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியானது தனித் தமிழ் தாய்நாடு கோரி வட்டுக் கோட்டை தீர்மானத்தை நிறைவேற்றியது.

ஜூலை 1977 தமிழர் ஐக்கிய முன்னணியானது, இலங்கை நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டதும் தமிழர்களுக்கு சுதந்திரம் வழங்கப்பட வேண்டும் என்பதை முன்வைத்து தேர்தலில் போட்டியிட்டபோது, தமிழர் பிரதேசங்களில் பெரும்பான்மை ஆசனங்களைக் கைப் பற்றிக் கொண்டது.

அமைதி வழிமுறையிலான ஆர்ப்பாட்டங்களும், தேர்தல் பரப்புரைகளும் பயனற்றது எனக் கருதிய தமிழ் இளையோர் குழு ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தது. இது தமிழ் தாய்நாட்டை சட்ட ரீதியற்ற முறையில் பெற்றுக்கொள்ள முயற்சிக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டது. இவ் ஆயுதப் போராட்டத்துக்காக பல்வேறு ஆயுதக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு மிகப் பலம் பொருந்திய அமைப்பாகக் காணப்பட்டது.



விடுதலைப்புலிகள் ஆயுதம் தூக்கிப் போராடியது பிழை என நான் கூறவில்லை. ஆனால், இரக்கமற்ற இலங்கை அரசுக்கு எதிராக புலிகள் அமைப்பால் மேற்கொள்ளப்பட்ட யுத்த முறைமை சில சந்தர்ப்பங்களில் நேர்மையற்ற நடவடிக்கைகளைக் கொண்டதாகக் காணப்பட்டது. இது முக்கிய சில தரப்புக்களை ஓரங்கட்ட வழிகோலியது. சிங்கள மக்களுக்கு எதிராக புலிகள் அமைப்பின் சில வன்முறை நடவடிக்கைகள் அமைந்திருந்தன. சில வன்முறைகள் ஏனைய தமிழ்க் குழுக்களுக்கு எதிராகவும், வேறு சில முஸ்லிம் மக்களுக்கு எதிராகவும் மேற்கொள்ளப்பட்டன. இதனால், கிழக்கில் வாழ்ந்த தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட, இச்சந்தர்ப்பத்தை இலங்கை அரசாங்கம் பயன்படுத்திக்கொண்டது.

நன்றி: இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக பொருளாதாரம் மாபெரும் புயலை சந்திக்கப்போகிறது

## நிபுணர்கள் எச்சரிக்கை

உலகப் பொருளாதாரம் மாபெரும் புயலை சந்திக்கவுள்ளதாக நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். இத்தாலியின் கோமோ ஏரியின் அருகே உள்ள செர்னோபியோ நகரில் ஆண்டுதோறும் உலகப் பொருளாதார நிபுணர்கள் கூடி விவாதிப்பது வழக்கம்.

அம்றோசெற்றி போறும் என அழைக்கப்படும் இந்த மாநாட்டில் உலகத் தலைவர்களும் சர்வதேச நிதி விவகாரங்களில் முக்கிய பங்கு வகிக்கும் நிபுணர்கள் கலந்து கொள்வர். இவ்வாண்டுக்கான கூட்டம் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

இதன்போது உரையாற்றிய பெரும்பாலான சர்வதேச நிபுணர்கள் உலகம் ஒரு மாபெரும் பொருளாதர புயலை சந்திக்கப் போவதாக எச்சரித்துள்ளனர்.

ஐரோப்பாவில் நிலவும் பொருளாதார தேக்கம் தொடரப் போகிறது. அமெரிக்க பொருளாதாரத்தை அந்நாட்டு அரசியல் போட்டி கீழே தள்ளிவிடப் போகிறது.

இந்தியா, சீனா, பிரேசில், தென்னாபிரிக்கா உள்ளிட்ட வளரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சி விகிதம் குறைய ஆரம்பித்து விட்டது. இத்தோடு ஈரானின் அணு ஆயுத விவகாரத்தால் நிலவும் ஆபத்தான சூழல் இவை அனைத்தும் சேர்ந்து உலகை ஒரு புரட்டு புரட்டி போடப் போகின்றன.

அமெரிக்கா ஐரோப்பிய நாடுகளின் அதிகரித்து வரும் கடன்சுமையும் அந்நாடுகளின் அரசியல் நிலவரமும் உலகை வாட்டும் முக்கியமான கவலைக்குரிய விடயங்கள் என்று கூறும் நிபுணர்கள் இதனால் யூரோ நாணயத்தின் மதிப்பு அதிவேகமாக சரிந்து வருவதையும் சுட்டிக்காட்டினர்.

இந்நிலையில் உலகின் பணக்கார நாடுகளின் கூட்டமைப்பு என்று அழைக்கப்படும் (OECD) அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் சர்வதேச பொருளாதார வளர்ச்சி சரிய ஆரம்பித்துவிட்டது.

அடுத்த சில காலத்துக்கு உலகின் ரொப் 7 பணக்கார நாடுகளின் வளர்ச்சி விகிதம்' வெறும் 0.3 சதவீதமாக தான் இருக்கும். (கிட்டத்தட்ட பூச்சியம்) இதனால் சர்வதேச அளவில் முதலீடுகளும் வர்த்தகமும் ஸ்தம்பிக்கும். இதன் எதிரொலியாக வேலைவாய்ப்புகளும் குறையும் என்று கூறினார்கள். (அ-2)

# ஹெலிகொப்டர் மலையுடன் மோதியதில் மூவர் உயிரிழப்பு

ரஷ்யாவில் இராணுவ உலங்கு வானூர்தியொன்று மலையில் மோதி விபத்துக்குள்ளானதில் 3 பேர் பலியாகினர்.

இந்த உலங்குவானூர்தி நேற்று முன்தினம் தகெஸ்தான் குடியரசின் ஒரு மலைப்பகுதியைக் கடக்கும் போது மலை மீது மோதி விபத்துக்குள்ளானதில் விமானி உள்ளிட்ட 3 பேர் பலியானார்கள்.

இது குறித்து ரஷ்ய உள்துறை அமைச்சக செய்தி கூறுகையில், பாட்லிக் கிராமம் அருகே உலங்கு வானூர்தி சென்ற போது அங்குள்ள மலைப்பகுதியில் மோதி விபத்துக்குள்ளானது.

மி-35 என்ற ரக உலங்கு வானூர்தியே கடும் பனியால் வழி தவறி விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# பனிப்பாறைகள் உருகுகின்றன; ஐரோப்பாவுக்கு ஆபத்து வரும்

## ஆராய்ச்சியாளர்கள் கவலை

பூமியின் வடகோடியில் உள்ள ஆர்டிக் பிரதேசம் முழுவதும் பனிப்பாறைகளால் ஆனது. பூமியின் வெப்பநிலை சமீபகாலமாக அதிகரித்து காணப்படுகிறது. ஆனால், மைனஸ் டிகிரியில் குளிர் இருந்தும் இந்த வருடம் பனிப்பாறைகள் வெகு வேகமாக உருகி வருவதை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

கடந்த இருபது வருடங்களில் இல்லாத வகையில் கடலில் மிதக்கும் இந்த பனிப்பாறைகள் உருகி மெலிந்து வருவது ஐரோப்பாவின் காலநிலையில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்றும் கூறப்படுகிறது.

உருகிய பனிப்பாறைகள் ஸ்வல்பார்ட் மற்றும் கிறீன்லாந்து வழியாக ஆர்டிக் பிரதேசத்தை விட்டு வெளியே செல்லும்போது அதை ஆராயவுள்ளதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். (அ-2)

# தண்ணீர் பிரச்சினையால் 12 பேர் பலியாகினர்

ஆபிரிக்க நாடான கென்யாவில் கடற்கரை ஓரமாக தானா ரிவர் பகுதி அமைந்துள்ளது. இப்பகுதியில் வசிக்கும் ஓர்மா மற்றும் பொகோமா பழங்குடியின மக்களிடையே நிலங்கள் மற்றும் தண்ணீரை பகிர்ந்து கொள்வதில் பிரச்சினை இருந்து வருகிறது.

இந்நிலையில் சீருடை அணிந்து நவீன ஆயுதங்கள் ஏந்திய ஒரு பிரிவினர் இரவில் வீடுகளுக்கு தீ வைத்தனர். இதில் 12 பேர் கொல்லப்பட்டனர். பத்துக்கும் மேற்பட்டோர் பலத்த காயமடைந்தனர்.

புகை மூட்டமாக காணப்பட்ட அப்பகுதியில் துப்பாக்கி சத்தமும் கதறல் ஓலமும் கேட்டதாக கூறப்படுகிறது. அருகிலிருந்த காவலர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து துப்பாக்கியால் சுட்டு எச்சரித்துள்ளனர்.

இதனால் நிறைய பேரை காப்பாற்ற முடிந்தது. இதற்கு முன்பு கடந்த மாதம் நடந்த சண்டையின் போது 52 பேர் கொல்லப்பட்டனர். அதற்கு பழி வாங்கும் நடவடிக்கையாக இந்த தாக்குதல் நடந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. (அ-2)

# உலக தரிசனம்

# ஹக்கானி அமைப்பினால் அமெரிக்காவுக்கு அச்சுறுத்தல்

பாகிஸ்தானைச் சேர்ந்த ஹக்கானி இயக்கம் அமெரிக்க பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவுள்ளது என்று அமெரிக்க பாதுகாப்பு துறையின் தலைமை அலுவலகமான பென்டகன் தெரிவித்துள்ளது.

இதுபற்றி பென்டகன் ஊடகச் செயலாளர் ஜார்ஜ் லிட்டில் கூறுகையில்,

பாகிஸ்தானைச் சேர்ந்த ஹக்கானி இயக்கம் அமெரிக்கப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவுள்ளது.

இந்த இயக்கத்துக்கு எதிராக அமெரிக்கா தொடர்ந்து இராணுவ தாக்குதல் நடத்தும். இந்த புதிய இயக்கத்தின் தொடர்புகள் மற்றும் தாக்குதல்களை தடுக்க உளவு அமைப்புகளின் செயற்பாடுகளை பலப்படுத்துவோம்.

அந்த இயக்கத்துக்கு வந்து சேரும் நிதியை தடுப்பதற்கான வழிகளை மேற்கொள்ள வேண்டும். பாகிஸ்தானிடம் அந்த இயக்கத்தின் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

ஹக்கானி அமைப்புக்கு எதிரான அரசின் வலுவான நடவடிக்கையால் ஆப்கானிஸ்தானில் நமது இராணுவத்துக்கு எதிரான தாக்குதல்களையும் அப்பகுதியில் இதுபோன்ற இயக்கங்களின் செயற்பாட்டையும் தடுக்க முடியும் என்று தெரிவித்துள்ளார். (அ-2)

# சிரியாவில் தொடரும் வன்முறையால் 30 இலட்சம் மக்கள் குடிநீருக்கு தவிப்பு

(டமாஸ்கஸ்)

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்துக்கு எதிராக கடந்த 1 1/2 வருடத்துக்கு மேலாக பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் தலைநகர் டமாஸ்கஸ் மற்றும் அலெப்போ உள்ளிட்ட நகரங்களில் இராணுவத்துடன் புரட்சி படையினர் போரிட்டு வருகின்றனர். சிரியாவின் 2 ஆவது பெரிய தொழில் நகரமான அலெப்போ புரட்சி படையின் கட்டுப்பாட்டில் உள்ளது. எனவே, அதை மீட்க இராணுவம் அங்கு கடுமையாக போரிட்டு வருகிறது.

இராணுவ ஹெலிகொப்டர்கள் மற்றும் போர் விமானங்கள் ரொக்கெட் குண்டுகளை வீசி வருகின்றன. இந்த தாக்குதலில் நேற்று முன்தினம் மட்டும் 100 பேர் பலியாகியுள்ளனர். இரு தரப்பினருக்கும் இடையே நடந்து வரும் போரினால் அலெப்போ நகருக்கு வரும் குடிநீர் குழாய் உடைந்து சேதம் அடைந்தது. இதனால் அங்கு வசிக்கும் 30 இலட்சம் மக்கள் குடிநீரின்றி தவிக்கின்றனர்.

எனவே, அலெப்போவில் இருந்து ஏராளமானவர்கள் வெளியேறி வருகின்றனர். இதற்கிடையே நீண்ட போருக்கு பின் அங்கு வடமேற்கில் உள்ள இராணுவ தளத்தை புரட்சி படையிடம் இருந்து இராணுவம் கைப்பற்றியுள்ளது. அதே நேரத்தில் ஹனானோ இராணுவ தளத்தை கைப்பற்றியுள்ளதாக புரட்சி படை தெரிவித்துள்ளது.

அலெப்போ தவிர டமாஸ்கஸ் மற்றும் பல இடங்களிலும் தொடர்ந்து கலவரம் நடந்து வருகிறது. இங்கு இராணுவம் தாக்கியதில் 50 பேர் பலியாகி உள்ளனர். (அ-2)

## எரிமலை வெடித்தது; மக்கள் வெளியேற்றம்

மத்திய அமெரிக்க நாடுகளில் ஒன்றான நிக்கராகுவாவில் சான் கிறி ஸ்டோபல் என்ற எரிமலை நேற்று முன்தினம் திடீரென வெடித்துச் சிதறியுள்ளது.

அந்த நாட்டிலேயே உயரமான எரிமலையாக கருதப்படும் இது 5 ஆயிரத்து 700 மீற்றர் உயரமுள்ளதாகும்.

அடிக்கடி வெடித்து சிதறும் இந்த எரிமலை மீண்டும் தீக் குழம்புகளை கக்க தொடங்கியுள்ளது.

நேற்று முன்தினம் முதலில் புகை மட்டும் வந்து கொண்டிருந்தது. சிறிது நேரம் கழித்து பயங்கர சத்தத்துடன் எரிமலை வெடித்தது. இதனால் அதிர்ச்சியடைந்த அப்பகுதியில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் அலறி அடித்துக்கொண்டு தமது இருப்பிடத்தை விட்டு ஓடினார்கள். (அ-2)

# மனித வெடிகுண்டு தாக்கு; 6 பேர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள அமெரிக்கத் தூதரகம் அருகே நேற்று முன்தினம் நடந்த மனித வெடிகுண்டு தாக்குதலில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஷாஷ்டரக் பகுதியில் அமெரிக்க தூதரகம் உள்ளிட்ட பல தூதரகங்கள் உள்ள பகுதியில் இத் தாக்குதல் நிகழ்ந்துள்ளது. தலிபான் அமைப்பு இதற்கு பொறுப்பேற்றுள்ளது. அமெரிக்க அதிகாரிகளை குறி வைத்தே இத் தாக்குதலை நடத்தியதாக அந்த அமைப்பு கூறியுள்ளது.

ஆப்கான் தீவிரவாத இயக்கத் தலைவர்களில் முக்கியமானவரான அகமது ஷா மசூத் இறந்த 11 ஆம் ஆண்டு நினைவுநாள் அனுசரிக்கப்படும் தினத்தில் இந்த குண்டு வெடிப்பு நிகழ்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# இந்தியா-பாகிஸ்தான் பேச்சு; விசா நடைமுறையில் தளர்வு

இந்தியா- பாகிஸ்தான் இடையே விசா வழங்கும் விதிமுறைகளில் சலுகை அளிக்கும் வகையில் தாராளமய விசா ஒப்பந்தம் நேற்று முன்தினம் கையெழுத்தானது.

பாகிஸ்தானில் மூன்று நாட்களாக சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக் இடையே இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

கடந்த 38 ஆண்டுகளாக நடைமுறையில் உள்ள விசா விதிமுறைகள் மிகவும் கடுமையானதாக இருந்தன. இந்த விதிமுறைகளில் தளர்வு அளிக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்ததையடுத்து இப்போது புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

### சலுகைகள்

புதிய விசா ஒப்பந்தத்தில் இந்தியா பாகிஸ்தான் இடையே குழுவாக வருவோக்கு ஆன்மீக பயண விசா வர்த்தகர்களுக்கான தனி விசா போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

65 வயதை கடந்த மூத்த குடிகள் மக்கள் இந்தியா அல்லது பாகிஸ்தானை சென்றடைந்த பின்னர் வாகா அல்லது அட்டாரி எல்லைப்பகுதியில் விசா பெற்றுக்கொள்ளலாம். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

215

## திருட்டுப்போன கத்தரிக்காய்

ஒருமுறை கிருஷ்ண தேவ ராயரின் அரண்மனைத் தோட்டத்தில் கத்தரிக்காய் நாற்றுக்களை நட்டு வளர்த்தார்கள். அந்தச்செடியும் செழிப்பாக வளர்ந்து கத்தரிக்காய் காய்க்க ஆரம்பித்தது.

அந்தக் கத்தரிக்காய்களை உபயோகித்து கறிசெய்து அரசருக்கு பரிமாறினார்கள்.

அந்தக்கறி மிகவும் ' ருசியாக இருந்தது.

அரசர் கத்தரிக்காய் எங்கே வாங்கப்பட்டது என்று வினவினார். அதற்குப் பணியாளர்கள் அவை அரண்மனைத் தோட்டத்தில் விளைந்தவை என்பதைச் சொன்னார்கள்.

இந்தக்கத்தரிக்காய் மிகவும் பிரமாதமாக இருக்கிறது. எனவே இதை யாரும் பறிக்காதவாறு பார்த்துக் கொள்ளுங்கள். மீறி யாராவது பறித்தால் அவர்களுக்கு கடுமையான தண்டனை கிடைக்கும் என்று மன்னர் கட்டளையிட்டார்.

அரசரின் இந்த ஆணை அனைவருக்கும் தெரிவிக்கப்பட்டது.

பின்பு ஒருநாள் கிருஷ்ண தேவராயர் தெனாலிராமனை தன்னுடன் சாப்பிட அழைத்தார். அன்று உணவில் கத்தரிக்காய் பரிமாறப்பட்டது.

தெனாலிராமன் அதைச் சாப்பிட்டுவிட்டுப் புகழ்ந்தான். அரசர் அந்தக் கத்தரிக்காய்கள் அரண்மனைத் தோட்டத்தில் விளைந்தவை என்று சொன்னார்.


அன்றிரவு வீடு திரும்பிய தெனாலிராமன் கத்தரிக்காய் சுவையைப்பற்றி தன் மனைவியிடம் புகழ்ந்து சொன்னான். இன்னைக்கு அரண்மனையிலே கத்தரிக்காய் கறி சாப்பிட்டேன். இதுவரைக்கும் அந்தமாதிரி ஒரு கத்தரிக்காயை நான் சாப்பிட்டதேயில்லே தெரியுமா? பிரமாதம். இப்பகூட அந்த ருசி என் நாக்கிலேயே இருக்கு.

இதைக்கேட்ட தெனாலிராமன் மனைவி கோபித்துக் கொண்டாள்.

நீங்க மட்டும் சாப்பிட்டுட்டு வந்துட்டீங்களா? எனக்கும் கொஞ்சம் எடுத்து வந்திருக்கக் கூடாதா?

அரசரோட நான் உட்கார்ந்து சாப்பிடறதே பெரிய விஷயம். கத்தரிக்காய் கறியைக்கேட்டு வாங்கிட்டு வரமுடியுமா?

அதெல்லாம் எனக்குத் தெரியாதுங்க. அந்தக்கத்தரிக்காயை நீங்க எனக்கு இன்னைக்கே



கொஞ்சம் பறிச்சிக்கிட்டு வந்து தந்தேயாகணும்.

மனைவி தெனாலிராமனிடம் நிதானமாய்ச் சொல்லி விட்டாள்.

அன்றுமாலை சற்று இருட்டியதும் தெனாலிராமன் தோட்டத்திற்குப்போய் யாருக்கும் தெரியாமல் கொஞ்சம் கத்தரிக்காய்களைப்பறித்து தனது தலைப்பாகைக்குள் மறைத்து வைத்துக்கொண்டான். அதை வீட்டிற்குக் கொண்டுவந்து தன் மனைவியிடம் கொடுத்தான்.

அன்றிரவு அவன் மனைவி அதைச் சமைத்தாள். வாசனை மூக்கைத் துளைத்தது.

இருவரும் ருசித்துச் சாப்பிட்டார்கள். அவர்களின் மகன் தூங்கிக் கொண்டிருந்தான்.

என்னங்க நம்ம பையனை விட்டுட்டுச் சாப்பிடறோமே அவனுக்கும் கொஞ்சம் தரலாங்க.

வேற வம்பே வேணாம். அவன் காலையிலே போய் இந்தக்கத்தரிக்காய் விஷயத்தை எல்லாரிட்டேயும் சொல்லிடுவான். அப்புறம் நான் ராஜாகிட்டே மாட்டிப்பேன். வம்பாயிடும்.

ஆனால் தெனாலிராமன் மனைவி தங்கள் மகனுக்கு கத்தரிக்காய் கறியை தந்தே ஆகவேண்டும் என்று அடம் பிடித்தாள். தெனாலிராமன் யோசித்தான்.

ஒரு பாத்திரத்தில் தண்ணீர் பிடித்து அதைத் தன்பையன் மேல் நன்றாகத் தெளித்தான். பையன் கண்விழித்தான்.

டேய் பையா. மழை பெய்யுது. வீட்டுக்குள்ளே வாடா. பையன் குழப்பத்தில் இருந்தான்.

அப்பா சொன்னதை உண்மை என்று நினைத்துக் கொண்டான்.

தன் பையனை எழுப்பித் துண்டை எடுத்து அவன் சட்டையைக்கழற்றி தல்லையைத் துடைத்துவிட்டான்.

பின்பு அவனுக்குக் கத்தரிக்காய்க்கறியைக் கொடுத்தாள் தெனாலிராமனின் மனைவி. பையன் ருசித்துச் சாப்பிட்ட பின்னர் படுத்துத் தூங்கிவிட்டான்.

அடுத்தநாள் காலை அரண்மனைத்தோட்டக்காரன் அரசரிடம் வந்து அரண்மனைத் தோட்டத்திலிருந்து யாரோ கொஞ்சம் கத்தரிக்காய்களைத் திருடிக்கொண்டு போய்விட்டதாக தெரிவித்தான்.

அரசர் தன் மந்திரி அப்பாஜியை அழைத்துத் திருடனைக் கண்டுபிடித்துக்கடுமையான தண்டனை கொடுக்கச் சொன்னார்.

தெனாலிராமன் திருதிரு வென விழிப்பதைப்பார்த்த அப்பாஜிக்கு அவன்மேல் சந்தேகம் ஏற்பட்டது.

தெனாலிராமனையும் அவன் மகனையும் அழைத்து விசாரிப்பது என முடிவுசெய்த அப்பாஜி இருவரையும் அன்று மாலை அரசரின் முன் நிறுத்தி விசாரித்தார்.

மகனைப் பார்த்து அப்பாஜி நேத்து ராத்திரி நீ என்ன சாப்பிட்டே என்று கேட்டார்.

முதல் தடவையா, இல்லே ரெண்டாவது தடவையா?

அப்ப நீ நேத்து ராத்திரி ரெண்டு தடவை சாப்பிட்டிருக்கே.

ஆமா நேத்து ராத்திரி மழை பெய்திச்சு. எங்க அப்பா என்னோட உடம்பைத் துடைச்சி வேற சட்டை மாத்தினாரு. எங்க அம்மா கத்தரிக்கா கறி குடுத்தாங்க. நான் சாப்பிட்டுட்டுப் படுத்துட்டேன்.

இப்போது அப்பாஜி தெனாலிராமனைப் பார்த்தார்.

அமைச்சரே என்னோட பையன் கொஞ்ச நாளாவே இப்படித்தான் உளறிக்கிட்டே இருக்கான். நேத்து அரசரோட மதியம் சாப்பிட்டேன்.

அப்ப சாப்பிட்ட கத்தரிக்காயைப் பத்திச் சொன்னேன். இவன் அதை நினைச்சுக்கிட்டே படுத்திருக்கிறான். அந்த நினைப்பிலேயே இப்படி பேசறான்.

நேத்து ராத்திரி மழை பெய்ததா வேற சொல்லிக்கிட்டே இருக்கான். நீங்க வேணா கேட்டுப்பாருங்க.

இப்போது அப்பாஜி அந்தப் பையனிடம் இதைப்பற்றி விசாரித்தார்.

ஆமாங்க. நேத்து ராத்திரி நல்லமழை பெய்திச்சு. எங்க அப்பாகூட என்னோட உடம்பை துடைச்சி வேற சட்டை போட்டு படுக்க வெச்சாரு.

இதைக்கேட்ட அப்பாஜியும் மற்றவர்களும் குழப்பமடைந்தார்கள். நேற்றிரவு அந்த ஊரில் மழை பெய்யவே இல்லை.

தெனாலிராமன் சொன்னவை உண்மையாக இருக்கலாம் என்று நம்பினர் அரசரும் அப்பாஜியும்.

இருவரும் தெனாலிராமனைச் சந்தேகப்பட்டதற்காக வருந்தி அவனையும் அவன் மகனையும் விடுவித்தனர்.

தெனாலிராமனும் தப்பித்தால் போதும் என்று நினைத்தபடியே வீடு வந்து சேர்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்வெளியின் திட்டத்தில் இந்தியா சதம்; நேற்று வெற்றிகரமாக பாய்ந்தது ரொக்கெட்


(பெங்களூர்)

இந்திய திருநாட்டின் அறிவியல் முன்னேற்றத்தின் உச்சிக்குச் சென்று இருக்கின்றோம் என்பதை பறைசாற்றும் விதமாக இஸ்ரோவின் ரொக்கெட் மற்றும் செயற்கைக் கோள் உட்பட இன்று 100 ஆவது திட்டத்தை வெற்றிகரமாக இந்தியா செயற்படுத்துகின்றது.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்க பிரதமர் மன்மோகன்சிங் மற்றும் மூத்த அறிவியல் விஞ்ஞானிகள், ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி ஏவு தளத்தில் குவிந்திருக்கின்றனர். 100 ஆவது செயற்கைக் கோள் என்பதால் பிரதமர் இந்த நிகழ்ச்சியில் நேடியாக பங்கேற்றுள்ளார். நேற்றுக் காலை 9.51 இற்கு விண்ணில் செலுத்தப்பட்டது.

வெற்றிகரமாக சீறிப்பாய்ந்த செயற்கைக்கோள் சுமந்து செல்லும் ரொக்கெட் சரியான பாதை நோக்கிச் செல்ல ஆரம்பித்தது.

தற்போது பி.எஸ்.எல். வி.சி-21 என்ற செயற்கைக்கோள் மூலம் வர்த்தக ரீதியாக விண்ணில் செலுத்தப்படுகின்றது. இந்த செயற்கைக்கோளில் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த சிறிய வகை செயற்கைக் கோளும் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஸ்பாட் -6 என்ற 750 கிலோ எடை கொண்ட செயற்கைக்கோளும் அனுப்பப்படுகின்றது. இது இன்று வெற்றிகரமாக செலுத்தப்படும்.



இந்தியாவின் செயற்கைக் கோள் ஆராய்ச்சி மையத்திற்கு ஒரு மைல் என்றார். (அ-2)

# மருத்துவமனையில் தீ! 3 பேர் பலி; 10 பேர் காயம்


ஜார்க்கண்ட் மாநிலம் பொக்காரோ பகுதியில் செயற்பட்டு வந்த தனியார் வைத்தியசாலையில் தீ விபத்து ஏற்பட்டதில் 3 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். வைத்தியசாலையில் செயற்பட்டு வரும் தீவிர சிகிச்சைப் பிரிவில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தீவிர சிகிச்சை பிரிவு குளிரூட்டப்பட்ட அறை என்பதால் அங்கு தீ விறுவிறுவென பரவியிருக்கின்றது. இதில் நோயாளிகள் 3 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளனர்.

இது குறித்து வைத்தியசாலை நிர்வாகம் தெரிவிக்கையில்,

தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்த ஏ.சி.யில் ஏற்பட்ட மின்கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டது. (அ-2)

# 80 இந்திய மீனவர்களை விடுவித்தது பாகிஸ்தான்



இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா விஜயத்தையொட்டி நல்லெண்ண அடிப்படையில் பாகிஸ்தான் சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் 80 பேர் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

எஸ்.எம்.கிருஷ்ணாவை சந்தித்த பின்னர் அவருடன் சேர்ந்து பாகிஸ்தான் வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹினா ரப்பானிகர் இந்தத் தகவலை தெரிவித்தார்.

இந்தியாவைச் சேர்ந்த தண்டனைக் காலம் முடிந்த மீனவர்கள், தண்டனைக் காலம் முடியாத மீனவர்கள் என அனைவரும் விடுதலை செய்யப்படுகின்றனர்.

இந்த அறிவிப்பு மிகவும் மகிழ்ச்சி தருவதாக இருக்கின்றது என கிருஷ்ணா தெரிவித்தார்.

இந்த அறிவிப்பை அடுத்து பாகிஸ்தான் சிறைகளில் இருந்து 80 இந்திய மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த மாதம் இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு பாகிஸ்தான் சிறைகளில் இருந்த 55 இந்திய மீனவர்களை பாகிஸ்தான் அரசு நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்தது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# நில அபகரிப்பு வழக்கு தொடர்பாக விளக்கமளிக்க நீதிமன்றம் உத்தரவு

## ஸ்டாலின், உதயநிதிக்கு அழைப்பு

நில அபகரிப்பு வழக்கு தொடர்பாக தமிழக அரசு தாக்கல் செய்துள்ள மனுக்களுக்கு மு.க. ஸ்டாலின், உதயநிதி பதிலளிக்க வேண்டுமென உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டில் தி.மு.க. தமிழகத்தில் ஆட்சியில் இருந்த போது சித்தரஞ்சன் சாலையில் உள்ள தமது நிலத்துடன் கூடிய கட்டடத்தை வேணுகோபால் ரெட்டி என்பவருக்கு ரூ. 5.54 கோடிக்கு விற்க தி.மு.கவினர் மிரட்டியதாக 2011 ஆம் ஆண்டில் சேஷாத்ரி குமார் என்பவர் பொலிஸில் புகார் அளித்தார்.

அதன்பேரில் மு.க.ஸ்டாலின், உதயநிதி ஸ்டாலின், ஸ்ரீனிவாஸ், வேணுகோபால் ரெட்டி, ராஜா சங்கர், சுப்பர் ரெட்டி ஆகியோர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் புகாருக்கு உள்ளானவர்கள் வழக்கு தொடர்ந்தனர். அப்போது புகார் தாரரான சேஷாத்ரி குமார் சுமுகமாக பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள விரும்புவதால் ஆறு பேர் மீதான தனது புகாரை திரும்பப் பெற்றுக் கொள்வதாக சென்னை உயர் நீதிமன்றத்தில் கூறினார்.

இதையடுத்து அந்த வழக்கைத் தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் கடந்த ஏப்ரல் 9 ஆம் திகதி உத்தரவிட்டது.

இதை எதிர்த்து தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தது. அந்த மனுவை நீதிபதிகள் அஃப்தாப் ஆலம், ரஞ்சனா பிரசாத், தேசாய் அடங்கிய அமர்வு நேற்று முன்தினம் விசாரித்தது.

அப்போது தமிழக அரசு சார்பில் ஆஜரான சட்டத்தரணி வி.கிரி சென்னையின் மையப் பகுதியான சித்தரஞ்சன் சாலையில் விலை மதிப்புள்ள இடத்தை விற்பனை செய்ய அதன் உரிமையாளரை ஸ்டாலினும் உதயநிதியும் மிரட்டியுள்ளனர் என முதல் தகவல் அறிக்கையில் புகார் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அந்த புகார் திரும்ப பெறப்பட்டாலும் அவர்கள் மீதான குற்றச்செயல் குறித்து விசாரணை நடத்த வேண்டும். ஆகையால் சென்னை உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை இரத்துச் செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

இதைக் கேட்ட நீதிபதிகள் தமிழக அரசு தாக்கல் செய்துள்ள மேன் முறையீட்டு மனுவுக்கு பதில் அளிக்க வேண்டும் என்று மு.க.ஸ்டா லின், உதயநிதி ஸ்டாலின், வேணு கோபால் ரெட்டி, ராஜா சங்கர், சுப்பா ரெட்டி, ஸ்ரீனிவாஸ் ஆகியோருக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டனர். (அ-2)

## பாரதச் செய்தி



வேளாங்கன்னி ஆரோக்கியமாதா கோவில் ஆண்டுத் திருவிழாவின் போது பெரிய சப்பர தேர் பவனி இடம்பெற்றதைப் படத்தில் காணலாம்.

# பிரணாப்பின் மகன் அபிஜித் போட்டி

(கொல்கத்தா)

மேற்கு வங்கத்தில் ஜாங்கிபூர் லோக்சபா தொகுதிக்கு நடக்கும் இடைத் தேர்தலில் பிரணாப் முகர்ஜியின் மகன் அபிஜித் முகர்ஜியை காங்கிரஸ் வேட்பாளராக அறிவிக்க வேண்டும் என அம்மாநில காங்கிரஸ் கட்சியினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த லோக்சபா தேர்தலில் மேற்கு வங்கத்தின் ஜாங்கிபூர் தொகுதியில் காங்கிரஸ் சார்பில் பிரணாப் முகர்ஜி போட்டியிட்டு வெற்றி பெற்றார். ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக தன் எம்.பி. பதவியை இராஜினாமா செய்தார்.

எனவே இந்தத் தொகுதியில் இடைத் தேர்தல் நடக்கவுள்ளது. இதில் காங்கிரஸ் சார்பில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியின் மகன் அபிஜித் முகர்ஜியை வேட்பாளராக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. (இ)

# சோனியாவுக்கு சிகிச்சை முடிந்தது

(புதுடில்லி)

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்கு கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் திடீர் உடல் நலக்குறை ஏற்பட்டது. இதையடுத்து அவர் அமெரிக்கா சென்று நியூயோர்க் நகரில் உள்ள ஒரு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார்.

சோனியாவுக்கு அங்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட உடல் நலக்குறைவு குறித்து எந்த தகவல்களையும் நியூயோர்க் வைத்தியசாலை நிர்வாகம் வெளியிடவில்லை.

சோனியாவுக்கு மேற்கொள்ளப்படும் சிகிச்சை அவரது தனிப்பட்ட விடயம். அவரது தனிமைக்கு மரியாதை கொடுக்கப்படவேண்டும் என்று அவர் குடும்பத்தினர் கேட்டுக் கொண்டனர். இதனால் சோனியாவின் சிகிச்சை தொடர்பாக எந்தத் தகவலும் வெளியில் தெரியவில்லை. (அ-2)

# இராணுவத்தை தாருங்கள்; இந்தியாவை சீராக்குவேன்

## பால் தாக்கரே கூறுகிறார்

இராணுவத்தை தன்னிடம் அளித்தால், இந்தியாவையே சீராக்கிக் காட்டுவேன் என்று சிவசேனாத் தலைவர் பால் தாக்கரே கூறியுள்ளார்.

இந்தியாவில் இஸ்லாமிய பயங்கரவாதிகளால் ஏற்படும் தாக்குதல்களை பொறுத்துக்கொள்ள மாட்டேன் என்றும் சிவசேனா அமைப்பின் நாளிதழில் பேட்டியளித்துள்ளார். சிவசேனா கட்சியே இராணுவம் போன்றது தான் எனக்கூறும் தாக்கரே தங்களிடம் வெறும் தோரணங்கள், பனர்கள், டிரம்ஸ் போன்ற ஆயுதங்கள்தான் உள்ளன என்றார்.

எனவே, நாட்டை சீராக்க தங்களிடம் உள்ள ஆயுதங்கள் மட்டும் போதாது என்றும் இராணுவ அதிகாரத்தை தன்னிடம் கொடுத்தால் ஒரு அற்புதத்தை நான் நிகழ்த்திக் காட்டுவேன் என பால்தாக்கரே கூறியுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு உட்பட சில தொகுதிகளின் மாகாண தேர்தல் முடிவுகள்

கிழக்கு மாகாணம்
மாவட்டம்:- திருகோணமலை
தொகுதி:- திருகோணமலை

| கட்சி | வாக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| தமிழரசுக்கட்சி | 28067 |
| மு.கா. | 8642 |
| ஐ.ம.சு.கூ. | 7949 |
| ஐ.தே.க. | 2979 |

தொகுதி:- மூதூர்

| கட்சி | வாக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| மு.கா. | 14617 |
| ஐ.ம.சு.கூ. | 13011 |
| ஐ.தே.க. | 12318 |
| தமிழரசுக்கட்சி | 10213 |

தொகுதி:- சேருவில

| கட்சி | வாக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| ஐ.ம.சு.கூ. | 17785 |
| ஐ.தே.க. | 7148 |
| தமிழரசுக்கட்சி | 5014 |
| மு.கா. | 2390 |

மாவட்டம்:- மட்டக்களப்பு
தொகுதி:- கல்குடா

| கட்சி | வாக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| ஐ.ம.சு.கூ. | 22965 |
| தமிழரசுக்கட்சி | 21876 |
| மு.கா. | 8604 |
| ஐ.தே.க. | 1014 |

தொகுதி:- மட்டக்களப்பு

| கட்சி | வாக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| தமிழரசுக்கட்சி | 44863 |
| ஐ.ம.சு.கூ. | 31194 |
| மு.கா. | 13964 |
| சுயேட்சைக்குழு-91 | 5355 |
| சுயேட்சைக்குழு-21 | 1205 |
| ஐ.தே.க. | 1026 |

தொகுதி:- பட்டிருப்பு தொகுதி

| கட்சி | வாக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| தமிழரசுக்கட்சி | 34705 |
| ஐ.ம.சு.கூ. | 8603 |
| ஐ.தே.க. | 331 |
| மு.கா. | 72 |

மாவட்டம்:- அம்பாறை
தொகுதி:- கல்முனை

| கட்சி | வாக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| மு.கா. | 22884 |
| தமிழரசுக்கட்சி | 11702 |
| ஐ.ம.சு.கூ. | 5990 |
| ஐ.தே.க. | 1134 |

தொகுதி:- சம்மாந்துறை

| கட்சி | வாக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| மு.கா. | 25611 |
| ஐ.ம.சு.கூ. | 12610 |
| தமிழரசுக்கட்சி | 8767 |
| ஐ.தே.க. | 1174 |

தொகுதி:- பொத்துவில்

| கட்சி | வாக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| மு.கா. | 31952 |
| தமிழரசுக்கட்சி | 23385 |
| ஐ.ம.சு.கூ. | 22179 |
| ஐ.தே.க. | 6684 |

தொகுதி:- அம்பாறை

| கட்சி | வாக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| ஐ.ம.சு.கூ. | 46409 |
| ஐ.தே.க. | 35578 |
| ஜே.வி.பி. | 1861 |
| மு.கா. | 1490 |

மாவட்டம்:-அநுராதபுரம்
தொகுதி:-அனுராதபுரம் மேற்கு

| கட்சி | வாக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| ஐ.ம.சு.கூ. | 31520 |
| ஐ.தே.க. | 19624 |
| ஜே.வி.பி. | 1429 |

மாவட்டம்:- கேகாலை
தொகுதி:-ருவான் வெல்ல

| கட்சி | வாக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| ஐ.ம.சு.கூ. | 19116 |
| ஐ.தே.க. | 15562 |

தொகுதி:-தெரணியகல

| கட்சி | வாக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| ஐ.ம.சு.கூ. | 17707 |
| ஐ.தே.க. | 14294 |


## பட்டப்படிப்புக்கு அடித்தளமாக யாழ்.IISEEES இன் ஆங்கில பாடநெறி

உயர்தரத்தின் பின்னர் மாணவர்கள் உள்நாட்டில் அல்லது வெளிநாடுகளில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற பட்டப்படிப் பொன்றை தொடர்வதில் பாரிய பிரச்சினை யாக அமைவது ஆங்கில மொழியாகும்.

இதனை நிவர்த்தி செய்வதற்கு ஆங்கில மொழியை இலகுவாக கற்றுக் கொள்ளக் கூடிய பொறிமுறைகள் அவசியமாகின்றது. முழுமையான ஆங்கிலச் சூழல் இன்மை மாணவர்கள் ஆங்கிலம் கதைப்பதில் முட்டுக்கட்டையாக இருக்கின்றது. அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இவற்றை நிவர்த்தி செய்யக் கூடிய ஏற்பாடுகள் மிகக் குறைவு என்பதே வெளிப்பாடான உண்மை.

இவற்றை நிவர்த்தி செய்து மாணவர்கள் இலகுவாக ஆங்கிலத்தை கற்று கதைப்பதற்கு ஏதுவான ஆங்கிலப் பாடநெறியை முழுமையான ஆங்கிலச் சூழலில் Work room Based Practical English Course) IISEEES NALLUR CAMPUS நடத்துகின்றது.

ஒரே பாடநெறி மூன்று தகைமைகளை (One Course Lead to triple Qualification) பெற்றுத் தரும் English, Personality Development amd Leadership Training ஆகிய பகுதிகளை இவ் ஆங்கிலப் பாடநெறி கொண்டிருக்கின்றமை மாணவர்களது தலைமைத்துவ ஆற்றல் மற்றும் ஆங்கிலத்தில் மாணவர்கள் கதைப்பதற்கு மேலும் வலுவூட்டுகின்றது.

மாணவர்களுக்கு மிக்க நன்மை பயக்கும் இப்பாட நெறியில் பேச்சு ஆங்கிலம்

**விளம்பர விபரணம்**

(Spoken English) இலக்கண முறையில் கற்பிக்கப்படுவதுடன் Reading, Listening and Writing ஆகிய ஒவ்வொரு பிரிவும் தனித்தனி அனுபவமிக்க ஆங்கிலத்தை தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு நிகரான ஆசிரியர்களால் வழிகாட்டப்படுகின்றமை இதன் தனிச் சிறப்பம்சமாகும்.




நல்லூர் கோவிலுக்கு அருகாமையில் IISEEES NALLUR CAMPUS அமைந்துள்ளது.

பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் புரிவோர் மற்றும் தொழிலினை எதிர்பார்த்திருப்போருக்கான விசேட ஆங்கில பயிற்சி நெறிகளையும் IISEEES NALLUR CAMPUS இல் வழங்கப்படுகின்றது.

வெளிநாட்டு உயர்கல்வியை வேண்டி நிற்கும் மாணவர்களுக்கு சர்வதேச ஆங்கிலத் தகைமைகளான IELTS, TOEFL, City & Guilds, Etc ஆகிய பரீட்சைகளுக்கு சிறந்த முறையில் வழிகாட்டுவதுடன் VISA பெற்றுக்கொள்வதற்குமான ஆவணப்படுத்தல்களையும் பல வருடம் அனுபவம் வாய்ந்த சிரேஷ்ட மாணவ ஆலோசகர்களால் ஏற்பாடு செய்து கொடுக்கப்படுகின்றது.

உள்நாட்டில் உள்ள தனியார் உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் வெளிநாடுகளிலுள்ள கல்லூரி, பல்கலைக்கழகங்களுக்கான மாணவர் உடனடி அனுமதிகளையும் பெற்றுக் கொள்ள முடிவதுடன் பாடநெறி பற்றிய தகவல்களையும் எமது IISEEES NALLUR CAMPUS இல் பெற்றுக் கொள்ள முடியும். மேலதிக தகவல்களுக்கு இல. 762, பருத்தித்துறைவீதி, நல்லூர் என்ற முகவரிக்கு நேரில் வரவும் அல்லது 021 222 4728, 0777 444 225 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும்.


## டிரான் அலஸிற்கு அமைச்சுப் பொறுப்பு?

(கொழும்பு)

ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸிற்கு அமைச்சுப் பொறுப்பு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை விடுதலை செய்வது தொடர்பில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்திய முக்கிய நபராக டிரான் அலஸ் கருதப்படுகின்றார்.

ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் பதவியை டிரான் இராஜினாமா செய்துள்ளதாக அண்மையில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில் டிரான் அலஸிற்கு ஆளும் கட்சியில் அமைச்சுப் பொறுப்பு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சிவில் விமான சேவைகள் மற்றும் விமான நிலைய அமைச்சப் பதவி டிரான் அலஸிற்கு வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-2)


## 5 ஆம் நாள் நினைவு

### அமரர் திரு.இ.கந்தசாமி

(இளைப்பாறிய அதிபர், சமாதான நீதவான்)

பிறப்பு 30 12 1937



இறப்பு 06 09 2012

*06.09.2012 அன்று அமரத்துவம் அடைந்த வளலாய் அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகும் கொண்ட எமது குடும்பத்தலைவன் இளையதம்பி கந்தசாமி (செல்லத்துறை) அவர்களின் 8 ஆம் நாள் (8 செலவு) நினைவலை நிகழ்வு 10.09.2012 ஆகிய இன்று அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் இத் தகவலை அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.*

குடும்பத்தினர்,
மகள் (திரு.திருமதி கௌரி,
சுபீஸ்கரன் ஆசிரியர்.

"தாய் இல்லம்"
வளலாய்,
அச்சுவேலி.

(388)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அனுபவம் என்பது மனிதர்கள் தாங்கள் புரிந்த தவறுக்கு இட்ட பெயர்.

-ரிக்டர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# கிழக்கு மாகாணத்தின் தேர்தல் முடிபு

இலங்கையில் மூன்று மாகாணங்களில் நடந்த தேர்தல்களில் கிழக்கு மாகாணத் தேர்தலே பலரதும் கவனத்தை ஈர்த்திருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றிடையே கடும் போட்டியென்று கூறக்கூடிய அளவில் நடந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

முடிபுகள் பற்றிய பகுப்பாய்வுகள் பல கோணங்களில் நடந்துகொண்டிருக்கும் நிலையில்,

சிறுபான்மை இனங்களான தமிழ்-முஸ்லிம் தரப்புகள் தமக்கிடையே பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன.

பேச்சுவார்த்தையில் இணக்கப்பாடு எட்டுதல் என்பதற்கு அப்பால் சிறிலங்கா முஸ்லிம்காங்கிரஸுடன் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் பேச்சு நடத்தும் என்பதில் மாறுபட்ட கருத்துக்கு இடம் இல்லை.

அதேநேரம் கிழக்கு மாகாண சபையில் ஆட்சி அமைக்க வாருங்கள் என்று அரசிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அல்லது அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமோ கேட்கப்போவதில்லை என்பதும் நிறுதிட்டமான உண்மை.

நிலைமை இதுவாக இருக்கையில் கிழக்கு மாகாண சபையில் ஆட்சி அமைப்பது யார்? என்ற முடிபை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கொண்டுள்ளமை முஸ்லிம் மக்களுக்கு கிடைத்த வெற்றியென்றே கூற வேண்டும்.

அதேநேரம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எடுக்கப் போகின்ற முடிபொன்றுதான் இலங்கைத் தீவில் சிறுபான்மை மக்களின் இருப்பிற்கான உத்தரவாதத்தை ஏற்படுத்தப் போகின்றது என்ற நிஜத்தையும் நிராகரிப்பதற்கில்லை.

கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸும் இணக்கப்பாட்டுக்கு வருமாக இருந்தால், இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே புரிந்துணர்வு ஏற்படுவதுடன், இலங்கை அரசுடன் பேரம் பேசும் சக்தியும் சிறுபான்மை இனங்களுக்கு ஏற்படும்.

மாறாக, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆளும் தரப்புடன் இணைந்து கொண்டு கிழக்கு மாகாண சபையில் ஆட்சி அமைக்குமாக இருந்தால், அது தமிழ்-முஸ்லிம் மக்களிடையேயான உறவு நிலையிலும் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்திலும் மிகப்பெரும் பாதகத்தை ஏற்படுத்தும்.

ஆக, கிழக்கு மாகாண சபையில் ஆட்சி அமைப்பது யார்? என்ற கேள்விகளுக்கு அப்பால், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எடுக்கப் போகின்ற தீர்மானத்தைப் பொறுத்தே, தமிழ்-முஸ்லிம் மக்களின் எதிர்காலம் பற்றிக் கூறமுடியும். எதுவாயினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்காக நிறைய விட்டுக் கொடுப்புக்களை செய்ய வேண்டியிருக்கும்.

அத்தகைய விட்டுக்கொடுப்புகள் அர்த்தமுடையவையாகவும் அமையலாம்.

# இலங்கை இராணுவத்திற்கு பயிற்சி தமிழர்களுக்கு செய்யும் அநியாயம்!

## கண்டிக்கிறார் டி.ஆர்.

(சென்னை)

மத்திய அரசு இலங்கை இராணுவத்திற்கு, தமிழ்நாட்டிலே கொடுத்துக் கொண்டிருப்பது இராணுவப் பயிற்சி. இது மத்திய அரசு தமிழர்களை கேவலப்படுத்துவதற்கான, அதிகபட்ச அநியாய முயற்சி என்று கண்டித்துள்ளார் இலட்சிய தி.மு.க. தலைவர் விஜய டி.ராஜேந்தர்.

இது தொடர்பாக இலட்சிய தி.மு.க. தலைவர் விஜய டி.ராஜேந்தர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கையில் தமிழர்களை கொன்று குவித்த இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவின் கைகளில் படிந்தது இரத்தக்கறை. அதை தமிழர்களால் மறக்க முடியவில்லை இன்றுவரை.

இந்த நிலையில் இரத்தக்கறை படிந்த ராஜபக்ஷவிற்கு, இரத்தின கம்பளம் விரித்து ஆரத்தி எடுத்து, ஆரத்தழுவி மகிழ மத்திய அரசு நீட்டுகிறது இருகை. அதனால்தான் ராஜபக்ஷ மீண்டும் புரிகிறாரோ இந்தியாவுக்கு வருகை.

மத்திய அரசின் இந்த போக்கை வன்மையாக கண்டிக்க நினைக்கிறது எங்கள் இலட்சிய தி.மு.க. இயக்கம்.

அதன் அடிப்படையில் தான் எங்களின் கண்டன ஆர்ப்பாட்ட முழக்கம் வருகின்ற 12ஆம் திகதி புதன்கிழமை அன்று காலை 11 மணியளவில் சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளிகை முன்பு நடைபெறும் என்று தனக்கேயுரிய பாணியில் தெரிவித்துள்ளார் ராஜேந்தர். (ந-11)

# எங்களை அடிப்பீர்களா? என சொல்லித் தாக்கியது கடற்படை!

## தமிழக மீனவர்கள் குமுறல்

(கச்சதீவு)

கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் நேற்று மீண்டும் தாக்கியுள்ளனர்.

தமிழகத்தில் சிங்கள யாத்திரிகர்கள் தாக்கப்பட்டதைச் சொல்லிச் சொல்லி தங்களை இலங்கைக் கடற்படையினர் அடித்ததாக தமிழக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

சமீபத்தில் புனித பயணமாக தமிழகத்திற்கு வந்த சிங்கள யாத்திரிகர்கள், பூண்டி, வேளாங்கண்ணி ஆகிய இடங்களில் தாக்குதல்களுக்குள்ளானார்கள்.

இதையடுத்து சிறப்பு விமானத்தின் மூலம் அவர்கள் பத்திரமாக இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்.

இந்த நிலையில் கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தாக்கியுள்ளனர்.

தமிழகத்திற்கு வந்த சிங்களவர்களை தாக்குவீர்களா? என்று கூறிக் கூறி தங்களை இலங்கைக் கடற்படையினர் அடித்தனர் என தமிழக மீனவர்கள் தெரிவித்துள்ளனர். கச்சதீவு அருகே இரண்டு படகுகளில் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 8 மீனவர்கள் மீன்பிடித் துக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்குவந்த இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களை சுற்றிவளைத்து தாக்கியுள்ளனர்.

இந்தத் தகவல்களை இலங்கைக் கடற்படையினரிடமிருந்து மீண்டுவந்த இராமேஸ்வரம் மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (ந-11)

# அமைச்சரின் மகன் தாக்கியதில் இராணுவ அதிகாரி படுகாயம்!

(கொழும்பு)

பிரபல அமைச்சர் ஒருவரின் மகனுடைய தாக்குதலுக்கு இலக்காகி இராணுவ மேஜர் தர அதிகாரி ஒருவர் படுகாயமடைந்தநிலையில்கொழும்புதேசியவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அவர் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் எஸ்.பி. அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஹோட்டல் ஒன்றில் வைத்து நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு குறித்த தாக்குதல் இடம் பெற்றுள்ளதாகவும் தாக்குதல் நடத்திய பின்னர் பிரபல அமைச்சரின் மகன் இராணுவ மேஜரின் துப்பாக்கியை எடுத்துச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த பிரபல அமைச்சரின் மகன் இதற்கு முன்னரும் நபரொருவரை தாக்கிய சம்பவத்தில் சர்ச்சைக்குள்ளாகியமை குறிப்பிடத்தக்கது. (ந-11)

# மூன்று திருமணம் செய்தவர் விமான நிலையத்தில் கைதானார்

(யாழ்ப்பாணம்)

மூன்று பெண்களைத் திருமணம் செய்த வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த நபர் ஒருவர் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

2006ஆம் ஆண்டில் உடுத்துறையைச் சேர்ந்த பெண் ஒருவரையும் பதிவுத் திருமணம் செய்து ஆண்பிள்ளை பிறந்தவேளை தன் மனைவிக்கு தெரியாமல் 2010 இல் ஒரே நேரத்தில் இரு பெண்களுடன் பழகி அவர்களையும் இரு மாதங்களுக்குள் விவாகத் திருமணம் செய்துள்ளார்.

அவர்கள் முல்லைத்தீவையும் கொடிகாமத்தையும் சேர்ந்தவர்களாவர். கொடிகாமப் பெண்ணும் குறித்த நபரும் இலங்கையை விட்டு தாய்லாந்தில் குடியேறியுள்ளனர்.

அங்கு அகதியாக விண்ணப்பித்திருந்த நிலையில் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு அவர்களுடைய அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டு நாடுகடத்தப்பட்டுள்ளனர்.

எனவே இங்குள்ள இரு பெண்களின் பொலிஸ் புகாரின் அடிப்படையில் தாய்லாந்திலிருந்து நாடுகடத்தப்பட்ட அந்நபர் விமான நிலையத்திலேயே கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுபோன்று [illegible] பெண்கள் [illegible] முடியாதளவுக்கு பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-11)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## அன்பே உலகில் உயர்ந்தது



பிறருக்கு உதவுவது என்பது நம்மை நாம் பண்படுத்திக் கொள்வதற்காகத் தரப்படுகின்றவாய்ப்பு என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

இறைவன் ஒரு பெரிய காந்தக்கல்லினை போல இருக்கிறார். நாமெல்லாம் இரும்புத் துகள்களைப் போல அவரால் எப்போதும் கவரப்பட்டு இருக்கிறோம்.

வாழ்வில் ஏற்படும் கொடிய போராட்டங்கள், கொந்தளிப்புக்கள் அனைத்தும் முடிவில் இறைவனை அடைந்து அவருடன் ஒன்று கலப்பதற்காகவே.

எண்ணத்தையும் பத்தியையும் ஆராய்ச்சி மனப்பான்மையையும் கடக்கும் போதுதான் கடவுளைநோக்கி முதல் அடியை எடுத்து வைக்கிறீர்கள்.

தன்னலம், கணக்குப்பார்த்தல், பேரம் பேசுதல், அர்த்தமற்ற பயம் போன்றவற்றில் இருந்துகடந்து வந்தவனால் மட்டுமே முழுமையான பக்தி செலுத்தமுடியும்.

அன்பே உலகை அரவணைத்துச் செல்லும் உயர்ந்த குணம், அன்பு நிறைந்திருக்குமிடத்தில் குறுகிய சிந்தனைகள் உண்டாவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மன்னார் பிறிமியர்லீக் கிரிக்கெட் போட்டி; இந்து முன்னணி, ஸ்டார் ஈகிள் வெற்றி

மன்னார் பெரியகடை ஸ்டார் ஈகிள் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாடடில் 10 ஓவர்கள் கொண்டு நடத்தப்படும் மன்னார் பிறிமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி அண்மையில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

மொத்தமாக 36 போட்டிகளைக் கொண்ட லீக் சுற்றில் நடைபெற்ற மூன்றாவது போட்டியில் இந்து முன்னணியும் சென்.ஜோசப் அணியும் மோதின. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்து முன்னணியினர் 10 ஓவர்களில் 8 இலக்குகளை இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் இந்து முன்னணி அணி சார்பாக வசந்தன் 13 பந்துகளில் 34 ஓட்டங்களையும் பந்துவீச்சில் சென்.ஜோசப் அணி சார்பாக டேனியல் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோசப் அணியினர் 9 ஓவர்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 79 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 25 ஓட்ட வித்தியாசத்தில் சென்.ஜோசப் அணியினர் தோல்வியடைந்தனர். துடுப்பாட்டத்தில் சென்.ஜோசப் அணி சார்பாக அன்ரன் 5 பந்துகளில் 18 ஓட்டங்களையும் பந்துவீச்சில் இந்து முன்னணி சார்பாக வசந்தன், லூயிஸ், அர்யுன் ஆகியோர் தலா இரண்டு இலக்குகளையும் கைப்பற்றினர்.

நடைபெற்ற 4ஆவது போட்டியில் கிளி நொச்சி அணியும் போட்டியினை நடத்தும் ஸ்டார் ஈகிள் அணியும் மோதின. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மாவட்ட அணியினர் 10ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து 69 ஓட்டங்களை மாத்திரம் பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் கிளிநொச்சி அணி சார்பாக அன்னதிலக்சன் 18 பந்துகளில் 24 ஓட்டங்களையும் பந்துவீச்சில் ஸ்டார் ஈகிள் அணிசார்பாக அமல் 7 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் கைப்பற்றினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்டார் ஈகிள் அணியினரின் ஆரம்பத் துடுப்பட்ட வீரர்களின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் 5 ஓவர்கள் முடிவில் விக்கெட் இழப்பு எதுவுமின்றி 10 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றனர். துடுப்பாட்டத்தில் ஸ்டார் ஈகிள் அணிசார்பாக றோய் 23 பந்துகளில் 46 ஓட்டங்களையும் பிரியகாந் 7 பந்துகளில் 17 ஓட்டங்களையும் பெற்றனர்.

நடைபெற்ற முதல் நாள் போட்டியில் மொத்தமாக 27 ஆறு ஓட்டங்களும் 71 நான்கு ஓட்டங்களும் பெறப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# ஹொக்கிச் சுற்றுப் போட்டி




யாழ்ப்பாண கல்லூரி விளையாட்டுச் செயற்குழுவின் ஏற்பாட்டில் ஆனந்தரட்ணம் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் 19 வயது பிரிவுக்குட்பட்ட ஆண்கள், பெண்களுக்கான ஹொக்கிச் சுற்றுப்போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

நடைபெற்ற ஆண்களுக்கான ஹொக்கிப் போட்டியில் முதலாம் இடத்தினை யூனியன் கல்லூரியும் இரண்டாம் இடத்தினை யாழ்ப்பாணக் கல்லூரியும் மூன்றாம் இடத்தினை யாழ்ப்பாண சென்ஜோன்ஸ் கல்லூரியும் பெற்றுக் கொண்டது.

பெண்களுக்கான போட்டியில் முதலாம் இடத்தினை உடுவில் மகளிர் கல்லூரியும் இரண்டாம் இடத்தினை யாழ்ப்பாணக் கல்லூரியும் மூன்றாம் இடத்தினை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயமும் பெற்றுக் கொண்டது.

# முரளி கிண்ணத்திற்கான சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டி





முரளி கிண்ண சிநேகபூர்வ கிரிக்கெட் சுற்றுப்போட்டி வடக்கின் 5 இடங்களில் நேற்று முன்தினம் சனிக்கிழமை கோலாகலமாக ஆரம்பமானது.

முரளிதரன் நிதியத்தின் ஊடாக இராணுவத்தினரின் ஏற்பாட்டில் நடைபெறும் 20 ஓவர்கள் கொண்ட இந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டி வவுனியா, மாங்குளம் ஆகிய இடங்களில் பெண்களுக்கான போட்டியாகவும் ஒட்டுசுட்டான் , கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் ஆண்களுக்கான போட்டியாகவும் நடைபெறுகின்றன.

19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான போட்டியில் 8 பெண்கள் அணியும் 13 ஆண்கள் அணியும் பங்குபற்றுவதுடன் இறுதிப்போட்டி எதிர்வரும் புதன்கிழமை ஒட்டுசுட்டான் மைதானத்தில் இடம்பெறவுள்ளது. வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் ஆரம்பமான போட்டியில் பிரதம விருந்தினராக வன்னி கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா, வவுனியா , மன்னார் பிரதி பொலிஸ்மா அதிபர் கே.எச்.ஜெயவீர , வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கேமந்த அதிகாரி , வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் அதிபர் எம்.பத்மநாதன் , வவுனியா பிரதேச செயலாளர் அ.சிவபாலசுந்தரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# புத்தூர் வளர்மதி வி.க.கரப்பந்தாட்ட போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் சம்பியன்







புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் 46 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு இடம்பெற்ற ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை தனதாக்கிக் கொண்டது.

வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் வெள்ளிக் கிழமை இரவு நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விண்ளயாட்டுக்கழகமும் அச்சுவேலி ஸ்டார் விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.


முதல் மூன்று சுற்றுக்களில் அச்சுவேலி ஸ்டார் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது. தொடர்ந்து நடைபெற்ற ஏ பிரிவு அணியினருக்கான இறுதிப் போட்டியில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகமும் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

போட்டியின் இறுதிச் சுற்றில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று வளர்மதி வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

வெற்றி பெற்ற கழகங்களுக்கு பெறுமதியான வெற்றிக் கிண்ணங்களும் பணப்பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. தலைவர் நீதிராஜா தலைமையில் நடைபெற்ற இப் போட்டியில் எம்.ரி.எஸ். இராமச்சந்திரன், வலி.கிழக்கு பிரதேச சபைத் தலைவர் ஆ. உதயகுமார், கோப்பாய் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் அகல்யா உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்தை வீழ்த்தியது தென்னாபிரிக்கா



இங்கிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், இங்கிலாந்து அணிக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரின் முதற்போட்டியில் தென்னாபிரிக்க அணி இலகுவாக வெற்றி பெற்றுள்ளது.

இப்போட்டியில் தென்னாபிரிக்க அணி 6 பந்துகள்மீதமிருக்கையில் 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.


றிசேர்வ்ஸ் சைட் மைதானத்தில் இடம் பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 118 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

இதையடுத்து 119 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 19 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

போட்டியின் ஆட்ட நாயகனாக தென்னாபிரிக்க அணியின் டேல் ஸ்ரெய்ன் தெரிவானார்.

# அமெரிக்க ஓபன்; இறுதிச் சுற்றுக்கு முன்னேறினார் முர்ரே



(நியூயோர்க்)

அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரின் அரையிறுதிச் சுற்றில் இங்கிலாந்தின் அன்டி முர்ரே வெற்றி பெற்று இறுதிச் சுற்றுக்கு முன்னேறினார்.

இந்த ஆண்டின் கடைசி கிராண்ட்ஸ்லாம் போட்டியான அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடர் நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகின்றது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டம் ஒன்றில் உலகின் 3-ம் நிலை வீரரான இங்கிலாந்தின் அன்டி முர்ரே, 6-ம் நிலை வீரரான செக் குடியரசின் தோமஸ் பெர்டிச் மோதினார்கள்.

இதில் முர்ரே 5:7, 6:2, 6:1, 7:6 (9:7) என்ற செட் கணக்கில் வென்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார். அவர் அமெரிக்க ஓபன் இறுதிப்போட்டிக்கு நுழைவது இது 2-வது முறையாகும். இதற்கு முன்பு 2008-ம் ஆண்டு தகுதி பெற்றார்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளைப் பொறுத்தவரை 5-வது முறையாக இறுதிப் போட்டிக்குள் நுழைந்துள்ளார்.

ஆனால் இதுவரை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றது இல்லை. முதல் முறையாக பட்டம் வெல்லும் ஆர்வத்தில் உள்ளார்.

மற்றொரு அரையிறுதியில் உலகின் 2-ம் நிலை வீரரும், நடப்பு சம்பியனுமான சேர்பியாவின் நொவாக் ஜோகோவிக், 4-ம் நிலை வீரரான டேவிட் பெரர் (ஸ்பெயின்) மோதினர்.

இதில் பெரர் 5:2 என்ற கணக்கில் முன்னணியில் இருந்தபோது ஆட்டம் மழையால் பாதிக்கப்பட்டது. பலத்த மழையால் இந்த ஆட்டம் நேற்று ஒத்திவைக்கப்பட்டது.

இதன் காரணமாக ஆடவர் ஒற்றையர் இறுதிப்போட்டி இன்று நடைபெறும். அசரென்கா (பெலாரஸ்), செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) மோதும் பெண்கள் இறுதிப் போட்டியும் மழையால் நடைபெறவில்லை.

## கன்ரர்-ஆட்டோ விபத்து மூவர் படுகாயம்

(கரவெட்டி)

கன்ரர் ரக வாகனமும் முச்சக்கர வண்டியும் விபத்துக்குள்ளானதில் மூன்று பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று இரவு 8.30 மணியளவில் பருத்தித்துறை தும்பளை மணியங்கா தோட்டச் சந்தியருகே இடம்பெற்றுள்ளது.

த.சரத்குமார் (வயது 18),தா.கலா(வயது 38),சு.சுஜீவன்(வயது 29) முச்சக்கரவண்டிச் சாரதி மூவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

இவர்கள் அனைவரும் சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக சரத்குமார், சுஜீவன் ஆகிய இருவரும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ந-24)

## ஒருங்கிணைப்புக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பானம் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று திங்கட்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெறும்.(ந-6)

## கிழக்கிலும்...

முழுமையான தெளிவுப்படுத்தல் ஒன்று வெளியாகியுள்ளது என்றார்.

மேலும் கிழக்கிலும் எமது கட்சி ஆட்சியமைக்க கூடிய சாத்தியக்கூறுகள் நிறைய உண்டு எனவும், ஜனநாயகத்தை பலப்படுத்தி அபிவிருத்தி பணிகளை முன்கொண்டு செல்வதற்கு இந்த பெறுபேறுகள் மேலும் உதவும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இதேவேளை இந்த முறை மாகாண சபைத் தேர்தல்களில் அரசாங்கம் பெற்ற வெற்றி இலங்கைக்கு எதிராக விரல் நீட்டும் சர்வதேச தரப்பினருக்கு வழங்கப்பட்ட பதிலாக இருக்கும் என்று இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார். (ந-11)

## கூட்டமைப்பு...

செயலாளர் மாவை சேனாதிராசாவும் கையெழுத்திட்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை பகல் தொலைநகல் மூலம் மாகாண ஆளுநர் மொஹான் விஜே விக்கிரமவிற்கு அனுப்பி வைத்தனர்.

அக்கடிதத்துடன் தேர்தல் முடிபு தொடர்பாக இலங்கை தமிழரசுக் கட்சி விடுத்த பத்திரிகை அறிக்கை ஒன்றையும் ஆளுநருக்கு அவர்கள் தொலைநகல் மூலம் அனுப்பி வைத்தனர். (ந-11)

## கோவில்...

இருக்கலாம் எ‹‹த் தெரிவிக்கப்படுகிறது.

எலும்புக் கூ‹‹ மீட்கப்பட்ட கிணற்றுப் பகுதியில் நீளமான ‹‹ நிற காற்சட்டையும் தொப்பி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட எலும்புக் கூடுகள் அனைத்தும் நேற்று மாலை 5.30 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு உடற் கூற்றுப் பரிசோதனைக்காக கொண்டுவரப்பட்டுள்ளன.

மேற்படி சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-11)

## வலுவான...

அடுத்த கட்ட நகர்வு குறித்து எமது பிரதிநிதிகளுடன் கூட்டுச் சேர்ந்து கிழக்கில் ஆட்சியமைக்க வலுவாக உள்ள தரப்பிடமும் தொடர்ந்து பேசி ஒரு முடிபு எட்டப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

மக்களால் எமக்குத் தரப்பட்டுள்ள ஆணையை நிறைவேற்றவேண்டியது எமது கடமை. இந்த தேர்தல் வெற்றியை அரசாங்கம் களவாட நாம் அனுமதிக்க மாட்டோம். அரசாங்கத் தரப்பு இப்போது பெற்றுள்ள சாதாரண வெற்றியைக் கொண்டு அவர்கள் ஆட்சியமைக்க அனுமதிக்க முடியாது.

மேலும் கிழக்கு மாகாண ஆளுநர் -ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை மாகாண ஆட்சியை அமைக்க அழைத்தால் அதனை நாம் சட்டரீதியாகத் தடுப்போம்.

கிழக்கு மாகாண தேர்தலை நடத்திய முறை மூலம் எமக்கு கிடைக்கவேண்டிய வெற்றியை அரசாங்கம் சூறையாடியுள்ளது.

இந்தத் தேர்தலில் அரசாங்கத்தை எதிர்த்த கட்சிகள் மூன்றும் வெற்றிபெற்றுள்ளன.

மூன்று கட்சிகளினதும் மொத்த ஆசன எண்ணிக்கை 22.

ஆனால், அரசாங்கம் மற்றும் அதனோடு இணைந்து செயற்படக் கூடிய இன்னுமொரு கட்சி ஆகிய இரண்டினதும் ஆசன எண்ணிக்கை 15.

எனவே ஐ.ம.சு.மு. மாகாண ஆட்சியை அமைப்பதை நாம் அனுமதிக்கப் போவதில்லை.

கிழக்கு மாகாண தேர்தல் முடிபுகள் வெளியான பின்னர் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் எமது கட்சிப் பொதுச் செயலாளர் மாகாண ஆளுநருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன 22 ஆசனங்களுடன் வெற்றி பெற்றுள்ளன.

எனவே கிழக்கு மாகாண ஆட்சியை அமைக்கத் தேவையான பெரும்பான்மை பலம் எமக்கு உள்ளது.

ஆகவே அத்தகைய ஆட்சியமைப்பதற்கும் அதற்கேதுவாக மாகாண முதலமைச்சரை நியமிக்கவும் எமக்கு சந்தர்ப்பம் ஒன்றை வழங்கவும் என்று நாம் வேண்டுகோள் விடுத்துள்ளோம் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ந-11)

## இளம் குடும்பஸ்தர்...

அவரை அழைத்துக் கொண்டு வெளியில் சென்றுள்ளனர்.

வீட்டிலிருந்து வெளியே சென்ற சிறிது நேரத்தில் திருநெல்வேலி சிவன் அம்மன் கோயில் பகுதியில் வாள், கத்திகளுடன் மறைந்திருந்த சுமார் 15 பேர் கொண்ட கும்பல் ஒன்று இவர்கள் மீது தாக்குதல் நடத்தியது.

இதன்போது பிரபா தலையில் பலத்த வெட்டுக் காயங்களுக்கு இலக்காகி ஸ்தலத்திலேயே பலியானார்.

இச்சம்பவத்தை அடுத்து தகவலறிந்த கோப்பாய் பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றதுடன் அப்பகுதியைச் சுற்றி பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதேவேளை சம்பவ இடத்திற்கு சென்ற யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற நீதிவான் சடலத்தை பார்வையிட்டதுடன் மரண விசாரணைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சடலத்தை ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

இதனையடுத்து சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

வெட்டுக் காயங்களுக்கு இலக்காகிய இருவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இப் படுகொலைச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை நல்லூர் கோயில் வீதிப் பகுதியிலும் வாள்வெட்டுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த ரூபன் (வயது 30) என்பவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-2,4,6,8,11)



படுகொலை செய்யப்பட்ட நபர்....

படங்கள்: அலுவலகச் செய்தியாளர்


## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், வண்ணை பெருமாள் கோவிலடியில் 3 படுக்கையறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0776067559, (இ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையத்தள கற்கைநெறிகள் மட்டுப்படுத்தப்பட்ட அனுமதி

♦ Professional Web Designing (40 hours )
♦ Professional Web Development (120 hours )
♦ Web-Based System Development

உங்களை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்லும் கற்கைநெறி ஒன்றினைக் கற்றுக் கொள்ளுங்கள். இணையத் துறையில் முன்னணி நிறுவனத்துடன் இன்றே இணையுங்கள். எமது கற்கை நெறி உங்களை ஒரு சிறந்த இணையத்தள வடிவமைப்பாளர் ஆக்குவதுடன் நேர்த்தியான வழிமுறைகளில் இணையம் மூலம் பணம் ஈட்டுவதற்கும் வழிகாட்டுகின்றது.

webster networks
MAKING DREAMS REALITY
Webstar Info Systems (Pvt) Ltd

இல 2/4, யாழ்–மானிப்பாய் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
[வைத்தீஸ்வரா கல்லூரிக்கு அருகில்]

021 222 0261, 0779 471 771 www.websternetworks.lk

## பதவி வெற்றிடம்

யாழ்.நகரில் இயங்கி வரும் பிரபல Food City க்கு காசாளர், விற்பனையாளர் (பெண்கள்) கணனி தகைமையுடையவர்கள் யாழ்.நகரப்பகுதிக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. தொடர்புக்கு :- 0773960311 (சி-1012)

# மகிந்தவின் கோரி...

புனித சின்னங்களை மேலும் ஒருவாரத்திற்கு இலங்கையில் வைத்திருப்பதற்கு அனுமதிக்கவேண்டும், அதிகளவு இடங்களில் அதனை வழிபாட்டுக்கு வைக்க அனுமதிக்க வேண்டும், அலரி மாளிகையில் வழிபாட்டுக்காகவைக்க அனுமதிக்க வேண்டும் ஆகியனவே அந்த மூன்று கோரிக்கைகளாகும்.

இந்தியத்தூதுவர் அசோக் கே.காந்தா, இதுபற்றி புதுடில்லிக்கு அறிவித்திருந்தார். அதற்கு புதுடில்லி உடனடியாகவே பதில் அனுப்பியுள்ளது.

அதன்படி முதல் இரு கோரிக்கைகளுக்கும் எதிர்ப்பு ஏதுமில்லை என்றும், அலரிமாளிகையில் புனித சின்னத்தை வழிபாட்டுக்கு வைக்கும் கோரிக்கையை ஏற்க முடியாது என்றும் புதுடில்லி அறிவித்துள்ளது.

அலரிமாளிகை ஒரு வழிபாட்டு இடம் இல்லை என்றும், அது ஜனாதிபதி அல்லது பிரதமரின் வசிப்பிடமாக இருப்பதாலேயே அங்கு புனித சின்னங்களை வைக்க அனுமதிக்க முடியாது என்று இந்தியா கூறியதாகவும் இந்தியத்தூதரக வட்டாரங்கள் கூறியுள்ளன.

எனினும் இந்திய அரசின் இந்த முடிபில் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலையீடு இருப்பதாக அரசாங்க வட்டாரங்கள் குற்றம்சாட்டியுள்ளன.

அண்மைய தமிழ்நாட்டு நிலைவரங்களினால் பாதிக்கப்பட்டுள்ள இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளுக்கு இது மற்றொரு அடியாக விழுந்துள்ளது. (ந-11)

# மூன்-மகிந்த...

என எதிர்பார்க்கப்படுகின்றது. ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தின் 67ஆம் அமர்வுகளில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 26ஆம் திகதி உரையாற்றுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் பான் கீ மூன் மற்றும் பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ந-11)

நீங்களும் Web Designer ஆகலாம்!-பலநூறு தளங்களை வடிவமைத்து,

இணையத்துறையில் அன்றும் இன்றும் என்றும் தனக்கென தனியிடம் பிடித்த Speed IT net நிறுவனத்தில் Computer Programming, Web development, Internet Security, Networking, E-commerce துறைகளில் பலவருடம் தொழில்முறை அனுபவம் வாய்ந்த, பல்வேறு கணினிச்சஞ்சிகைகளில் பணியாற்றிய

**த.தவரூபன்** அவர்களின்

பயிற்சிப்பாசறையில் இணைந்துகொள்ள ஒரு சந்தர்ப்பம்!

கிழமை நாட்களில் மாலை 4.30 தொடக்கம் மாலை 6.30 மணி வரையும்
சனி ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் இரு வேளைகளிலும் நடைபெறும்



Dial @ 0777 563213 / 021 2228358
Visit to our Office or Register in http://course.speedit.lk

SPEED IT NET
"The Quick way to Online"
www.speeditnet.com
72/28 Panikkar Lane Palaly Road, Thirunelvely Jaffna. Telephone: 021 222 8358 / 0777 563213

**Advanced Diploma in Web Engineering**
Course Duration: 6 Months (120hrs), Fee 30,000/-
☑Internet Applications, ☑HTML ☑CSS ☑Javascript ☑Jscript☑Ajax☑XML
☑Dreamviewer/Frontpage
☑Embedding with Video,Audio,Animations ☑Script ,Widget Implementation
☑Introduction to Adobe Photoshop, Gif Animator,Flash
☑FTP management,Domain ,Hosting Concept and Management
☑PHP ☑ My SQL ☑PHPMyAdmin ☑Web server Installation
☑Open Source Web Application Installation and Management
☑CMS (Joomla,Wordpress,Drupal) And LMS Systems [Moodle....]
☑Hosting Control panel management(Cpanel/Plesk)
☑Search Engine Optimization Techniques(SEO)
☑Social Media Marketingn ☑Internet Revenue Systems(Adsense..)
☑Ecommerce & Related Tools
☑Internet Security, Site Malware Removal, Black list Removal
☑Web Broadcasting, Webcasting,
☑Web on Mobiles,Introduction to Mobile Applications
☑Introduction to E-Government,Internet Laws, Ethics, Polices, Crimes
☑Site Project

**Diploma in Web Desining(2 months 20 Hrs 6000/-)- Sylabus Different**

9-9-20-12 மு.ப 10 மணிக்கும்
10-9-2012 பி.ப 4.30 மணிக்கும் புதிய பிரிவுகள் ஆரம்பம்.
முன்பதிவின்றி மாணவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

பெற்றோர்கள், மாணவர்களுக்கு . . . .

ACCA — ALP STUDENT TUITION GOLD 1/4/2012 - 31/3/2013

உயர் தர பரிட்சைக்கு பின்னரான வாழ்க்கை வழிகாட்டி கருத்தரங்கு 2012

**ACCA[Association of Chartered Certified Accountants (UK)]**

நிறுவனம் தனது அங்கீகரிக்கப்பட்ட வடக்கின் ஒரேயொரு கல்வி வழங்குனரான K-AIMS உடன் இணைந்து நடாத்தும் உயர்தர பரிட்சைக்கு பின்னரான வாழ்க்கை வழிகாட்டி கருத்தரங்கு 2012

பிரதம விருந்தினர் : **T. VELNAMBY** அவர்கள்
[பீடாதிபதி - முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகபீடம் யாழ் பல்கலைகழகம்]

திகதி : செப்டம்பர் மாதம் 12 ம் திகதி புதன்கிழமை

நேரம் : காலை 10 .30 மணிக்கு

இடம் : யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம்

இலங்கையை பொறுத்தவரையில் பல்கலைக்கழக தெரிவு என்பது மட்டுப்படுத்தப்பட்டதுடன் இன்றைய நவீன உலகில் தொழில் வாய்ப்பை பெறுவதற்கு பட்டப்படிப்பு மாத்திரமல்லாது , தொழில் சார் கல்வியும் [Professional Qualification] இன்றிஅமையாத ஒன்றாக அமைந்துள்ளது. இது சம்பந்தமான விடயங்கள் பேராசிரியர் வேல்நம்பி அவர்களாலும் ACCA பிரதிநிதிகளினாலும் கலந்துரையாடப்படவுள்ளது. அத்தருணம் உயர்தர மாணவர்களின் பங்களிப்பு அவர்களின் எதிர்கால வாழ்க்கையை திட்டமிட உதவிபுரியும். இந்நிகழ்விற்கு மாணவர்கள், ஆசிரியர்கள், மற்றும் பெற்றோர்களை அழைக்கின்றோம்.

நன்றி

K-AIMS
We Make You Progress Everyday..

NO : 3 , 2/1 , Sirambiyadi Lane
Jaffna
TP : 0772 555 814
E-Mail : kuma[illegible]@kaims.com

## யாழ் நகரில்

உயர்தர பரீட்சைக்கு பின்னரான வாழ்க்கை வழிகாட்டி

## இலவச கருத்தரங்கு

(யாருக்கு: உயர்தர மாணவர்களுக்கும் பெற்றோருக்கும்)

இடம்: யாழ் வீரசிங்கம் மண்டபம்
காலம்: 12-09-2012
நேரம்: 30நிமிட கற்கைநெறி அறிமுகம்
மு.ப.10.30 முதல் பி.ப 5.00 வரை நடைபெறும்

ACCA + UK Degree
Association of Chartered Certified Accountants-UK
BSc(Hons) in Applied Accounting (Oxford Brookes University) UK

@ K-AIMS
We Make You Progress Everyday..
ACCA — ALP STUDENT TUITION GOLD 1/4/2012-31/3/2013

077 2 555 814

ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்
No. 35-1/1, Upatissa Road, Colombo-4

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org